இரண்டாம் பதிப்பு

உதயன்

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

விலை - 20
பக்கங்கள்: 28

சுடர் 32 | கதிர் 177 | வள்ளுவர் ஆண்டு 2048 | வைகாசி 08 திங்கட்கிழமை 22.05.2017

உணவு ஒறுப்பில் ஞானசார தேரர்

கைதிலிருந்து தப்புவதற்கா?

கொழும்பு, மே 22
பொதுபலசேனா அமைப்பின் பொதுச் செயலாளர் கலகொட அத்தே ஞானா சார தேரர் நேற்று மாலை முதல் உணவு ஒறுப்புப் போராட்டத்தை முன்னெடுத் துள்ளார் என்று தெரிவிக்கப்பட்டது. கண்டி மல்வத்து விகாரையில் அவர் இந்தப் போராட்டத்தை முன்னெடுத் துள்ளார். அவருடன் மேலும் >> 24

பளை துப்பாக்கிச் சூடு:

முக்கியமான துப்புக்கள் உள்ளதால் தாக்குதல்தாரிகள் விரைவில் கைது

வடக்கு டி.ஐ.ஜி. சுமித் எதிரிசிங்க தெரிவிப்பு

கொழும்பு, மே 22
"பளை கச்சார் வெளியில் பொலிஸ் வாகனத் தின் மீது துப்பாக்கிச் சூடு நடத்தப்பட்டமை தொடர்பாக முக்கியமான பல துப்புக்கள் கிடைத்துள்ளன. இதன் மூலம் சம்பந்தப்பட்டவர் களை விரைவில் கைது செய்ய முடியும்" இந்தத் தகவலை வடக்கு மாகாணத் தில் பதில் கடமை யாற்றும் மூத்த பிரதிப் பொலிஸ்மா அதிபர் சுமித் எதிரி சிங்க வெளியிட் டார். >> 25

முச்சந்தி முரளி

காவி உடை காவாலி உடையாய் மாறக் கூடாது பாருங்கோ...!

தமிழ் - முஸ்லிம் ஒற்றுமையின் தேவை தெளிவாக உணரப்பட்டுள்ளது

மட்டக்களப்பில் நேற்று ஹக்கீம் தெரிவிப்பு

மட்டக்களப்பு, மே 22
வடக்கு - கிழக்கில் வாழும், தமிழ் முஸ் லிம் சமூகங்கள், தமிழ் பேசும் சமூகங்கள் என்ற அடிப்படையில் அரசியல் ரீதி யாக ஒன்று சேர்ந்து பயணிக்க வேண்டிய அவசியம் மிகத் தெளிவாக உணரப்பட்டுள்ளது" இவ்வாறு சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸின் தலைவரும், அமைச்சருமான ரவூப் ஹக்கீம் தெரிவித்தார்.
மட்டக்களப்பில் நேற்றுக்காலை நடைபெற்ற நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றிய போதே அவர் மேற்கண்டவாறு கூறி னார்.
அண்மைக்காலமாகப் பொது பல சேனா உள்ளிட்ட >> 25

அரச வைத்தியசாலைகளில் இன்று ஓ.பி.டி. இயங்காது

மருத்துவர்கள் பணிப்புறக்கணிப்பால்

யாழ்., மே 22
வடக்கிலுள்ள வைத்தியசாலைகளில் இன்று திங்கட்கிழமை முழுவதும் வெளி நோயாளர் பிரிவுகள் இயங்கா. நோயாளர்கள் அலைக்கழிவதைத் தவிர்த்துக்கொள்ளு மாறு வைத்திய சாலைத் தரப் புக்கள் >> 25

புதிய கூட்டு அரசை உருவாக்க ஐ.தே.க. இரகசிய நடவடிக்கை

யாழ்ப்பாணம், மே 22
புதிய அரசமைப்பை மூன்றிலிரண்டு பெரும்பான்மையுடன் நிறைவேற்றிக் கொள்வதற்காக ஐக்கிய தேசியக் கட்சி புதிய கூட்டு அரசை உருவாக்கும் இரக சிய நடவடிக்கைகளில் ஈடுபட்டிருப்ப தாக அரசின் தகவலறிந்த வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.
நாடாளுமன்றத்தில் அங்கம் வகிக்கும் உறுப்பினர்களை பரிமாற்றம் செய்து கொள்வதன் மூலம் இதைச் செய்து கொள்ள ஐக்கிய தேசியக் கட்சி >> 25

மைத்திரி - ரணில் மந்திராலோசனை

ஐ.தே.கவினரும் நேற்றிரவு பேச்சு

கொழும்பு, மே 22
அரச தலைவர் மைத்திரிபால சிறிசேனவும் தலைமை அமைச் சர் ரணில் விக்கிரமசிங்கவும் நேற்று முன்னிரவு திடீர்ச் சந்திப்பில் ஈடுபட்டனர். அந்தச் சந்திப்பு நிறைவடைந்ததும், நேற்றிரவு 9 மணி >> 24

காணாமற்போனோர் விவகாரம்

மைத்திரியின் கருத்தால் உறவுகள் பெரும் கவலை

யாழ். மே 22
"காணாமல் ஆக் கப்படவர்கள் எங்கு தடுத்து வைக்கப்பட் டிருக்கின்றனர் என எமக்குத் தெரிந்தால், அங்கு சென்று நாங்களே போராடி அவர்களைக் கூட்டிவரு வோம். அதனைவிடுத்து உறவுகள் எங்கு தடுத்து வைக்கப்பட் டுள்ளனர் என்று தெரிந்தால் கூறுங் கள் கண்டுபிடிக்க நடவடிக்கை எடுக் கின்றேன் என மைத்திரி கூறுவது எமக்கு கவலைய ளிக்கின்றது" இவ்வாறு வடக்கில் வலிந்து காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவுகள் தெரிவித்த னர். >> 25

குருநாகல் பள்ளிவாசல் மீது பெற்றோல் குண்டுத் தாக்குதல்

நேற்று அதிகாலை சம்பவம்

கொழும்பு, மே 22
குருநாகல்-கண்டி முதன்மை வீதியில் அமைந்துள்ள மல்ல வப்பிட்டிய ஜும்ஆப் பள்ளிவா சல் மீது நேற்று அதிகாலை 3.30 மணியளவில் பெற்றோல் குண்டுத் தாக்குதல் நடத்தப் பட்டதாகப் பொலிஸார் தெரி வித்தனர்.
3 மோட்டார் சைக்கிளில் வந்த 6 பேர் அடங்கிய கும்பலே இந் தத் தாக்குதலை >> 25

தாக்குதலுக்கு அமெரிக்கா கண்டனம்

கொழும்பு, மே 22
குருநாகல் - மல்லவப்பிட்டியவில் முஸ் லிம்களின் பள்ளிவாசல் மீது நேற்று அதிகாலையில் இனந்தெரியாத நபர்க ளால் பெற்றோல் குண்டுத் தாக்குதல் நடத்தப்பட்டமையை அமெ >> 25

ஞானசாரர் மீது கைவைத்தால் பௌத்தப் புரட்சி வெடிக்கும்

சிங்கள ராவய எச்சரிக்கை மக்களை ஒன்றிணையவும் அழைப்பு

யாழ்ப்பாணம், மே 22
"பொதுபல சேனா அமைப்பின் பொதுச் செயலாளர் கலகொட அத்தேஞானசார தேரரைக்கைது செய்ய முயற்சிக்கப்படுகின்றது. அதேபோல் அரசின் அமைச்சர் ஒருவரின் மூலமாக ஞானசார தேரரைக் கொலை செய்யவும் முயற்சிக்கப்பட்டுள்ளது. ஞான சார தேரரைக்கைது செய்தாலோ அல்லது அவர் மீது சிறிய தாக்கு தலேனும் நடத்தினாலோ நாட் டில் சிங்கள பௌத்தப் புரட்சி வெடிக்கும்"
இவ்வாறு சிங்கள ராவய அமைப்பின் செயலாளர் >> 25

வடக்கு அமைச்சர்கள் மீதான

மோசடி விசாரணை அறிக்கையை உடனே பகிரங்கப்படுத்துங்கள்

முதலமைச்சர் விக்கியிடம் சத்தியலிங்கம் கோரிக்கை

யாழ்ப்பாணம், மே 22
வடக்கு மாகாண அமைச்சர்கள் மீதான மோசடி, ஊழல் குற்றச்சாட் டுக்கள் பற்றிய அறிக்கையை முத லமைச்சர், மாகாண சபைக்கும் மக்களுக்கும் பகிரங்கப்படுத்த வேண்டும்.
இவ்வாறு வடக்கு மாகாணச் சுகாதார அமைச்சர் மருத்துவர் ப.சத்தியலிங்கம் தெரிவித்தார்.
வடக்கு மாகாண அமைச்சர்க ளில் நால்வர் மீது முன்வைக்கப் பட்ட குற்றச்சாட்டுக்கள் தொடர் பில் விசாரணை இடம்பெற்று அதன் அறிக்கை முதலமைச்சர் சி.வி. விக்னேஸ்வரனிடம் >> 25

பயங்கரவாதத் தடை குறித்த சட்டம் எதுவுமே வேண்டாம்

இந்த நிலைப்பாட்டை தமிழ் பேசும் கட்சிகளை எடுக்குமாறு வலியுறுத்து

யாழ்ப்பாணம், மே 22
பயங்கரவாதத் தடைச் சட் டமும் வேண்டாம். அதற்கு மாற்றீடாக இன்னொரு சட்டமும் கொண்டுவர வேண்டாம். இந்த நிலைப் பாட்டைத் தமிழ்க் கட்சிகள், தமிழ் பேசும் கட்சிகள் எடுக்க வேண்டும் என்று வலியுறுத்தப்பட்டுள்ளது.
யாழ்ப்பாணத்தில், ரெலோ அமைப்பின் ஏற்பாட்டில், தமிழ்க் கட்சிகளை உள்ள டக்கிய கலந்துரையாடல் நேற்றுக் காலை நடத்தப் பட்டது. இலங்கைத் தமிழ் அரசுக் கட்சி, ஈ.பி.ஆர்.எல். எவ்., புளொட் உள்ளிட்ட கட்சிகளும் இதில் கலந்து கொண்டிருந்தன. >> 25

வடக்கு அமைச்சர்களுக்கு எதிரான

மோசடி விசாரணை அறிக்கையின் பிரதியைக் கோரவுள்ளார் தவராசா

யாழ்ப்பாணம், மே 22
வடக்கு மாகாண அமைச்சர்கள் மீது சுமத்தப்பட்ட மோசடி, ஊழல் குற்றச்சாட்டுக்கள் தொடர்பாக விசாரணை நடத்திய குழு முன் வைத்த அறிக்கையின் பிரதி யைக் கோரும், வாய்மொழி மூல மான கேள்வியை மாகாண சபை யின் அடுத்த அமர்வில் எடுத்துக் கொள்வதற்கான எழுத்து மூல அனுமதி கேட்டு எதிர்க்கட்சித் தலைவர் சி.தவராசா விண்ணப் பித்துள்ளார் என்று தெரியவரு கின்றது.
வடக்கு மாகாண சபையின் அமைச்சர்கள் ஊழல், மோசடி யில் ஈடுபட்டனர் என்று அவர்க ளது சொந்தக் கட்சி உறுப்பி னர்களே மாகாண சபையில் குற்றஞ்சாட்டி வந்தனர். அதிக ரித்து வந்த குற்றச்சாட்டுக்களை அடுத்து அவை தொடர்பில் விசா ரிப்பதற்கு ஒரு குழுவை முதல் மைச்சர் நியமித்தார். >> 25

ஜெனிவா சுகாதார மாநாட்டில் வடக்கிலிருந்தும் இரண்டு பேர்

அமைச்சர் ராஜித அங்கு சிறப்புரை

கொழும்பு, மே 22
ஜெனிவாவில் இன்று இடம்பெறவுள்ள பன்னாட்டுச் சுகாதார மாநாட்டில் கொழும்பு அரசினதும், வடக்கினதும் சுகாதார அமைச்சர்கள் மற்றும் யாழ்ப் பாணம் போதனா வைத்தியசாலைப் பணிப்பாளர் உள்ளிட்ட குழுவினர் பங்கேற்கவுள்ளனர். >> 25

அர்ப்பணிப்புடன் மருத்துவர்கள் செயற்படவேண்டும்

கூறுகிறார் மைத்திரி

கொழும்பு, மே 22
இலவச சுகாதார சேவை மற்றும் இலவசக் கல்வியின் >> 25

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வடக்கு வைத்தியசாலைகளின் நோயாளர் வண்டிகள் சீரமைப்பு

மலேசியத் தொண்டு நிறுவனம் நிதி உதவி

வவுனியா, மே 22
வடக்கு மாகாண சுகாதாரத் திணைக்களத்தின் கீழ் உள்ள வைத்தியசாலைகளின் நோயாளர் காவு வண்டிகளை சீரமைப்பதற்கு 150 மில்லியன் ரூபா நிதி உதவியை மலேசிய தொண்டு நிறுவனம் வழங்குகின்றது என்று வடக்கு மாகாண சுகாதார அமைச்சர் ப.சத்தியலிங்கம் தெரிவித்தார்.
அவர் மேலும் தெரிவித்ததாவது:
வடக்கு மாகாண சுகாதார அமைச்சின் கீழ் இயங்கும் வைத்தியசாலைகளின் பயன்பாட்டில் சுமார் 100 நோயாளர் காவுவண்டிகள் உள்ளன. அவற்றில் ஜப்பான் அரசால் அண்மையில் அன்பளிப்புச் செய்யப்பட்டவை மட்டும் அடிப்படை வசதிகளுடன் உள்ளன. ஏனையவை சீரமைக்கப்பட வேண்டும். அவற்றைச் சீரமைப்பதற்கு மலேசியத் தொண்டு நிறுவனம் 150 மில்லியன் ரூபா நிதி உதவியை வழங்குகின்றது. அந்த நிதியை முறைப்படி பெறுவதற்கான அனுமதியைப் பெறும் முன்மொழிவு முன்வைக்கப்பட்டுள்ளது. அதற்கு கொழும்பு அரசின் அனுமதி கிடைத்ததும் நிதி கிடைத்துவிடும் - என்றார். (வ-101)

வெள்ளவத்தை கட்டடச் சரிவு:

மண்டபத்தின் உரிமையாளர் நேற்றுப் பொலிஸில் சரண்

கொழும்பு, மே 22
"கொழும்பு வெள்ளவத்தை பகுதியில் இடம்பெற்ற கட்டடச் சரிவு தொடர்பில் தேடப்பட்டுவந்த மண்டபத்தின் உரிமையாளர் நேற்றுக் காலை பொலிஸ் நிலையத்தில் சரணடைந்தார். அவரிடம் விசாரணைகள் இடம்பெறுகின்றன" என்று பொலிஸார் தெரிவித்தனர்.
வெள்ளவத்தை, சார்லி மன்ட் வீதியில் சவோய் திரையரங்கின் பின்னால் அமைந்துள்ள 'எக்சலன்ஸி' என்ற பெயரைக் கொண்ட வரவேற்பு மண்டபத்தின் பின்னால் உள்ள 5 மாடிக் கட்டடம் கடந்த வியாழக் கிழமை இடிந்து விழுந்தது. இந்தச் சம்பவத்தில் இருவர் உயிரிழந்ததுடன் 21 பேர் காயமடைந்தனர்.
சம்பவத்தின் பின்னர் குறித்த கட்டடத்தின் உரிமையாளர் தலைமறைவாகி இருந்தார். நேற்றுக் காலை அவர் பொலிஸில் சரணடைந்தார். அவர் எதிர்வரும் 26ஆம் திகதி வரை கொழும்பு நீதிவான் மன்றால் விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளார் என்று பொலிஸார் மேலும் தெரிவித்தனர். (வ-10)

காணியைப் பெற்றவர்களே வடக்கில் போராடுகிறார்கள்

அரச தலைவர் மைத்திரி தெரிவிப்பு

கொழும்பு, மே 22
"வடக்கு மக்களுக்கு காணிகளையும் வீடுகளையும் வழங்கியுள்ளோம். அவற்றைப் பெற்றுக் கொண்டவர்கள் வேறு இடங்களில் காணிகள் கேட்டுப் போராட்டத்தில் ஈடுபட்டுள்ளனர். இந்தப் போராட்டத்துக்கு மக்கள் காரணமல்ல. சில கடும் போக்காளர்கள் மக்களைத் தூண்டிவிட்டுப் போராட்டங்களை நடத்த வைக்கின்றனர். கிழக்கிலுள்ள மக்கள் காணி கேட்டுப் போராட்டம் நடத்தவில்லையே!"
இவ்வாறு அரச தலைவர் மைத்திரிபால சிறிசேன தெரிவித்தார். திருகோணமலை சம்பூர் மகா வித்தியாலத்தில் புதிதாக அமைக்கப்பட்ட கலாசார மண்டபத்தை நேற்றுமுன்தினம் திறந்து வைத்து உரையாற்றுகையில் அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார். அவர் தனது உரையில் மேலும் தெரிவித்ததாவது:
வடக்கு - கிழக்கில் வேலைதேடும் பட்டதாரிகள் போராட்டத்தில் ஈடுபட்டுள்ளனர். திவிநெகும ஊடாக அவர்களுக்கு வேலைவாய்ப்பை வழங்க அமைச்சரவையில் தீர்மானம் எடுத்துள்ள போதும் அதனை நடைமுறைப்படுத்துவதற்குக் காலதாமதமாகிறது. வேலையில்லாப் பிரச்சினை என்பது வடக்கு - கிழக்குக்கு மாத்திரமன்றி ஏனைய இடங்களிலும் உள்ள பிரச்சினை.

தரத்தைத் தேடுகிறேன்

வேலைக்கு ஏற்ப தகைமை உள்ளவர்களைத் தேர்ந்தெடுப்பதில்தான் அரசு சிக்கலை எதிர்கொண்டுள்ளது. அருகிலுள்ள பாடசாலைக்குச் சென்றபோது தமது பாடசாலையில் ஆசிரியர் பற்றாக்குறை உள்ளது என்று அங்குள்ளவர்கள் கூறினர். சம்பூர் மருத்துவமனை ஊழியர்கள் தமக்குச் சொந்தமான வீடில்லை என்று பிரச்சினையைக் கூறினார்கள். உரிய தீர்வுக்குப் பரிந்துரைப்பதாகக் கூறினேன்.
சகல இடங்களிலுமுள்ள பிரச்சினைகளையும் என்னால் நேரில் சென்று தீர்த்து வைக்கமுடியாது.

வடக்கு விகாரைகள்

வடக்கு கிழக்கில் பௌத்த விகாரைகள் நிறுவுவதாகக் குற்றச்சாட்டுக்கள் முன்வைக்கப்படுகின்றன என்றும் இது தொடர்பில் நான் உரிய நடவடிக்கை எடுப்பதில்லை என்றும் குற்றச்சாட்டுக்கள் முன்வைக்கப்படுகின்றன. இந்த விடயத்தில் அந்தந்தப் பிரதேச பௌத்த விகாராதிபதிகள், இந்து குருமார்கள், மௌலவிகள், கிறிஸ்தவ மதத் தலைவர்கள் ஒன்றிணைந்து இத்தகைய பிரச்சினைகளைத் தீர்க்க முன்வரவேண்டும் - என்றார். (வ-4)

யாழ்ப்பாண நகர கடைத் தொகுதியின் கட்டுமானம் நிறைவு

யாழ்ப்பாணம், மே 21
"யாழ்ப்பாண நகரில் அமைக்கப்பட்ட நடைபாதை வியாபாரிகளுக்கான அங்காடிக் கடைகளின் கட்டுமானப் பணிகள் அனைத்தும் நிறைவு பெற்றுள்ளன. அதனை மக்களின் பாவனைக்கு திறந்து வைப்பதற்கான நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன"
இவ்வாறு யாழ்ப்பாண மாநகர ஆணையாளர் பொ.வாகீசன் தெரிவித்தார்.
"யாழ்ப்பாண மாநகர சபையால் நகர மையப் பேருந்து நிலையத்துக்கு அருகில் நடைபாதை வியாபாரிகளுக்கான அங்காடிக் கடைகள் அமைக்கப்பட்டுள்ளன. அவற்றின் கட்டுமானத்துக்கு 13 மில்லியன் ரூபா செலவிடப்பட்டது. அங்காடி கூடங்களை விரைவில் மக்கள் பயன்பாட்டுக்கு திறந்து விடவும் ஏற்ற நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.
முனீஸ்வரன் வீதியில் உள்ள நடைபாதை கடைகள் அகற்றப்பட்டு அந்தக் கடைகளின் உரிமையாளர்களுக்கு முன்னுரிமை அடிப்படையில் இந்த அங்காடி கூடங்கள் வழங்கப்படும். நகரில் ஏற்கனவே நடைபாதை வியாபாரம் மேற்கொள்வதற்கு மாநகராட்சி மன்றம் தடை விதித்தும் உள்ளது" என்று மாநகர ஆணையாளர் பொ.வாகீசன் மேலும் தெரிவித்தார். (வ-17)

பாதுகாப்புச் செயலர், ராணுவத் தளபதிக்கு மனித உரிமைகள் ஆணைக்குழு அழைப்பு

கொழும்பு, மே 22
சேவையில் இருந்த சமயம் அங்கவீனமுற்ற இராணுவத்தினரின் சம்பளங்களையும் ஓய்வூதியங்களையும் வழங்காமல் அவர்களை ஓய்வுபெறச் செய்தமை தொடர்பில் விளக்கமளிப்பதற்காக பாதுகாப்புச் செயலாளரையும் இராணுவத் தளபதியையும் இன்று மனித உரிமைகள் ஆணைக்குழுவில் முன்னிலையாகுமாறு அழைப்பாணை விடுக்கப்பட்டுள்ளது.
இராணுவத்தின் கெமுனு படையணியில் பணிபுரிந்து அங்கவீனமுற்ற கோப்ரல் ஆர்.சி.விமலசேனவுடன் மேலும் சில இராணுவ அதிகாரிகளும் சிப்பாய்களும் 2016ஆம் ஆண்டு செப்டெம்பரில் கூட்டாகத் தாக்கல் செய்த மனுவொன்று தொடர்பான விசாரணைகளுக்காகவே பாதுகாப்புச் செயலாளருக்கும் இராணுவத் தளபதிக்கும் அழைப்பாணை விடுக்கப்பட்டுள்ளதாக மனித உரிமை ஆணைக்குழு வட்டாரங்கள் தெரிவித்தன. (வ)

மாகாண சபை உறுப்பினர்களுக்கு ஒழுக்கக்கோவை

கொழும்பு, மே 22
மாகாண சபைகளினதும், உள்ளூராட்சி சபைகளினதும் தேர்தல்களை நடத்துவதில் இழுபறி நீடிக்கும் நிலையில் மாகாண சபை உறுப்பினர்களுக்கான ஒழுக்கக்கோவையொன்றை உருவாக்க அரசு தீர்மானித்திருப்பதாகத் தெரியவருகின்றது.
வாக்களிக்கும் மக்களின் வேணவாக்களை செவ்வனே நிறைவேற்றுவதற்கும், ஒவ்வொரு உறுப்பினருக்கும் வழங்கப்பட்டிருக்கும் பொறுப்புகளை சரிவரச் செய்வதற்குமான அறிவுறுத்தல்கள் இந்த ஒழுக்கக்கோவையில் கட்டாயமாக்கப்படும் எனவும் தெரியவருகின்றது.
இதேவேளை, நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கான ஒழுக்கக்கோவையொன்று கடந்த வருட இறுதியில் அறிமுகப்படுத்தப்படும் எனச் செய்திகள் வெளியானபோதும் அது இதுவரை நடைபெறவில்லை. நாடாளுமன்ற நிலையியல் சட்டதிட்டங்களில் மாற்றங்கள் செய்யப்படவிருப்பதால் அநேகமாக அடுத்த மாதம் இந்த ஒழுக்கக்கோவை அறிமுகமாகும் என்று நாடாளுமன்ற வட்டாரங்கள் தெரிவித்தன. (வ)

காயங்களுக்கு உள்ளாவோரின் விவரத்தை கோருகிறது கொழும்பு சுகாதார அமைச்சு

வாராந்தம் அறிக்கையாக முன்வைக்குமாறு வைத்தியசாலைகளுக்கு அறிவுறுத்தல்

யாழ்ப்பாணம், மே 22
காயங்களுக்கு உள்ளானவர்களுக்கு சிகிச்சை வழக்கிய பின்னர், அவர்களுக்கு ஏற்பட்ட காயம் தொடர்பான முழுமையான விவரங்கள் அடங்கிய அறிக்கையை முன்வைக்குமாறு அனைத்து வைத்தியசாலைகளுக்கும் சுகாதார மருத்துவ அதிகாரிகள் அலுவலகங்களுக்கும் கொழும்பு சுகாதார அமைச்சு பணித்துள்ளது.
"மனித உடலில் எந்தப் பாகத்தில் காயம் ஏற்பட்டது? காயம் ஏற்பட்டதற்கான காரணம் என்ன? அதற்கான பரிகாரம் என்ன? உள்ளிட்ட விவரங்கள் அடங்கிய அறிக்கை வாராந்தம் முன்வைக்கப்பட வேண்டும்" என்று கொழும்பு சுகாதார அமைச்சின் தொற்றா நோய்ப் பிரிவு அறிவுறுத்தியுள்ளது.
இது தொடர்பாக வடக்கு மாகாண வைத்தியசாலைகளின் பொறுப்பதிகாரிகள் மற்றும் சுகாதார மருத்துவ அதிகாரிகளுக்கான கலந்துரையாடல் கிளிநொச்சி பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் அலுவலகத்தில் நாளை நடைபெறும் என்று கொழும்பு சுகாதார அமைச்சின் தொற்றா நோய்ப் பிரிவினர் அறிவித்துள்ளனர்.
"நாய்கடிக்கு உள்ளாவோர், விபத்துக்கள், தாக்குதல்கள் மற்றும் சாலையில் வீழ்வது போன்ற காரணங்களால் காயங்களுக்குள்ளான அனைவரின் விவரங்களையும் அதற்கான பரிகாரங்களையும் வாராந்தம் அறிக்கையிட வேண்டும்.
நாய்க்கடிக்கு உள்ளாவதால் ஏற்படும் காயங்களுக்கு எடுக்க வேண்டிய நடவடிக்கை என்ன? சைக்கிள் மற்றும் மோட்டார் சைக்கிளில் செல்லும் வேளையில் சில்லு சறுக்கி வீழ்ந்து காயமடையும் பட்சத்தில் சாலையின் நிலைப்பாடு என்ன? அவற்றுக்கு காணவேண்டிய பரிகாரங்கள் எவை? உள்ளிட்ட விடயங்களையும் அறிக்கையில் உள்ளடக்க வேண்டும். வைத்தியசாலைகளில் காயங்களுடன் சிகிச்சை பெற வருவோரிடம் அதற்கான காரணத்தைக் கண்டறிதல் அவசியம்" என்று கொழும்பு சுகாதார அமைச்சின் அறிவுறுத்தலில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (வ-9)

கூட்டு அரசுக்கு அமைச்சர் சுசில் எச்சரிக்கை

சு.கவின் கொள்கையை ஏற்காவிடின் எதிர்க்கட்சிக் குழு உருவாகுமாம்

கொழும்பு, மே 22
"சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் பொருளாதாரக் கொள்கைகளை ஏற்காது போனால் அரசிலிருந்து விலகி நாடாளுமன்றில் எதிர்க்கட்சிக் குழுவாக இயங்குவோம்"
இவ்வாறு அரசுக்கு எச்சரித்துள்ளார் சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் மூத்த உறுப்பினரும் அமைச்சருமான சுசில் பிரேமஜயந்த.
ஊடகவியலாளர்களின் கேள்விகளுக்குப் பதிலளிக்கையிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.
"எமது கருத்துக்களை அரச தலைவருக்கு ஏற்கனவே அறிவித்துள்ளோம். இன்றளவில் நாடு பெரிய பொருளாதாரப் பிரச்சினைகளுக்கு முகம்கொடுத்து வருகின்றமைக்கு, ஐக்கிய தேசியக் கட்சியின் பொருளாதாரம் தொடர்பாக தீர்மானம் எடுக்கும் குழுவின் செயற்பாடுகளே காரணமாகும்.
கூட்டு அரசாகச் செயற்பட வேண்டுமானால், 2தரப்பினரும் ஏற்றுக்கொள்ளக்கூடிய பொருளாதாரத் திட்டங்களையே நடைமுறைப்படுத்தவேண்டும்" என்று அமைச்சர் சுசில் பிரேமஜயந்த தெரிவித்தார். (வ-5)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஞானசாரரைக் கைது செய்ய கூட்டு அரசு அஞ்சுவது ஏன்?

ரணிலிடம் ரிசாத் கேள்வி

கொழும்பு, மே 22

அல்லாஹ்வையும் முஸ்லிம்களையும் தொடர்ச்சியாக மோசமாக கேவலப்படுத்திவரும் ஞானசார தேரரைக் கைது செய்யாது பொலிஸார் நாடகமாடுகின்றனர். அவரை அடக்குவதற்கு அரசு ஏன் அஞ்சுகின்றது?

இவ்வாறு அமைச்சர் ரிசாத் பதியுதீன், தலைமை அமைச்சர் ரணில் விக்கிர மசிங்கவிடம் கேள்வி எழுப்பியுள்ளார்.

இது தொடர்பில் அமைச்சர் தெரிவித்ததாவது:

ஞானசார தேரரின் முஸ்லிம்களுக்கு எதிரான நடவடிக்கைகள் எல்லை மீறி இருப்பதை தலைமை அமைச்சரிடமும் அரச தலைவரிடமும் எடுத்துக் கூறியிருந்தோம். அவரைக் கைது செய்யுமாறு கோரி பொலிஸ் தலைமையகத்திலும் முறைப்பாடு செய்திருதோம்.

இதுவரை ஞானசார தேரருக்கு எதிராக எந்த நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை. ஆனால், அவரை கைதுசெய்வது போன்ற ஒரு திட்டமிட்ட நாடகம்தான் அரங்கேற்றப்பட்டுள்ளது.

சட்டத்தைக் கையிலெடுத்து ஆடும் இந்தத் தேரரை அடக்குவதற்கு அரசு ஏன் அஞ்சுகிறதோ தெரியவில்லை?

சிறுபான்மை மக்களை குறிப்பாக, முஸ்லிம்களை அச்சுறுத்தி எந்தவிதப் பயமுமில்லாமல் அவர் தனது செயற்பாடுகளை முன்னெடுத்து வருகின்றார். நேற்றுக் காலை தர்ஹா டவுன் வீதி வழியாக ஊர்வலம் சென்ற பொதுபல சேனா இயக்கத்துக்கு அளுத்கம பொலிஸார் பாதுகாப்பு வழங்கினர்.

பொலிஸாரின் கபடத்தனம் இந்தச் செயலிலிருந்து நன்கு புரிகின்றது. ஞானசார தேரர் கடந்த வெள்ளிக்கிழமை பொலிஸ் நிலையத்துக்குச் சென்ற போது, அவருக்கு எதிராக முறைப்பாடு இருந்தும், அவரைக் கைது செய்யாமல் விட்டு மறுநாள் சனிக்கிழமை குருநாகல் பகுதியில் அவரைக் கைது செய்ய ஏய்ப்புக்காட்டிப் பொலிஸார் நாடகமாடினர்.

ஞானசார தேரரையும் அவரது இயக்கத்தையும் பாதுகாப்பதையே நோக்கமாகக் கொண்டு பொலிஸார் தமது பணிகளை முன்னெடுக்கின்றனரே தவிர, முஸ்லிம்களின் அச்சத்தை நீக்க எந்த நடவடிக்கையையும் அவர்கள் எடுப்பதாகத் தெரியவில்லை.

புனித ரமழான் அண்மிக்கும் நிலையில் முஸ்லிம்கள் மீதான அடாவடித்தனங்கள் அதிகரித்துக் கொண்டே போகின்றன.

கடந்த வாரம் முஸ்லிம் சமூகத்தின் மீதும் பள்ளிவாசல்கள் மீதும் மோசமான தாக்குதல்கள் மேற்கொள்ளப்பட்டிருக்கின்றன.

நேற்றுமுன்தினம் மாலை மல்லவப்பிட்டியில் பள்ளிவாசலுக்கு பெற்றோல் குண்டுகள் வீசி சேதப்படுத்தியுள்ளனர். அத்துடன், நேற்றுக் காலை எல்பிட்டியில் முஸ்லிம் ஒருவருக்குச் சொந்தமான வியாபாரத்தளமொன்று தீக்கிரையாக்கப்பட்டுள்ளது. - என்றார்.

(வ-5)

மேல் மாகாண சபையில் ஆளும் கட்சியை சேர்ந்த சிலர் தனிக் குழுவாக இயங்க முடிவு

கொழும்பு, மே 22

மேல் மாகாண சபையின் ஆளுங் கட்சி உறுப்பினர்களில் சிலர் சபையில் தனிக்குழுவாக இயங்கத் தீர்மானித்திருக்கின்றனர் எனத் தெரியவருகின்றது.

ஆளுங்கட்சியில் இருந்தபோதும் மகிந்த அணிக்கு மறைமுகமாக ஆதரவு தெரிவிக்கும் சிலரே மாகாண சபையின் எதிர்கால நடவடிக்கைகளின் போது தனிக்குழுவாக இயங்கத் தீர்மானித்துள்ளனர். கடவத்தை சுமித்ரா மண்டபத்தில் அண்மையில் நடந்த கூட்டமொன்றிலேயே அவர்கள் இந்தத் தீர்மானத்தை எடுத்தனர் என்று தெரியவருகின்றது.

"மேல் மாகாண சபையிலுள்ள 104 உறுப்பினர்களில் 59 பேர் ஆளுங் கட்சி உறுப்பினர்கள். அவர்களில் 42 பேர் முன்னாள் அரச தலைவர் மகிந்த ராஜபக்சவுக்கு ஆதரவாக செயற்பட முடிவெடுத்துள்ளனர். சபையின் நிதி ஒதுக்கீட்டின்போது இவர்களுக்கு பாரபட்சம் காட்டப்பட்டதன் காரணமாகவே அவர்கள் இந்த முடிவுக்கு வந்துள்ளனர். இந்தக் குழு மாதம் ஒரு முறை கூடி எதிர்கால நடவடிக்கைகள் பற்றி ஆராயவுள்ளது" என்று மேல் மாகாண சபை வட்டாரங்கள் தெரிவித்தன.

(வ)

தாஜுதீன் படுகொலை வழக்கு அநுரவிடம் வாக்குமூலம் பெற சி.ஐ.டிக்கு நீதிமன்று அனுமதி



கொழும்பு, மே 22

ரக்பி விளையாட்டு வீரர் வசீம் தாஜுதீனின் படுகொலையுடன் தொடர்புடையவர் என்ற குற்றச்சாட்டில் விளக்கமறியலில் இருக்கும் முன்னாள் மூத்த பிரதிப் பொலிஸ் மா அதிபர் அநுர சேனநாயக்கவிடம் வாக்குமூலம் பெறுவதற்கான அனுமதியை குற்றப்புலனாய்வுப் பிரிவினருக்கு கொழும்பு நீதிவான் மன்றம் வழங்கியது.

இந்த வழக்கு கொழும்பு மேலதிக நீதிவான் ஜெயராமன் ட்றொஸ்கி முன்னிலையில் கடந்த வியாழக்கிழமை விசாரணைக்கு வந்தது.

குற்றப் புலனாய்வுப் பிரிவினர் சார்பில் மன்றத்தில் முன்னிலையான பிரதி மன்றாடியார் அதிபதி, "தாஜுதீன் கொலைச் சம்பவம் தொடர்பாக இது வரை மேற்கொள்ளப்பட்ட விசாரணைகளின்படி சில மேலதிக தகவல்கள் அநுர சேனநாயக்கவிடம் பெறப்படவேண்டியுள்ளன. அவரை விசாரணை செய்து வாக்குமூலம் பெறுவதற்கு அனுமதி வழங்கவேண்டும்" என்று கோரினார். அதனை ஏற்று வாக்குமூலம் பெறுவதற்காக மே மாதம் 23, 24, 25, 26ஆம் திகதிகளில் குற்றப் புலனாய்வுப் பிரிவினரை சிறைச்சாலைக்குள் அனுமதிக்குமாறு நீதிவான் உத்தரவிட்டார். வழக்கு விசாரணையை எதிர்வரும் முதலாம் திகதிவரை ஒத்திவைத்த கொழும்பு நீதிவான் மன்று, சந்தேகநபரான அநுர சேனநாயக்கவை அன்றுவரை விளக்க மறியலில் வைக்குமாறும் கட்டளையிட்டது.

(வ)

வித்தியா கொலை வழக்கு விசாரணை யாழ்ப்பாணத்திலேயே நடக்கவேண்டும்

அரச தலைவருக்கு சிறிதரன் எம்.பி. கடிதம்

யாழ்ப்பாணம், மே 22

"புங்குடுதீவு மாணவி சிவலோகநாதன் வித்தியா படுகொலை செய்யப்பட்ட வழக்கை யாழ்ப்பாண மேல் நீதிமன்றிலிருந்து கொழும்புக்கு மாற்றும் முடிவைக் கைவிடவேண்டும். அந்த வழக்கு விசாரணை யாழ்ப்பாணம் மேல் நீதிமன்றிலேயே விசாரிக்கப்பட்டு நீதி நிலைநாட்டப்பட வேண்டும் இவ்வாறு வலியுறுத்தி அரச தலைவருக்கு கடிதம் எழுதியுள்ளார் தமிழ் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறீதரன்.

அவரது கடிதத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:

யாழ்ப்பாணம் புங்குடுதீவு 9ஆம் வட்டாரத்தைச் சேர்ந்த செல்வி சிவலோகநாதன் வித்தியா படுகொலை செய்யப்பட்ட வழக்கை கொழும்புக்கு மாற்றுவது தொடர்பில் எடுக்கப்பட்ட தீர்மானம் தொடர்பில் தங்களின் கவனத்தை ஈர்க்க இந்தக் கடிதத்தை எழுதுகின்றேன்.

மாணவி வித்தியா கொடூரமான முறையில் கொலை செய்யப்பட்டமை பற்றியும், அதனால் சமூகத்தில் எழுந்த உணர்வின் பிரதிபலிப்புக்கள் பற்றியும் தாங்கள் நன்கு அறிவீர்கள். இத்தகைய கொலைகள் ஏற்கனவே பலமுறை இங்கு நடைபெற்று இருக்கின்றது. அத்தகைய கொலைகளின் பின்னணியில் செயற்பட்ட காரணகர்த்தாக்களை எமது மக்கள் தெளிவாக இனம் கண்டும் இருந்தனர். ஆனால் நீதி விசாரணைகள் நேர்மையான முறையில் நடைபெற இடமளிக்கப்படவில்லை என்பதை வரலாற்றின் சம்பவங்கள் தங்களுக்கு நினவூட்டக் கூடும். ஆனால் கூட்டு அரசின் வரவுக்குப் பின்னர் நீதித்துறையின் சுயாதீனம் அதிகரிப்பதாக நம்பப்பட்ட வேளையில் தான் மாணவி வித்தியாவின் கொலை இடம்பெற்றது.

கொலையின் பின்னர் சமூக அமைதி குலைவுக்கான வாய்ப்புக்கள் தென்பட்டன. எப்போதும் போலவே நீதி இருட்டடிப்புச் செய்யப்படும் என்றே மக்கள் நம்பினர். ஆனால் 2016ஆம் ஆண்டு மே 26ஆம் திகதியன்று நீங்கள் யாழ்ப்பாணத்துக்கு வந்து வித்தியாவின் தாயாருக்கு வழங்கிய உறுதிமொழிகள் மாணவியின் குடும்பத்துக்கும் எமது சமூகத்துக்கும் நம்பிக்கை அளித்தன. ஊர்காவற்றுறை நீதிமன்றத்தில் நடைபெற்று வருகின்ற வித்தியா கொலை வழக்கை யாழ்ப்பாணம் மேல் நீதிமன்றுக்கு பாரப்படுத்தப்படவுள்ள நிலையில் அதனைக் கொழும்புக்கு மாற்றுவதற்கு முயற்சிக்கப்படுகின்றதாக வெளிவரும் தகவல்கள் அதிர்ச்சியளிக்கின்றன.

யாழ்ப்பாண நீதி நியாயாதிக்க எல்லைக்குள் இந்த வழக்கு நடத்தப்படுவதையே வித்தியா குடும்பத்தினரும் நீதி மீதான ஆர்வலர்களும் விரும்புகின்றனர். யாழ்ப்பாணத்தில் நீதிமன்ற மொழியாக தமிழ் பயன்படுத்தப்படுகிறது, நம்பத்தகுந்த நீதித்துறையினர் யாழ்ப்பாணத்தில் பணியில் உள்ளனர், கொழும்புக்கு மாற்றுவதால் எழுகின்ற செலவீனங்களை தாங்கும் சக்தி வித்தியா குடும்பத்துக்கு இல்லை போன்ற காரணங்களால் மாணவி படுகொலை வழக்கை யாழ்ப்பாணத்தில் 'ட்ரயல் அட் பார்' முறையிலான நீதிமன்றத்திலேயே நடைபெறவேண்டும் என்பதே மக்களது பெருவிருப்பாகும்.

வரலாற்றில் பல தடவைகள் இத்தகைய வழக்குகள் தென்னிலங்கைக்கு மாற்றப்பட்டு நீதிவழங்குவது தடுக்கப்பட்டும் தாமதப்படுத்தப்பட்டும் வந்தமை எமது மக்களின் மனங்களில் மாறாத விடயமாக பதிவாகியுள்ளது. அதனால் இந்த வழக்கை கொழும்புக்கு மாற்றுவது தொடர்பில் அவர்கள் கொண்டிருக்கும் சந்தேகங்களில் அதிக நியாயங்கள் உண்டு என்பதை தங்களுக்குச் சுட்டிக்காட்ட விரும்புகின்றேன் என்றுள்ளது.

(வ-2)

நெதர்லாந்து– கொழும்பு அரசுகளின் கூட்டு நிதியில் வடக்கின் 5 வைத்தியசாலைகள் நவீனமயப்படுத்த நடவடிக்கை

மாகாண சுகாதார அமைச்சர் தெரிவிப்பு

வவுனியா, மே 22

நெதர்லாந்து, கொழும்பு அரசுகளின் கூட்டு நிதியில் வடக்கு மாகாணத்தில் 5 வைத்தியசாலைகள் நவீனமயப்படுத்தப்படும் என்று வடக்கு மாகாண சுகாதார அமைச்சர் ப.சத்தியலிங்கம் தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:

வடக்கு மாகாண சுகாதார அமைச்சுக்கு நெதர்லாந்து அரசால் 9 ஆயிரத்து 400 மில்லியன் ரூபா நிதி உதவி கிடைப்பதுடன் கொழும்பு சுகாதார அமைச்சால் 4 ஆயிரத்து 600 மில்லியன் ரூபா நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. இந்த 14 ஆயிரம் மில்லியன் ரூபா நிதியில் வடக்கு மாகாணத்தின் 5 மாவட்டங்களிலும் தலா ஒரு வைத்தியசாலையைத் தேர்வு செய்து நவீனமயப்படுத்தும் நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படுகின்றன.

இந்தத் திட்டத்துக்கு கொழும்பு சுகாதார அமைச்சின் ஊடாக கொழும்பு அமைச்சரவையின் ஒப்புதலும் திறைசேரியின் அனுமதியும் கிடைத்துள்ளது. எனவே இந்தத் திட்டத்துக்கான நிதி விரைவில் வடக்கு சுகாதார அமைச்சுக்குக் கிடைக்கும்.

இந்தத் திட்டத்தில் பருத்தித்துறை ஆதார வைத்தியசாலையில் நவீன வசதிகளுடன் கூடிய சத்திரசிகிச்சைக் கூடம் ஆயிரத்து 800 மில்லியன் ரூபாவில் அமைக்கப்படும். கிளிநொச்சி மாவட்டத்தில் ஆயிரத்து 200 மில்லியன் ரூபா நிதியில் தாய், சேய் பராமரிப்பு மற்றும் சிகிச்சைக் கூடங்கள் 4 அமைக்கப்படும். முல்லைத்தீவு மாவட்டத்தில் மாங்குளம் வைத்தியசாலை ஆயிரத்து 600 மில்லியன் ரூபா செலவில் நவீனமயப்படுத்தப்படும்.

மன்னார் மாவட்ட வைத்தியசாலையின் வெளிநோயாளர் பிரிவு மற்றும் இதர அபிவிருத்திகளுக்காக 2 ஆயிரத்து 200 மில்லியன் ரூபா நிதி செலவிடப்படும்.

வவுனியா வைத்தியசாலையில் நெஞ்சு, காது மூக்கு மற்றும் தொண்டை சிகிச்சைப் பிரிவுகளின் மேம்பாட்டுக்காக 2 ஆயிரம் மில்லியன் ரூபா நிதி செலவிடப்படும்.

இந்தத் திட்டத்தின் பணிகள் இந்த ஆண்டின் இறுதிக்குள் ஆரம்பிக்கப்படும். இதனால் வடக்கு மாகாண சுகாதாரத் துறையில் பெரியளவிலான முன்னேற்றம் ஏற்படும் என்று நம்புகின்றோம் - என்றார்.

(வ-101)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இராஜதந்திர சேவையிலுள்ளோரிடமும் இரட்டைக் குடியுரிமை விவரம் சேகரிப்பு

யாழ்ப்பாணம், மே 22
இலங்கையிலும் வெளிநாடுகளிலும் இராஜ தந்திரச் சேவையில் உள்ளவர்களில் இரட்டைக் குடியுரிமை பெற்றவர்களின் விவரங்களைச் சமர்ப்பிக்குமாறு இலங்கை அயலுறவுத்துறை அமைச்சு வேண்டுகோள் விடுத்திருக்கிறது.

இலங்கை அயலுறவுத்துறை அமைச்சு மற்றும் இலங்கையிலும் வெளிநாடுகளிலுமுள்ள தூதரகங்கள் ஆகியவற்றிலுள்ள இரட்டைக் குடியுரிமை பெற்றவர்கள் தங்களது விவரங்களைத் தாமதமின்றிச் சமர்ப்பிக்குமாறு அமைச்சு சுற்றறிக்கை மூலம் அறிவித்துள்ளது. காலி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினரான கீதா குமாரசிங்க இரட்டைக் குடியுரிமையைப் பெற்றவர் என்ற காரணத்தால் மேன்முறையீட்டு நீதிமன்றம் அவரது நாடாளுமன்ற உறுப்புரிமையை நீக்கியதையடுத்தே அயலுறவுத்துறை அமைச்சு இந்த விவரங்களைத் திரட்டிவருவதாகத் தெரியவருகின்றது. (வ-5)

மணற்கொள்ளை முறியடிப்பு; 13 பேர் பொலிஸாரால் கைது

கிளிநொச்சி, மே 22
கிளிநொச்சி தருமபுரம் பகுதியில் இடம்பெற்ற பெரும் மணல் கொள்ளையை நேற்றுப் பொலிஸார் முறியடித்தனர். இந்த முற்றுகையின் போது 13 பேர் கைது செய்யப்பட்டதுடன் 12 வாகனங்களும் கைப்பற்றப்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டது.
கிளிநொச்சிப் பகுதியில் நீண்ட காலமாக இடம்பெற்று வந்த மணல் கொள்ளை தொடர்பில் பொலிஸாருக்குக் கிடைத்த தகவலை அடுத்துக் குறித்த பகுதி நேற்றுச் சுற்றி வளைக்கப்பட்டது.
இதன்போது 13 சந்தேக நபர்கள் கைது செய்யப்பட்டனர். இவ்வாறு கைது செய்யப்பட்ட நபர்களின் பாவனையில் இருந்த 12 வாகனங்களும் கைப்பற்றப்பட்டன.
கைது செய்யப்பட்ட சந்தேக நபர்கள் இன்று மாவட்ட நீதிமன்றில் முன்னிலைப்படுத்தப்படவுள்ளனர். (த-101)

வித்தியா கொலை வழக்கு

தீர்ப்பாய விசாரணையை நடத்துவது கொழும்பிலா? யாழ்ப்பாணத்திலா?

தீர்மானிப்பதில் இழுபறிநிலை

யாழ்ப்பாணம், மே 22
புங்குடுதீவு மாணவி வித்தியா படுகொலை தொடர்பாக 'ட்ரயல் அட்பார்' தீர்ப்பாயத்தை அமைக்கத் திட்டமிடப்பட்டுள்ள நிலையில், அதன் விசாரணையைக் கொழும்பிலா? யாழ்ப்பாணத்திலா? நடத்துவது என்பது தொடர்பாக முடிவெடுப்பதில் இழுபறி ஏற்பட்டுள்ளதால், விசாரணைகள் தாமதமடைந்துள்ளன என்று கொழும்பு ஆங்கில ஊடகம் செய்தி வெளியிட்டுள்ளது.
2015ஆம் ஆண்டு மே 13ஆம் திகதி புங்குடுதீவில் கூட்டு வன்புணர்வுக்கு உட்படுத்தப்பட்டு படுகொலை செய்யப்பட்ட மாணவி வித்தியா கொலை வழக்கை 3 மேல் நீதிமன்ற நீதிபதிகளைக் கொண்ட 'ட்ரயல் அட் பார்' தீர்ப்பாயம் முன்னிலையில் விசாரிக்க முடிவு செய்யப்பட்டுள்ளது.
கொழும்பு மேல் நீதிமன்ற நீதிபதிகளான ஹெய்யந்துடுவ, ஆச்சல வேங்கப்புலி, சம்பத் விஜேரத்ன ஆகியோர் இந்த 'ட்ரயல் அட் பார்' அமர்வுக்கு தலைமை நீதியரசரால் பரிந்துரைக்கப்பட்டிருந்தனர்.
வழக்கு விசாரணையைக் கொழும்பில் நடத்துவதற்கு அவர்கள் திட்டமிட்டிருந்தனர். எனினும் யாழ்ப்பாணத்தில் விசாரணைகளை நடத்த வேண்டும் என்று போராட்டங்கள் நடத்தப்பட்டன.
இந்த வழக்கில் 10 எதிரிகளுக்கு எதிராக 41 குற்றச்சாட்டுகள் சட்டமா அதிபர் திணைக்களத்தால் முன்வைக்கப்பட்டுள்ளன. வழக்கில் 23 பேர் சாட்சிகளாக இணைக்கப்பட்டுள்ளனர். சாட்சிகள் அனைவரும் தீவகத்தை வசிப்பிடமாக கொண்டவர்கள். இந்த நிலையில் விசாரணைகள் தமிழ் பேசும் நீதிபதிகளின் முன்னிலையில் யாழ்ப்பாணத்திலேயே நடத்தப்பட வேண்டும் என்று கோரிக்கைகள் விடுக்கப்பட்டுள்ளன.
வடக்கு கிழக்கில் 5 தமிழ் பேசும் மேல் நீதிமன்ற நீதிபதிகள் பணியில் உள்ளனர். மேல் நீதிமன்ற நீதிபதிகளான மாணிக்கவாசகர் இளஞ்செழியன், அன்னலிங்கம் பிரேமசங்கர், பாலேந்திரன் சசிமகேந்திரன், இராமநாதன் கண்ணன், ரி.எல்.ஏ. மனாப் ஆகியோர் உள்ளனர். இவர்களில் மூவரை நியமித்து விசாரணைகளை நடத்த வேண்டும் என்றும் வலியுறுத்தப்பட்டு வருகிறது. இந்த விடயத்தில் இன்னமும் முடிவுகள் எடுக்கப்படாததால், விசாரணைகளில் தாமதம் ஏற்பட்டுள்ளது.
(வ-5)

தடையையும் மீறி மரீனாவில் நினைவேந்தல் நடத்த முயற்சி

இளைஞர்கள் பொலிஸாரால் கைது

சென்னை, மே 22
இலங்கையில் நடந்த ஈழப் போர் தொடர்பாக மே 17 இயக்கம் அறிவித்திருந்த நினைவேந்தல் நிகழ்வைச் சென்னை மரீனா கடற்கரையில் நடத்துவதற்கு பொலிஸார் தடை விதித்துள்ள நிலையில், தடையை மீறி நினைவேந்தல் நிகழ்ச்சி நடத்த முயன்ற இளைஞர்கள் மற்றும் மே 17 இயக்கத்தினர் கைது செய்யப்பட்டனர்.
மரீனாவில் நினைவேந்தல் நிகழ்ச்சி நடத்த மே 17 இயக்கத்தினர் முயற்சிக்கலாம் என்ற நிலையில், ஞாயிற்றுக்கிழமை காலை முதலே அங்கு பொலிஸ் பாதுகாப்பு பலப்படுத்தப்பட்டிருந்தது.
காந்தி சிலை, விவேகானந்தர் இல்லம், கண்ணகி சிலை மற்றும் மெரீனா கடற்கரையின் பல நுழைவாயில்களிலும் பொலிஸார் தீவிர கண்காணிப்பு பணி மேற்கொண்டனர்.
மரீனா கடற்கரைச் சாலையில் பல பகுதிகளிலும் வாகனங்கள் செல்லத் தடை விதிக்கப்பட்டது.
இந்நிலையில், மாலை நேரத்தில் மரீனா கடற்கரையில் கறுப்புச் சட்டை அணிந்து வந்தவர்கள் மற்றும் விடுதலைப் புலிகள் அமைப்பின் தலைவர் வேலுப்பிள்ளை பிரபாகரனின் உருவம் பதித்த ரீசேர்ட் அணிந்து வந்தவர்களைப் பொலிஸார் கைதுசெய்தனர்.
ஏராளமானோர் கைது செய்யப்பட்டுள்ள நிலையில், பிபிசியிடம் பேசிய மே 17 இயக்கத்தின் ஒருங்கிணைப்பாளர் திருமுருகன் காந்தி, பொலிஸார் அதிக அளவில் குவிக்கப்பட்ட போதிலும், நினைவேந்தல் நிகழ்வை நடத்த தாங்கள் முயற்சிக்கப் போவதாகத் தெரிவித்தார்.
கைது செய்யப்பட்ட இளைஞர்கள் அனைவரும் மே 17 இயக்கத்தினரா என்று கேட்டதற்கு, மே 17 இயக்கத்தினரும் கைது செய்யப்பட்டுள்ளனர். ஈழப்போர் தொடர்பான மற்ற ஆர்வலர்களும் கைது செய்யப்பட்டுள்ளதாகத் திருமுருகன் காந்தி கூறினார்.
பொலிஸ் தடையை மீறி நினைவேந்தல் நிகழ்ச்சியை நடத்த முயன்ற திரைப்பட இயக்குனர் கௌதமனும் கைது செய்யப்பட்டார்.
நினைவேந்தல் நிகழ்ச்சியை நடத்த முயன்றவர்கள் கைதுசெய்யப்பட்டதால், கடற்கரை சாலையில் சாலை மறியல் போராட்டம் நடத்தச் சிலர் முயன்றனர்.
முன்னதாக, ஈழப் போர் தொடர்பாக மே 17 இயக்கம் அறிவித்திருந்த நினைவேந்தல் நிகழ்வை சென்னை மரீனா கடற்கரையில் நடத்துவதற்கு பொலிஸ் தடை விதித்திருந்தது.
மே 17 இயக்கம், ஞாயிற்றுக் கிழமையன்று மாலையில் மெரீனா கடற்கரையில்கண்ணகிசிலைக்கு அருகில் தமிழீழப் படுகொலைக்கான நினைவேந்தல் என்ற பெயரில் நிகழ்வு ஒன்றை ஏற்பாடு செய்திருந்தது.
இது தொடர்பாக சனிக்கிழமையன்று பொலிஸார் வெளியிட்டிருக்கும் அறிக்கையில், 2003ஆம் ஆண்டு முதல் சென்னை மெரீனா கடற்கரையில் போராட்டம் நடத்த அனுமதிக்கப்படுவதில்லை என்பது சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. (த)

மோட்டார் சைக்கிள் ஓட்டிகள் சங்குப்பிட்டி பாலத்தில் சந்திப்பு

யாழ்ப்பாணம், மே 22
வடமாகாணத்தில் உள்ள மோட்டார் சைக்கிள் ஓட்டிகள் சிலர் சங்குப்பிட்டி பாலத்துக்கு அருகில் சந்திப்பொன்றை நடத்தியுள்ளனர். பூநகரி சங்குப்பிட்டி பாலத்துக்கு அருகில் கடந்த ஞாயிற்றுக்கிழமை மாலை 4 மணியளவில் இந்தச் சந்திப்பு இடம்பெற்றது.
முகநூல் ஊடாக வடக்கு மாகாணத்தில் உள்ள மோட்டார் சைக்கிள் ஓட்டிகளுக்கு அழைப்பு விடுக்கப்பட்டு இந்தச் சந்திப்பு நடைபெற்றது. இதில் நூற்றுக்கும் மேற்பட்ட மோட்டார் சைக்கிள் ஓட்டிகள் கலந்து கொண்டனர்.
இந்தச் சந்திப்பில் திருகோணமலையைச் சேர்ந்த சிலரும் மோட்டார் சைக்கிளில் வந்து கலந்து கொண்டனர். குறித்த சந்திப்பின் சிலர் மோட்டார் சைக்கிள் சாகச காட்சிகளிலும் ஈடுபட்டனர். (த-37)

ரயில் மிதிபலகையில் நின்று பயணித்த மாணவன் விபத்தில் சிக்குண்டு காயம்

கொழும்பு, மே 22
தொடருந்து மிதிபலகையில் நின்றவாறு பயணித்த மாணவன் பாதையோரம் காணப்பட்ட தூண் ஒன்றில் மோதுண்டு தொடருந்திலிருந்து தூக்கி வீசப்பட்டுப் படுகாயமடைந்தார். அவர் வைத்திய சாலையில் சேர்க்கப்பட்டு தீவிர சிகிச்சைக்கு உட்படுத்தப்பட்டுள்ளார் என்று பொலிஸார் தெரிவித்தனர்.
நாவலப்பிட்டியவில் நேற்றுமுற்பகல் இடம்பெற்ற இந்தச் சம்பவத்தில் நோர்வுட் ஸ்டோகொம் தமிழ் மகா வித்தியாலத்தில் கல்வி கற்கும் 16 வயதுடைய எஸ்.சதிஸ் என்ற மாணவரே இவ்வாறு விபத்துக்குள்ளானார்.
மாணவன் விழுந்து காயப்பட்டு தொடருந்துப் பாதைக்கு அண்மையாகக் கிடப்பதைக் கண்ட பிரதேசவாசிகள் அது தொடர்பில் வட்டவளைத் தொடருந்து நிலையத்துக்கு அறிவித்தனர்.
மாணவன் நாவலப்பிடிய தொடருந்து நிலையத்துக்குக் கொண்டு செல்லப்பட்டு நாவலப்பிடிய மருத்துவ மனையில் சேர்க்கப்பட்டார் என்று தெரிவிக்கப்பட்டது.
(வ-4)

ஐக்கிய தேசியக் கட்சி அமைச்சர்களுக்கு ரணில் புத்திமதி

கொழும்பு, மே 22
"அமைச்சு அலுவலகங்களுக்குள் மட்டும் சுருங்கிக் கொள்ளாமல் வாரத்தில் 3 நாள்களாவது உங்கள் தொகுதிகளுக்குச் சென்று அங்குள்ள நடவடிக்கைகளை கவனியுங்கள்"
இவ்வாறு ஐக்கிய தேசியக் கட்சியின் தலைவரும் தலைமை அமைச்சருமான ரணில் விக்கிரமசிங்க, தனது கட்சி அமைச்சர்களுக்கு அறிவுறுத்தியுள்ளார்.
அறிவிப்பை மீறி தொகுதிகளுக்குச் செல்லாதவர்கள் எவராவது இருப்பார்களாயின், அவர்களின் தொகுதிகளுக்கு புதியவர்களை நியமிக்க வேண்டி ஏற்படும் எனவும் ரணில் எச்சரித்துள்ளார்.
அதன்பின்னர் தொகுதி அமைப்பாளர்களை நியமிக்கும்போது, தொகுதியுடன் செயற்பாடு கூடியவர்களுக்கு முக்கியத்துவம் அளிக்கப்படும் எனவும் ரணில் தெரிவித்துள்ளார் என்று கட்சியின் தகவல்கள் தெரிவித்தன.
(வ-4)

பெண்ணின் இறப்புக்கு காரணமானவர்கள் யார்?

குடாநாட்டில் சுவரொட்டிகள்

யாழ்ப்பாணம், மே 22
கரவெட்டி வடக்கைச் சேர்ந்த பெண்ணொருவரின் இறப்புக்கு மருத்துவத் தவறே காரணம் என்று குற்றஞ்சாட்டி யாழ்ப்பாணத்தில் பல இடங்களிலும் துண்டுப் பிரசுரங்கள் ஒட்டப்பட்டுள்ளன.
குறித்த பெண் வலிப்பு காரணமாகக் கடந்த 9 ஆம் திகதி பருத்தித்துறைஆதார வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டார். அங்கு வைத்து ஒரு வகை ஊசியை ஏற்றியதாகவும், இதன் காரணமாகவே குறித்த பெண்மணி உயிரிழந்ததாகவும் தெரிவித்து யாழ்ப்பாணத்தின் பல இடங்களிலும் சுவரொட்டிகள் ஒட்டப்பட்டுள்ளன.
கரவெட்டியைச் சேர்ந்த த.மரியல்லா(வயது48) என்பவரே இவ்வாறு உயிரிழந்தார் என அதில் குறிப்பிடப்பட்டுள்ளது. (த-4-8)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இந்திய களைநாசினிகளுடன் கொட்டகலையில் ஒருவர் கைது

நுவரெலியா, மே22

இந்தியாவிலிருந்து யாழ்ப்பாணத்துக்குப் படகு மூலம் கடத்தி வரப்பட்டு, மலையகப் பிரதேசங்களுக்கு கொண்டு வரப்பட்ட தடைசெய்யப்பட்ட ஒருவகைகளை நாசினிகளுடன் கொட்டகலை தொடருந்து நிலையத்தில் வைத்து ஒருவர் கைது செய்யப்பட்டார்.

பொலிஸாருக்குக் கிடைத்த தகவல் ஒன்றுக்கமைய நேற்று முன்தினம் காலை சந்தேகநபர் கைது செய்யப்பட்டார்.

தடை செய்யப்பட்ட களைநாசினி மருந்து வகைகள் யாழ்ப்பாணத்திலிருந்து பொதி செய்யப்பட்டு, கொட்டகலைக்குத் தொடருந்து ஊடாக வரவழைக்கப்பட்டன.

இவ்வாறு வரவழைக்கப்பட்ட கிருமி நாசினிப் பொதிகளைத் தொடருந்து நிலையத்திலிருந்து பாரவூர்தி ஒன்றில் ஏற்றுவதற்கு முற்பட்டனர்.

அவ்விடத்துக்கு விரைந்து சென்ற பொலிஸார், சந்தேகநபரைக் கைது செய்ததுடன், பொதி களையும், பாரவூர்தியையும் கைப்பற்றினர்.

அதேநேரம் கிறிஸ்னஸ்பாம் தோட்டத்தில் உள்ள சந்தேகநபரின் வீட்டை சோதனைக்குட்படுத்திய பொலிஸார், அங்கிருந்தும் தடைசெய்யப்பட்ட மருந்து வகைகளைக் கைப்பற்றினர்.

சந்தேகநபர் நீண்டகாலமாக இந்த மருந்துவிற்பனைசெய்யும்தொழிலை மேற்கொண்டு வந்துள்ளார் எனப் பொலிஸார் தெரிவித்தனர்.

அதேவேளை, யாழ்ப்பாணத்திலிருந்து கொண்டு வரப்பட்டுள்ள இந்த மருந்து வகைகள் இந்தியாவிலிருந்து படகு மார்க்கமாக யாழ்ப்பாணத்துக்குக் கொண்டு வரப்பட்டு, பின்னர் மலையகப் பிரதேசத்துக்கு விநியோகிக்கப்பட்டுள்ளது.

இது தொடர்பாக திம்புள்ள பத்தனைப் பொலிஸார் தீவிர விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (ஐ-ய-43)

இடைவிலகிய மாணவரை மீண்டும் பாடசாலைகளில் இணைக்கும் செயற்றிட்டம்

கோப்பாய் கோட்டத்தில் முன்னெடுக்க முடிவு

அச்சுவேலி, மே 23

கோப்பாய் கல்விக் கோட்டத்தில் பாடசாலையில் இருந்து இடைவிலகிய மாணவர்களை மீண்டும் பாடசாலையில் இணைத்துக் கொள்வதற்கும், பாடசாலையில் சேராமல் இருக்கும் சிறுவர்களைப் பாடசாலைகளில் சேர்ப்பதற்குமான வேலைத்திட்டத்தைப் பாடசாலை அதிபர்கள், பிரதேச செயலக அலுவலர்கள், கோட்டக்கல்வி அதிகாரிகள் ஆகியோர் இணைந்து முன்னெடுக்கவுள்ளனர்.

கோப்பாய்க் கல்விக் கோட்டத்தின் கட்டாயக் கல்வி தொடர்பான கருத்தரங்கில் இந்தத் தீர்மானம் எடுக்கப்பட்டதாகக் கோப்பாய் கோட்டக் கல்வி அதிகாரி என். சிவநேசன் தெரிவித்தார்.

கோப்பாய்க் கோட்டத்தின் கட்டாயக் கல்வி தொடர்பான கருத்தரங்கு புத்தூர் ஸ்ரீ சோமஸ்கந்த கல்லூரி குமாரசுவாமி மண்டபத்தில் கோட்டக்கல்வி அதிகாரி என். சிவநேசன் தலைமையில் கடந்த 19 ஆம் திகதி வெள்ளிக்கிழமை நடைபெற்றது.

கருத்தரங்கில் ஆராயப்பட்டு மேற்கொள்ளப்பட்ட தீர்மானங்கள் தொடர்பாக கோப்பாய்க் கோட்டக் கல்வி அதிகாரி மேலும் தெரிவிக்கையில்,

யாழ். கல்வி வலயத்தில் உள்ள நல்லூர், யாழ்ப்பாணம், கோப்பாய் மூன்று கல்விக் கோட்டங்களிலும் கோப்பாய் கல்விக் கோட்டத்தின் அடைவு மட்டம் தாழ்நிலையில் இருப்பது யாழ். கல்வி வலயத்தின் தரநிலையைக் குறைத்து மதிப்பீடு செய்ய வைத்துள்ளது எனக் குறை கூறப்படுகின்றது.

கோப்பாய் கல்விக் கோட்டத்தில் பாடசாலைக்கு வரவு குறைவான மாணவர்கள் என்ற வகையில் 400 பேர் இனங்காணப்பட்டுள்ளனர். அதேநேரம் பாடசாலையில் இருந்து இடைவிலகியோர் தொகையும் கணிசமான அளவு உள்ளது. பாடசாலைக் கல்வியில் இணைந்து கொள்ளாத சிறுவர்களும் உள்ளனர். இவர்களைப் பாடசாலையில் இணைத்துக் கொள்வதற்காள வேலைத்திட்டத்தைப் பாடசாலை அதிபர்கள், பிரதேச செயலக அலுவலர்கள், கோட்டக்கல்வி அலுவலகத்தினர் இணைந்த நிலையில் அட்டவணையின் பிரகாரம் மேற்கொள்வது எனத் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

பாடசாலை வரவு குறைவு மற்றும் இடைவிலகிய மாணவர்களின் கற்றலை ஊக்குவிப்பதற்கு பின்புலமாகப் பொருத்தமான உதவிகளை வழங்குதல், குறித்த குடும்பத்தின் வாழ்வாதாரத்தை மேல் நிலைப்படுத்தல் ஆகியன குறித்தும் கவனம் செலுத்தப்படும்.

கட்டாயக் கல்வியின் அவசியம் தொடர்பாகக் கிராமத்தின் பொது அமைப்புக்களின் உதவியுடன் பெற்றோர் மற்றும் பொது மக்களுக்கு விழிப்புணர்வுக் கருத்தரங்குகளை நடத்துதல் உள்ளிட்ட தீர்மானங்கள் மேற்கொள்ளப்பட்டன என்றார். (த-11)

பிறந்த குழந்தை உடனே இறந்ததால் சர்ச்சை

மருத்துவப் புறக்கணிப்புக் காரணமா?

யாழ்ப்பாணம் மே 21

யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையில் குழந்தைப் பேறின்போது பிறந்த குழந்தை ஒன்று உடனடியாக இறந்தமை மருத்துவர்களின் தவறால் நிகழ்ந்ததா என்கிற சர்ச்சை எழுப்பப்பட்டுள்ளது. கர்ப்பப்பையில் இருந்து குழந்தையை வெளியே எடுப்பதற்குப் பயன்படுத்தப்பட்ட ஆயுதத்தால் குழந்தையின் தலையில் பாதிப்பு ஏற்பட்டு அது இறந்தது என்று தெரிவிக்கப்படும் நிலையில் அது மருத்துவ புறக்கணிப்பால் நிகழ்ந்த இறப்பு என்று திடீர் இறப்பு விசாரணை அதிகாரி கூறுகின்றார். ஆனால் மருத்துவர்கள் அதனை மறுக்கிறார்கள்.

மானிப்பாயைச் சேர்ந்த கர்ப்பிணியான தயாழினி ஜெயசந்திரன் யாழ். போதனா வைத்தியசாலையில் குழந்தை பெறுவதற்காகச் சேர்க்கப்பட்டார். முற்கூட்டியே குழந்தையைப் பெற்றெடுப்பதற்காக அவருக்கு வலியேற்படுத்தும் மருந்து ஏற்றப்பட்டது. நீண்ட நேரமாகியும் குழந்தை பிறக்காததன் காரணத்தால் அதனை வெளியே எடுப்பதற்கு அதற்குரிய ஆயுதமான இடுக்கியை மருத்துவர்கள் பயன்படுத்தினர்.

வெளியே எடுக்கப்பட்ட குழந்தை சிறிது நேரத்தில் இறந்துவிட்டது. கடும் வலி காரணமாக குழந்தையை அறுவைச் சிகிச்சை மூலம் பெற்றெடுக்குமாறு தாய் கேட்டுக்கொண்டபோதும் மருத்துவர்கள் அதனை ஏற்காமல் குழந்தையின் இறப்புக்குக் காரணமாகிவிட்டனர் என்று குற்றஞ்சாட்டப்படுகிறது. விடுதியின் வைத்திய நிபுணர் இல்லாத நிலையில் அங்கிருந்த இளம் மருத்துவர்களே வைத்தியம் செய்தனர், நிபுணர் இருந்திருந்தால் குழந்தையைக் காப்பாற்றியிருக்க முடியும் என்று உறவினர்கள் குற்றஞ்சாட்டுகின்றனர்.

"ஆயுதத்தை உட்செலுத்தி அதிக அழுத்தத்தைக் கொடுத்து குழந்தையை வெளியே இழுத்து எடுத்தமையினால் குழந்தையினுடைய மண்டை ஓடுகள் நசிவடைந்தும் மூளைப்பகுதியில் இரத்தகசிவு ஏற்பட்டதாலும் கழுத்து எலும்பில் முறிவு ஏற்பட்டுள்ளமையாலும் இறப்பு நிகழ்ந்துள்ளது" என திடீர் இறப்பு விசாரணை அதிகாரி மு. உதயசிறி தெரிவித்தார். இதுபோன்ற நெருக்கடியான தருணங்களில் குழந்தையை வெளியே எடுப்பதற்கு, அதிக பாதிப்பை ஏற்படுத்தாத கருவிகள் இருக்கும்போதும் ஆபத்தை விளைவிக்கக்கூடிய கருவியைப் பயன்படுத்தியமை இறப்புக்கான காரணமாகிவிட்டது என்று கருதும் அவர், இது ஒரு மருத்துவப் புறக்கணிப்புக் குற்றம் என்றும் தெரிவித்தார்.

"குழந்தை இறந்தது தொடர்பிலான திடீர் இறப்பு விசாரணை அதிகாரி உதயசிறியின் அறிக்கை பிழையானது. இதற்காக அவர் மீது நடவடிக்கை எடுக்குமாறு வலியுறுத்தி கொழும்பு நீதி அமைச்சுக்கும், அமைச்சின் பதிவாளருக்கும் கடிதம் அனுப்பியுள்ளோம். அவர் பொய்யான தகவல்களை மக்கள் மத்தியில் பரப்பியுள்ளதால் அதற்குரிய நடவடிக்கையை எடுக்குமாறும் அக் கடிதத்தில் கோரியுள்ளோம்'' என்றார் யாழ். போதனா வைத்தியசாலைப் பணிப்பாளர் சத்தியமூர்த்தி.

"குழந்தைப் பேறுக்காக வந்திருந்தத பெண்ணுக்கு குருதிய முக்கம் உயர்வாக இருந்தமையினால் முற்கூட்டியே குழந்தையைப் பெற்றெடுக்க ஆலோசனை வழங்கப்பட்டது. அதற்காக அந்தப் பெண் உடனடியாக வைத்தியாசலையில் சேர்ப்பிக்கப்பட்டார். குழந்தையைப் பெறுவதற்கான வலியை ஏற்படுத்துவதற்கான மருந்து அவருக்கு ஏற்றப்பட்டது. ஆனாலும் குழந்தை பிறக்கவில்லை. தனக்கு அறுவைச் சிகிச்சை செய்யுமாறு அப்போது அந்தப் பெண் கேட்டார். பொதுவாக இயற்கையான குழந்தைப் பேறுக்காகவே நாம் வைத்தியம் செய்வோம். மக்கள் கேட்பதுபோல்எடுத்தஎடுப்பில்அறுவை சிகிச்சையைச் செய்வதில்லை. கட்டாய நிலமை ஏற்படும்போது மட்டுமே அதனை செய்வோம். இந்தக் குழந்தைப் பேறில் அறுவைச் சிகிச்சை செய்யவேண்டிய தேவைகள் இருக்கவில்லை. இயற்கையாகவே குழந்தை தாயின் கர்ப்பப் பையிலிருந்து வெளியே வராத நிலையில் அதனை வெளியே எடுப்பதற்காக உபகரணம் பயன்படுத்தப்பட்டது. குழந்தை பிறந்த போது குழந்தையின் தலைமயிர் தோலுக்கும் மண்டை ஓட்டுக்கும் இடைப்பட்ட பகுதியில் குருதிக் கசிவு ஏற்பட்டுள்ளது. இதனால் குழந்தை இறந்துள்ளது" என்று விளக்கமளித்தார் சம்பவம் இடம் பெற்ற மருத்துவ விடுதியின் நிபுணர் மருத்துவர் எஸ். சுரேஸ் குமார். (உ-8)

மாணவர் நாடாளுமன்றத்தின் பதவியேற்பும் கன்னி அமர்வும்

தென்மராட்சி மே.22

கச்சாய் அரச தமிழ் கலவன் பாடசாலையின் இரண்டாவது மாணவர் நாடாளுமன்றப் பதவியேற்பும் கன்னி அமர்வும் நாளை செவ்வாய்க்கிழமை பி.ப.1.45 மணிக்குப் பாடசாலை பிரதான மண்டபத்தில் நடைபெறும்.

பாடசாலை அதிபரும் மாணவர் பாராளுமன்ற செயலாளர் நாயகமுமான கா. குணசிங்கம் தலைமையில் நடைபெறும் நிகழ்வுக்கு தலைமை விருந்தினராக யாழ். மாவட்ட உள்நாட்டு இறைவரித் திணைக்கள உதவி ஆணையாளர் திருமதி சுகர்ஜினி சர்வேஸ்வரனும், சிறப்பு விருந்தினராகத் தென்மராட்சி கல்வி வலய ஆசிரிய ஆலோசகர் சி. நாகராசாவும் கலந்து கொள்வர்.

நிகழ்வில் பாடசாலையின் இரண்டாவது மாணவர் நாடாளுமன்றத்திற்கு தெரிவானவர்களிலிருந்து சபாநாயகர், பிரதமர், அவைத் தலைவர், 10 அமைச்சர்கள், 10 பிரதி அமைச்சர்கள் பதவியேற்பும் மாணவர் நாடாளுமன்றின் கன்னி அமர்வும் இடம்பெறுமென அறிவிக்கப்பட்டுள்ளது. (த-9)

சிதைக்கப்படும் துயிலும் இல்லம்

துணுக்காய் பிரதேச மக்கள் கவலை

முல்லைத்தீவு, மே 22

துணுக்காய்ப் பிரதேசத்தில் அமைந்துள்ள ஆலங்குளம் மாவீரர் துயிலும் இல்லம் இராணுவத்தினரால் சிதைக்கப்பட்டு வருகிறது என்று பிரதேச மக்கள் கவலை தெரிவித்தனர்.

அவர்கள் மேலும் தெரிவித்ததாவது,

"நல்லிணக்கம் கதைத்துக் கொண்டு கூட்டு அரசும் எங்கள் மனதைக் காயப்படுத்தும் செயல்களில் தொடர்ந்து ஈடுபட்டுவருகிறது.

நாட்டின் சர்வாதிகார ஆட்சிக்கு முற்றுப்புள்ளி வைத்து, கூட்டு அரசு பொறுப்புக்களை ஏற்றுக்கொண்டது. அதன் பின்னர் வடக்குக் கிழக்குப் பகுதிகளில் மாவீரர் துயிலும் இல்லங்கள் அமைந்துள்ள காணிகள் விடுவிக்கப்பட்டிருந்தன. அதனால் கடந்த வருடம் எங்கள் பிள்ளைகளை நினைத்து எம்மால் அஞ்சலி செலுத்த முடிந்தது.

அதனால் கூட்டு அரசின் மீது எமக்கு மிகுந்த நம்பிக்கை ஏற்பட்டது. தற்போது சில தினங்களாகத் துணுக்காய்ப் பிரதேசத்தில் அமைந்துள்ள ஆலங்குளம் மாவீரர் துயிலும் இல்லம் இயந்திரங்களின் உதவியுடன் அழமாகக் கிண்டப்படுகிறது. அருகே அமைந்துள்ள இராணுவ முகாமுக்கு அணை கட்டப்படுகிறது.

அதற்காகத் துயிலும் இல்லத்திலிருந்து இயந்திரங்கள் மூலம் மண் எடுத்துச் செல்கின்றனர். எங்கள் பிள்ளைகளைப் புதைத்த இடத்தில் இவ்வாறு மண்ணைத் தோண்டி, அதனைக் கொண்டு அணைகட்டுவது எங்கள் மனதை மேலும் புண்படுத்துவதாக உள்ளது. இவ்வாறான செயல்களை நிறுத்தி ஏனைய மாவீரர் துயிலும் இல்லக் காணிகள் விடுவித்தது போல், ஆலங்குளம் காணியையும் விடுவிக்க வேண்டும் - என்றனர். (ஐ-7)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அச்சுறுத்தல்களை உடனே நிறுத்த அரசுக்கு அழுத்தம்

பன்னாட்டுச் சமூகத்திடம் தமிழ் மக்கள் பேரவை வலியுறுத்தல்

யாழ்ப்பாணம், மே 22

தமிழர் தாயகத்தில் மனித உரிமைச் செயற்பாட்டாளர்கள் மீது தொடரும் அச்சுறுதல்களை நிறுத்தப் பன்னாட்டுச் சமூகம் அழுத்தம் கொடுக்க வேண்டும் எனத் தமிழ் மக்கள் பேரவை கோரிக்கை விடுத்துள்ளது.

இது குறித்து பேரவை வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:

முள்ளிவாய்க்காலில் நினைவேந்தல் நிகழ்வொன்றை ஒழுங்குபடுத்திய , நீண்டகால மனித உரிமைச் செயற்பாட்டாளரும் தமிழ் மக்கள் பேரவையின் அங்கத்துவ அமைப்புகளில் ஒன்றான தமிழ் சிவில் சமூக அமையத்தின் பேச்சாளருமான வணபிதா எழில்றஜன் மீது, விசாரணை எனும் பெயரில் தொடரும் அச்சுறுத்தலைத் தமிழ் மக்கள் பேரவை வன்மையாகக் கண்டிக்கிறது.

ஏற்கனவே கடந்த காலங்களிலும் பல்வேறு அச்சுறுத்தல்களுக்குள்ளான அவர், இந்த முறை மூன்றாவது தடவையாகவும் விசாரணைக்கு அழைக்கப்பட்டுள்ளார். அதுமட்டுமல்லாது, அவரது பெற்றோர்களும் அச்சுறுத்தல்களுக்கு உள்ளாக்கப்பட்டிருக்கின்றனர்.

நினைவுகூரும் உரிமையை அச்சுறுத்தலுக்குள்ளாக்கும் இந்த மிகவும் மோசமான அடக்குமுறை குறித்து, அதிலும், அடிகளாரின் வயோதிப பெற்றோரையும் அச்சுறுத்தலுக்குள்ளாக்கிய இந்த அடக்குமுறை குறித்து தமிழ் மக்கள் பேரவை ஆழ்ந்த கரிசனை கொண்டுள்ளது.

இது மட்டுமல்லாது, வடக்குகிழக்குப் பகுதிகளில் பல்வேறு இடங்களில் நினைவேந்தல் நிகழ்வுகளை ஒழுங்குபடுத்திய செயற்பாட்டாளர்கள், கலந்துகொண்ட மக்கள் மற்றும் அவர்களது குடும்பத்தினர் மீது இராணுவப் புலனாய்வாளர்களால் தொடர்ச்சியான அச்சுறுத்தல்கள் விடுக்கப்பட்டுவருகின்றன. இவற்றை ஆழ்ந்த விசனத்துடன் நாம் பன்னாட்டுச் சமூகத்திடம் சமர்ப்பிக்கின்றோம்.

பல்வேறு இடங்களிலும் தனித்தனியாக இடம்பெறும் இப்படியான அச்சுறுத்தல்களும் துஷ்பிரயோகங்களும், எதிர்காலத்தில் நினைவுகூரல்கள் ஒருங்கிணைக்கப்பட்டு நடத்தப்படவேண்டியதன் அவசியத்தை எமக்கு உணர்த்துகின்றன.

ஒருங்கிணைக்கப்பட்ட ரீதியில் இவை நடக்கும்போது, எம் மீதான அச்சுறுத்தல்களைக் குறைத்துக்கொள்ளமுடியும் எனவும் அப்படி அச்சுறுத்தல்கள் இடம்பெறுகின்ற பட்சத்திலும் அது குறித்து தேவையான நடவடிக்கைகளை இலகுவாக எடுக்கமுடியும் எனவும் தமிழ்மக்கள் பேரவை கருதுகிறது.

நினைவுகூருதல் எனப்படுவது ஒரு அடிப்படைமனிதஉரிமை. நினைவுகூருபவர்களை அச்சுறுத்துவதென்பதானது, நினைவுகூரலை மறுதலிக்கின்ற ஒரு அப்பட்டமான அடிப்படை மனித உரிமை மீறலேயாகும். இதன் மூலம் இப்படியான நினைவுகூரல்களை ஒழுங்குபடுத்துபவர்களும் கலந்துகொள்பவர்களும் அச்சுறுத்தல்களுக்குள்ளாவார்கள் எனும் செய்தியை எமது மக்களுக்கு வழங்கி, ஒரு அச்சமூட்டும் சூழலைத் தொடர்ந்தும் பேணி, அதன் மூலம் மக்களை தாமாகவே இப்படியான நடவடிக்கைகளிலிருந்து ஒதுங்கவைக்கும் ஒரு உளவியல் போராகவே நாம் இதனைப் பார்க்கின்றோம்.

நேரடி வன்முறையைப் பாவித்து முன்னைய அரசு நினைவுகூரல்களை அடக்கியிருந்தது. நல்லாட்சி எனத் தம்மை அழைத்துக்கொள்ளும் இந்த அரசானது, உளவியல் போரின் அங்கமான மறைமுக அழுத்தங்கள் மூலம் நினைவுகூரும் நடவடிக்கைகளைக் கட்டுப்படுத்துகிறது.

நினைவுகூருதலை மறுதலிப்பதென்பது, ஒரு சமூகத்தின் அடிப்படை உரிமையை மறுதலிக்கிக்கின்ற ஒரு செயற்பாடென்பதோடு, அச்சமூகத்தின் கூட்டு உளவியலையும் தொடர்ந்தும் சிதைவுற்ற நிலையில் பேணும் ஒரு முயற்சியேயாகும்.

நல்லிணக்கம் எனக்கூறிக் கொண்டு, நல்லிணக்கத்தின் முக்கிய அங்கமான நினைவுகூரலைத் திட்டமிட்ட ரீதியில் மறுதலிப்பதென்பது, இந்த அரசுக்கும் இதயசுத்தியான நல்லிணக்கத்தில் அக்கறையில்லையென்ற விமர்சனங்களை நிரூபிக்கின்றது.

இலங்கையின் நடைமுறைக் கள யதார்த்தத்தை பொறுத்தவரையில் , பொலிஸ் விசாரணை என்பது சாதாரண சிவில் சட்ட நீதி நடவடிக்கையாக மட்டும் கருதப்படமுடியாதது. அரசின் தொடர்ச்சியான இன ஒடுக்குமுறைச் செயற்பாட்டில் கணிசமான பங்கை இலங்கைப் பொலிஸ்துறையும் வகித்திருந்தது. இலங்கைப் பொலிஸ்துறை குறித்து எதுவித நம்பிக்கையுமற்ற, அச்ச உணர்வும் உளவியல் வடுவுமே பாதிக்கப்பட்ட தரப்பாகிய தமிழ் மக்களின் மனதில் இருக்கிறது என்ற பின்னணியிலேயே பன்னாட்டுச் சமூகம் இதனை அணுகவேண்டும்.

ஐ.நா. மனித உரிமைகள் சபை பல தடவைகள் தொடர்ச்சியாக பாதுகாப்புப் பிரிவின் மீள மைப்புக்கு வலியுறுத்தியும் , அதனை உதாசீனம் செய்து, எதுவித மறுசீரமைப்பும் செய்யப்படாது, முன்னைய கட்டமைப்புடனும் அதே மனோநிலையிலும் இயங்கிவரும் இலங்கைப் பாதுகாப்புப் பிரிவின் ஒரு அங்கத்தின் அச்சுறுத்தல் நடவடிக்கையாகவே இதனை நோக்கவேண்டும் என நாம் பன்னாட்டுச் சமூகத்தை கோருகின்றோம்.

வண பிதா எழில்றஜன் மீதும் ஏனைய செயற்பாட்டாளர்கள் மீதும், குறித்த நினைவுகூரலோடு தொடர்புபட்ட பொதுமக்கள் மீதும் பிரயோகிக்கப்படுகின்ற இந்த அச்சுறுத்தலைப் பன்னாட்டுச் சமூகம் கவனத்தில் எடுத்து, தொடர்கின்ற அச்சுறுத்தல்களை முடிவுக்குக் கொண்டுவருவதற்கு இலங்கை அரசுக்கு அழுத்தம் கொடுக்க வேண்டும்என்றுள்ளது. (த)

	மன்னார்	கிளிநொச்சி	மருதங்கேணி	சாவகச்சேரி
இறால்	600	900	1000	900
நண்டு	400	300	500	300
கணவாய்	600	800	800	1000
பாரை	600	600	800	800
சுறா	500	700	1000	–
சீலா	400	500	600	800
விளை	500	400	600	400
முரல்	350	500	450	–
கும்பிளா	400	500	400	400
கிளாக்கன்	800	–	400	400
ஓரா	300	400	500	400
திரளி	250	200	300	100
நகரை	300	150	400	–
சூடை	150	100	200	150
ஒட்டி	200	300	300	400
திருக்கை	350	–	400	–
மதனம்	200	200	300	–
கொய்	150	80	80	50
பாலை	200	150	400	400
வாழை	150	–	300	–

	மருதனார் மடம்	சாவகச்சேரி	பெரியபுட்டி	கனகராயன்
முள்ளங்கி	100	80	60	100
கத்தரி	120	120	100	120
கரட்	240	240	200	180-300
மரவள்ளி	60	80	60	60
பயிற்றை	120	120	100	180
பாகல்	170	140	140	180
கருணைக்கிழங்கு	100	100		100
பெ.வெங்காயம்	100	100	90	100
சி.வெங்காயம்	220	280	240	160
பூசணி	50	50	50	50
தக்காளி	120	220	100	120
வாழைக்காய்	50	40	40	40
கீரை	30	30	15	20
பொன்னாங்காணி	25	40	35	20
பச்சை மிளகாய்	200	200	260	200
புடோல்	120	80	100	120
கோவா	140	160	200	180
வெண்டி	120	120	100	80
போஞ்சி	200	160	240	180
பீற்றூட்	120	100	120	120
தேங்காய்	70	60	60	60
உருளைக்கிழங்கு	110	110	120	120
தேசிக்காய்	80	40	60	60
வல்லாரை	20	20	15	15
கறிமிளகாய்	140	140	140	180
இஞ்சி	200	120	250	200
முருங்கைக்காய்	100	100	100	100



பெண்களுக்கான தலை அலங்கார வகைகளில் வித்தியாசமான வடிவில் வூல்பான்ட்கள் தற்போது சந்தைக்கு வந்துள்ளன.
இவை 250 ரூபாவில் இருந்து விற்பனை செய்யப்படுகின்றன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பிளாஸ்ரிக் வெற்று போத்தல் கொள்வனவு

யாழ்ப்பாணம், மே 22
கட்டைவேலி நெல்லியடி பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத்தில் பிளாஸ்ரிக் வெற்றுப் போத்தல்கள் கொள்வனவு செய்யப்படவுள்ளன என்று அதன் பொதுமுகாமையாளர் எஸ்.நேசராசா தெரிவித்தார்.
சுற்றுச்சூழலை சுத்தம் செய்யும் வகையில் எமது சங்கக் கிளைகள் தோறும் ஒரு கிலோ 15 ரூபாவுக்கு பிளாஸ்ரிக் வெற்றுப் போத்தல்கள் கொள்வனவு செய்யப்படவுள்ளன.
அதனோடு இணைந்த வகையில் வெளி நாடுகளுக்கான பொதிகள், கடிதங்கள் அனுப்பும் சேவையும், சங்க கிராமிய வங்கியில் வைப்பு செய்யப்படும் முதியோர் நிலையான வைப்புக்களுக்கு 15 வீத வட்டியும் வழங்கப்படவுள்ளன என அவர் தெரிவித்தார். (ற-10)

கற்சிலைமடுவில் பால் கொள்வனவு செய்ய மில்கோ முன்வரவேண்டும்

ஒட்டுசுட்டான், மே 22
ஒட்டுசுட்டான் பிரதேச செயலர் பிரிவிலுள்ள கற்சிலைமடுக் கிராமத்தில் உற்பத்தி செய்யப்படும் பாலை மில்கோ நிறுவனம் கொள்வனவு செய்ய வேண்டும். நிர்ணய விலைக்குப் பாலைக் கொள்வனவு செய்ய வேண்டும் என்று பிரதேச பால் உற்பத்தியாளர்கள் கோரிக்கை விடுத்தனர்.
"எமது கிராமத்தில் மில்கோ நிறுவனம் பால் கொள்வனவு செய்வதில்லை. தனியார் ஒருவரே குறைந்த விலையில் கொள்வனவு செய்கின்றார். கொடுப்பனவுகள் 15 நாள்களுக்கு ஒருமுறை வழங்கப்படும் என்று தெரிவிக்கப்பட்டபோதும் அவ்வாறு ஒழுங்காக வழங்கப்படுவதில்லை.
நாம் வாழ்வாதாரமாக பால் உற்பத்தியையே நம்பியுள்ளோம். நாம் கொடுக்கும் பால் உற்பத்திக்கான பதிவுகள் எவையுமில்லை. அதனால் நாம் வங்கிகளில் தொழில் கடன்களைப் பெறமுடியாதுள்ளது. நாம் வழங்கும் பாலின் அளவையும், விற்பனையையும் கொண்டே எமக்கு வங்கிகள் கடன் கொடுக்கும். தற்போதுள்ள நிலைமையில் அவற்றைப் பெறமுடியாதுள்ளது.
மில்கோ நிறுவனம் எமது கிராமத்தில் பால் கொள்வனவு செய்ய வேண்டும்." என்று அவர்கள் கோரிக்கை விடுத்தனர்.
"நாம் எதிர்பார்த்ததை விட தற்போது பால் உற்பத்தி அதிகமாகவுள்ளது. ஒட்டுசுட்டானில் கட்டட மற்றும் தளபாட வசதிகள் போதுமானதாக இல்லை. அங்காங்கு நிலையங்கள் அமைத்தே பால் கொள்ளனவு செய்ய வேண்டியுள்ளது. எமக்கான வசதிகள் இன்னும் ஓரிரு மாதங்களில் கிடைக்கும் என்று எதிர்பார்க்கின்றோம். அதன்பின்னர் நாம் கிராமங்களில் நிலையங்கள் அமைத்து பால் கொள்வனவு செய்வோம்" என்று ஒட்டுசுட்டான் பிரதேச மில்கோ நிறுவன அதிகாரி தெரிவித்தார்.
(ற-21,500)

வவுனியாவில் மே 27இல் கதறி அழுது கவனவீர்ப்பு

காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவுகள் தீர்மானம்

வவுனியா, மே 22
காணாமல் ஆக்கப்பட்டவர்களை வெளிப்படுத்தக் கோரி எதிர்வரும் 27ஆம் திகதி வவுனியாவில் கதறி அழுது கவனவீர்ப்புப் போராட்டம் ஒன்று ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது என்று காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவினர்கள்
காணாமல் ஆக்கப்பட்டவர்களை வெளிப்படுத்தவும், விடுவிக்கவும் வலியுறுத்தி கடந்த 87 நாள்களாக வவுனியாவில் தொடர் போராட்டம் நடத்தப்படுகின்றது. அவர்களின் கோரிக்கைகள் தொடர்பாக இது வரை பொறுப்புவாய்ந்த பதில்கள் வழங்கப்படவில்லை. காணாமல் ஆக்கப்பட்டவர்களைத் தேடிக் கண்டறியும் சங்கத்தின் வவுனியா மாவட்டத் தலைவியான ஜெயவனிதா தலைமையில் நேற்று ஒன்று கூடல் நடைபெற்றது. அதில் எதிர்வரும் 27ஆம் திகதி கவனவீர்ப்புப் போராட்டம் நடத்துவது என்று தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது.
"காணாமல் ஆக்கப்பட்ட பலரின் படங்கள் ஆதாரபூர்வமாக உள்ளன. சங்கத்தின் வவுனியா மாவட்டத் தலைவி ஜெயவனிதாவின் பிள்ளை அரச தலைவர் மைத்திரிபால சிறிசேனவுக்கு அருகில் பாடசாலைச் சீருடையில் இருக்கும் ஒளிப்பட ஆதாரமும் இருக்கின்றது. அரச தலைவர் மைத்திரிபால சிறிசேன எந்தப் பாடசாலையில் ஒளிப்படம் எடுத்தார் என்பதைச் சொல்ல வேண்டும். இது போன்று காணாமல் ஆக்கப்பட்ட பலரைப் பற்றிய தகவல்கள் அரச தலைவருக்குத் தெரியும் என்றே நம்புகின்றோம்.
ஒளிப்படத்தில் அரச தலைவரின் அருகில் இருக்கும் பிள்ளையின் பிறந்த தினம் எதிர்வரும் 27ஆம் திகதியா கும். காணாமல் ஆக்கப்பட்டவர்களின் நிலைமையை வெளிப்படுத்த வேண்டும் என்று அன்றைய தினம் கதறி அழுது வவுனியாவில் கவனவீர்ப்பு நடத்தவுள்ளோம்.
அன்றைய தினம் பன்னாட்டு ஊடகவியலாளர்களும் இங்கு வரவுள்ளனர். இந்த விடயத்தை பன்னாட்டு ரீதியில் பகிரங்கப்படுத்த அனைத்து ஊடகவியலாளர்களுக்கும் அழைப்பு விடுகின்றோம்" என்று காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவினர்கள் தெரிவித்தனர்.
(ற-402)

இராணுவ சிப்பாய் எனக் கூறி தினமும் இரும்புகள் திருட்டு

கைதடி முதல் நாயன்மார்கட்டுவரை தொடர்கின்றது என மக்கள் குற்றச்சாட்டு

சாவகச்சேரி, மே 22
இராணுவத்தைச் சேர்ந்தவர் என்று கூறிக்கொள்ளும் இளைஞர் ஒருவர் இரவு வேளைகளில் கைதடி தொடக்கம் நாயன்மாட்கட்டு மாயனம் வரையான பகுதிகளில் இரும்புக் கம்பிகளைத் திருடி விற்கின்றார் என்று பிரதேச மக்கள் குற்றஞ்சாட்டுகின்றனர்.
நாவற்குழியைச் சேர்ந்த இந்த இளைஞர் அதிகாலை பச்சை நிற ரீசேட், காற்சட்டை அணிந்து கறுப்பு நிற மூக்குக் கண்ணாடியுடன் கைதடி, பனை அபிவிருத்திச் சபை அமைந்துள்ள பகுதியில் இருந்து, நாயன்மார்கட்டு இந்து மயானம் வரையான பகுதிகளில் இரும்புகளைத் திருடுகின்றார். அரச திணைக்களங்கள், தனியார் நிறுவனங்களின் பாதாகைகள் பொருத்தப்பட்டிருக்கும் இருப்புக் கம்பிகளை அபகரிகின்றார்.
இது தொடர்பாக அவரிடம் யாராவது கேட்டால் தான் நாவற்குழி இராணுவ முகாமைச் சேர்ந்தவர் என்றும், தனது சகோதரன் கைதடி இராணுவ முகாமில் இராணுவ அதிகாரியாகக் கடமையாற்றினார், தற்போது கொழும்பில் கடமையாற்றுகின்றார் என்றும் கூறுகின்றார். இராணுவ முகாம் தேவைக்கே தாம் இவ்வாறு இரும்புகளை எடுக்கின்றேன் என்று கூறுகின்றார். ஆனால் அவர் யாழ்ப்பாணம், ஐந்துசந்தியில் உள்ள கடை ஒன்றித் தினம் இரும்புகளைவிற்கின்றார் என்றுபிரதேசவாசிகள் கூறுகின்றனர். இந்த விடயத்தில் சம்பந்தப்பட்டோர் தலையிட்டு திருட்டு நடப்பதைத் தடுக்க வேண்டும் என்றும் அவர்கள் கோரிக்கை விடுத்தனர்.
(ற-288)

மானிப்பாய் பிரதேச வைத்தியசாலையில் தாதிய ஆளணியை அதிகரிக்க கோரிக்கை

மானிப்பாய், மே 22
வலி. தென்மேற்கில் உள்ள மானிப்பாய் பிரதேச வைத்திய சாலையில் நீண்ட காலமாக தாதியர்களுக்கான ஆளணிகள் உருவாக்கப்படாமல் உள்ளன என்று சுட்டிக்காட்டப்படுகின்றது.
சுகாதார அமைச்சர் (வட மாகாணம்) மேற்படி வைத்தியசாலையைப் பார்வையிட்டு அதற்கான சகல ஆளணிகளையும் உருவாக்கி உடன் வழங்க முன்வர வேண்டும் என நவாலி ஹேமலதா ஞபகார்த்த சனசமுக நிலைய நிர்வாகம் கோரிக்கை விடுத்துள்ளது.
"வலி. தென்மேற்கு பிரதேசத்துக்கு உரிய மானிப்பாய் பிரதேச வைத்தியசாலை ஆனைக்கோட்டையில் இயங்குகின்றது. இந்த வைத்தியசாலையில் தினமும் 400 முதல் 500 வரையிலான நோயாளிகள் சிகிச்சை பெறுகின்றனர். அவர்களின் தேவைகளை முழுமை செய்யவதற்கான தாதிய உத்தியோகத்தர் ஆளணி அங்கீகரித்து வழங்கப்படவில்லை. ஒரேயொரு குடும்பநல மாது மட்டுமே அங்கு ஆளணியாக அங்கீகரிக்கப்பட்டுள்ளார்.
மகப்பேறு, நீரிழிவு, வெளிநோயாளர், பல் மருத்துவம் என பல்வேறு பிரிவுகள் இயங்குகின்றன. நோயாளிகள் இலகுவான ஆரோக்கியமான சேவையை உடன்பெறவும் தாதிய மருத்துவ குடும்பநல மாதுக்களின் சேவையை பெற்றிட அதிகரித்த ஆளணியை உருவாக்கம் செய்ய வேண்டும் என்று கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.
(ற-50)

> "இந்த வைத்தியசாலை தினமும் 400 முதல் 500 வரையிலான நோயாளிகள் சிகிச்சை பெறுகின்றனர். அவர்களின் தேவைகளை முழுமை செய்யவதற்கான தாதிய உத்தியோகத்தர் ஆளணி அங்கீகரித்து வழங்கப்படவில்லை.

இரு இடங்களில் டெங்கு கட்டுப்பாட்டு செயற்றிட்டங்கள்

யாழ்ப்பாணம், மே 22
யாழ். மாநகரப் பிரதேசத்தில் டெங்கு தாக்கம் கூடுதலாக காணப்பட்ட இரண்டு இடங்களில் டெங்கு விழிப்புணர்வு நடவடிக்கைகள் இன்று திங்கட்கிழமையும் நாளை செவ்வாய்க்கிழமையும் இடம்பெறும் என்று அறிவிக்கப்பட்டது.
இன்று திங்கட்கிழமை நாவாந்துறை பொதுச்சுகாதார பரிசோதகர் பிரிவில் ஜே 84, 85, 87 ஆகிய கிராம சேவகர் பிரிவிலும், நாளை செவ்வாய்க்கிழமை வாண்ணார் பண்ணை பொதுச்சுகாதார பிரிவின் ஜே/97,98,99 ஆகிய கிராம சேவகர் பிரிவுகளில் இந்த டெங்கு ஒழிப்பு செயற்பாடுகள் இடம்பெறும் என்று தெரிவிக்கப்பட்டது.
(ற-17)

அமெ. இராணுவ வாகனங்கள் இலங்கைக்கு!

திருடப்பட்ட அமெரிக்க இராணுவ வாகனங்களை இலங்கையில் விற்பனை செய்ய முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டன என்று தகவல்கள் வெளியாகியுள்ளன.
தென்கொரியாவிலுள்ள அமெரிக்க இராணுவ முகாமிருந்து திருடப்பட்ட வாகங்களே இவ்வாறு விற்பனை செய்யப்படவிருந்தன. அமெரிக்கப் படைவீரர் ஒருவரும் ஆறு தென் கொரியப்பிரஜைகளும் இணைந்து இந்தத் திருட்டை மேற்கொண்டுள்ளனர். திருடப்பட்ட மூன்று வாகனங்களில் இரண்டு வாகனங்களை இலங்கைக்கு விற்பனை செய்ய முயற்சிக்கப்பட்டுள்ளது என்று பன்னாட்டு ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன
கடந்தாண்டு ஜூன் மற்றும் செப்ரெம்பர் மாதங்களில் இராணுவ தளத்தில் இருந்து மூன்று வாகனங்களை திருடியவர் கண்டுபிடிக்கப்பட்டார். அவர் 47 வயதுடைய தென்கொரியர் என்றும் அமெரிக்க படைவீரர் என்றும் விசாரணைகள் மேற்கொண்டுள்ளார் என்று பொலிஸார் தெரிவித்தனர்.
அந்தவாகனங்களுக்குகவசம்பயன்படுத்தப்பட்டு திருடப்பட்டுள்ளன என்று சியோல் மெட்ரோபொலிட்டன் பொலிஸ் ஏஜென்சியின் பன்னாட்டு குற்ற விசாரணை பிரிவு முதன்மை அதிகாரி கிம் டொங் குவான் தெரிவித்தார்.
கொரியர்கள் முதலில் தாம் செய்த தவறை மறுத்துள்ளனர். எனினும் வாகனங்களை தாம் விற்க முயன்றனர் என்று அண்மையில் தெரிவித்துள்ளனர். திருடப்பட்ட வாகனங்கள் கிட்டத்தட்ட 10 ஆயிரம் அமெரிக்க டொலருக்கு திரைப்பட தயாரிப்பாளருக்கு விற்கப்பட்ட போது பொலிஸார் அதனை கண்டுபிடித்து திரும்ப பெற்றுள்ளனர்.
இலங்கை, கம்போடியா, மங்கோலியா ஆகிய நாடுகளுக்கு மற்ற இரண்டு வாகனங்களை விற்க முயன்ற போதே பொலிஸார் சந்தேக நபர்களைக் கைது செய்துள்ளனர். தற்போது இந்தசம்பவம்தொடர்பானமேலதிகவிசாரணைகள் முன்னெடுக்கப்படுகின்றன பன்னாட்டு ஊடகங்கள் செய்திவெளியிட்டுள்ளன. (ற-10)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வெளி மாவட்டங்களுக்கு கிரவல் ஏற்றப்படுவதை நிறுத்த வேண்டும்

முல்லை. மாவட்ட மக்கள் கோரிக்கை

ஒட்டுசுட்டான், மே 22
முல்லைத்தீவு மாவட்டத்தில் அகழப்படும் கிரவல், மணல் என்பவற்றை முல்லைத்தீவு மாவட்டத் தேவைகளுக்கே பயன்படுத்த வேண்டும். ஏனைய மாவட்டங்களுக்குக் கொண்டு செல்வதைத் தடுக்க வேண்டும் என்று மாவட்ட மக்கள் கோரிக்கை விடுத்தனர்.
"முல்லைத்தீவு மாவட்டத்தில் தொடர்ச்சியாகக் கிரவல், மண் அகழப்படுகின்றது. அதனால் நிலத்தடி நீர் வற்றுகின்றது. அகழ்வு கட்டுக்கடங்காமல் இவ்வாறே தொடர்ந்தால் எதிர்காலத்தில் நாம் பெரும் அழிவுகளைச் சந்திக்க நேரிடும்.
மாவட்டத்தில் அகழப்படும் கிரவல், மணலை மாவட்டத்தின் தேவைகளுக்கே பயன்படுத்த வேண்டும். எமது மாவட்ட மக்களின் நலனைக் கருத்தில் கொண்டு அவற்றைப் பிற மாவட்டங்களுக்குக் கொண்டு செல்வத்தை தடுக்க வேண்டும்" என்று முல்லைத்தீவு மக்கள் கோரிக்கை விடுத்தனர். (ற-500)

கொடுப்பனவை அதிகரிக்குமாறு முன்பள்ளி ஆசிரியர்கள் கோரிக்கை

யாழ்ப்பாணம், மே 21
வடக்கு மாகாண கல்வி அமைச்சின் கீழ் உள்ள முன்பள்ளி ஆசிரியர்களுக்கு 6 ஆயிரம் ரூபா கொடுப்பனவு வழங்குவது என்று வடக்கு மாகாண சபையில் தீர்மானிக்கப்பட்டுள்ளபோதும் இன்று வரை 4 ஆயிரம் ரூபாமட்டுமே வழங்கப்படுகின்றது என்று முன்பள்ளி ஆசிரியர்கள் தெரிவித்தனர்.
"வன்னியில் கிளிநொச்சி, முல்லைத்தீவு மாவட்டங்களில் உள்ள பெரும்பாலான முன்பள்ளி ஆசிரியர்கள் இந்தச்சிறு கொடுப்பனவுக்குப் பணியாற்ற முடியாதுள்ளது. வறுமையின் காரணமாக இராணுவத்தின் கீழ் இயங்கும் சிவில் பாதுகாப்புப் படைப்பிரிவின் முன்பள்ளிகளில் இணைய வேண்டிய கட்டாயம் ஏற்படுகின்றது. சிவில் பாதுகாப்புப் படையின் கீழ் இயங்கும் முன்பள்ளிகளில் கற்பிக்கும் ஆசிரியர்களுக்கு 28 ஆயிரம் ரூபா கொடுப்பனவு வழங்கப்படுகின்றது. படை நிர்வாகத்தின் கீழ் செயற்பட விரும்பாத ஆசிரியர்களுக்கு இப்போது வரை வடக்கு மாகாண சபை 4 ஆயிரம் ரூபாவே வழங்குகின்றது.
வடக்கு மாகாண சபை அனுமதித்த 6 ஆயிரம் ரூபாவை முன்பள்ளி ஆசிரியர்களுக்கு வழங்க ஆவண செய்ய வேண்டும். அனுமதிக்கப்பட்ட காலத்தில் இருந்து இது வரை வழங்கப்படாதுள்ள 2 ஆயிரம் ரூபாவின் மொத்த நிலுவையையும் ஆசிரியர்களுக்கு வழங்க வேண்டும். முள்பள்ளி ஆசிரியர்களின் குடும்ப வாழ்வாதாரத்தைக் கருத்தில் கொண்டு வடக்கு மாகாண கல்வி அமைச்சும், வடக்கு மாகாண சபையும் இது தொடர்பில் விரைந்து நடவடிக்கை எடுக்க வேண்டும்." என்று அவர்கள் தெரிவித்தனர்.
"வடக்கு மாகாண கல்வி அமைச்சின் கீழ் தற்போது 2 ஆயிரத்து 200 ஆசிரியர்கள் உள்ளனர். அவர்களுக்கு மாகாண கல்வி அமைச்சு கொடுப்பனவுகளை வழங்குகின்றது. முன்பள்ளிகளை நடத்தும் நிறுவனங்கள் அல்லது அமைப்புகளுக்கு 2 ஆயிரம் ரூபா வழங்கப்படுகின்றது. ஆசிரியர்களுக்கு 4 ஆயிரம் ரூபாவழங்கப்படுகின்றது. அவர்களுக்கு 6 ஆயிரம் ரூபா கொடுப்பனவு என்பது வடக்கு மாகாண முன்பள்ளி நியதிச் சட்டத்தில் பரிந்துரைக்கப்பட்ட கொடுப்பனவாகும்.
2017 ஆம் ஆண்டு முதல் 6 ஆயிரம் ரூபா கொடுப்பனவு வழங்கவே தீர்மானித்திருந்தோம்.
அது வரவு -செலவுத் திட்டத்தில் அனுமதிக்கப்படவில்லை. அதற்கான நிதியைப் பெறுவதில் எமக்கு நெருக்கடி ஏற்பட்டது.
அடுத்த ஆண்டிலாவது அவர்களுக்கான கொடுப்பனவை 6 ஆயிரம் ரூபாவாக அதிகரிக்க வேண்டும் என்று கல்வி அமைச்சர் கூறியுள்ளார். அதற்கான முயற்சிகள் எடுக்கப்படுகின்றன" என்று வடக்கு மாகாண கல்வி அமைச்சின் செயலாளர் இ. இரவீந்திரன் தெரிவித்தார். (ற-101)

வீதி விபத்துக்களைக் கட்டுப்படுத்தும் வகையில் மறுமலர்ச்சிக்கான சர்வ மதப் பேரவையும், யாழ்ப்பாண றோட்டறிக் கழகமும் இணைந்து விழிப்புணர்வுச் செயற்றிட்டத்தை யாழ். நகரில் மேற்கொண்டனர். விழிப்புணர்வு வாசகங்கள் அடங்கிய "ஸ்ரிக்கர்" வாகனங்களில் ஒட்டப்பட்டன. (ற)

கடவையை அகற்றியமைக்கு பொதுமக்கள் கடும் எதிர்ப்பு

சாவகச்சேரி, மே 21
விபத்து ஏற்படக் காரணமாக இருந்த கடவைப் போக்குவரத்தை இலங்கை தொடருந்து திணைக்களத்தினர் தடை செய்தனர். அந்தப்பகுதி மக்கள் தமக்குப் பாதை ஏற்படுத்தித் தர வேண்டும் என்று திரண்டு போராட்டம் நடத்தினர். நேற்றுமுன்தினம் சாவகச்சேரி வைத்தியசாலைக்கு அண்மையில் இந்தச் சம்பவம் நடந்தது.
கடந்த 12 ஆம் திகதி இராணுவத் தினரின் வாகனம் ஒன்று தொடருந்துடன் விபத்துக்குள்ளானது. பாதுகாப்பற்ற வகையில் அமைக்கப்பட்டிருந்த வழியூடாக வாகனம் பயணித்த போதே அது விபத்துக்குள் ளானது.
அந்த பாதுகாப்பற்ற தற்காலிக வழி பொதுமக்களால் அமைக்கப்பட்டிருந்தது. அந்தப் பாதையூடான போக்குவரத்தை ஏற்கனவே தொடருந்துத் திணைக்களத்தினர் தடை செய்திருந்தனர்.
நேற்றுமுன்தினம் அங்கு வந்த திணைக்கள அதிகாரிகளும், பணியாளர்களும் அந்தக் கடவையூடான போக்குவரத்தை முற்றாகத் தடை செய்யும்வகையில் கம்பிகளை நட முற்பட்டனர். அங்கு குவிந்த மக்கள் தமக்கு பாதை வேண்டும் என்று போராட்டம் நடத்தினர். இது தொடர்பில் பொலிஸாருக்குத் தகவல் வழங்கப்பட்டது. சாவகச்சேரிப் பொலிஸார் சம்பவ இடத்துக்குச் சென்று பொது மக்களுடன் கலந்துரையாடினர். அதன்பின்னர் அந்த தற்காலிகக் கடவையூடாகப் போக்குவரத்துச் செய்ய முடியாதவாறு இரும்புக் கம்பிகள் நடப்பட்டு போக்குவரத்துத் தடை செய்யப்பட்டது.
நீண்டகால மாக பொதுமக்களால் பயன்படுத்தப்பட்ட சம்பச்சிமாவடிப் பிள்ளையார் கோயில்வீதிக்கடவை புதிதாகத் தண்டவாளம் பொருத்தும் போது அகற்றப்பட்டது. பின்னர் அதில் கடவை அமைக்கப்படவில்லை. கடவை அமைக்க வேண்டும் என்று பொதுமக்கள் போராட்டம் நடத்தியபோதும் அது பலனளிக்கவில்லை. அதையடுத்து பொதுமக்கள் கிரவல் பறித்துதற்காலிகக்கடவை அமைத்து போக்குவரத்து மேற்கொண்டனர். அதனூடாகப் பயணித்த இராணுவ வாகனமே தொடருந்துடன் விபத்துக்குள்ளானது. (ற-9)

1985ம் ஆண்டிலிருந்து இன்று வரையான
தனித்துவமிக்கதொரு பயிற்சி நிலையம்
யாழ். கலாலயா பயிற்சியகம்
விக்ரோறியா வீதி, யாழ்ப்பாணம்.
(யாழ். போதனா வைத்தியசாலை பின் புற வீதி)

மகளிருக்கான 3 மாத பயன்மிகு பயிற்சிகள் ஆரம்பமாகின்றன!
✌ கேக் ஐசிங் – றோயல், Parchment, Frosting, Fondant, Whipping Cream Icing, மாச்சீனி மலர்கள். (Sugar Flowers).
✌ உணவு தயாரித்தல் – உணவு வகைகள், 6 வகையான Cakes, Cup Cake மற்றும் பீஸா, சிற்றுண்டிகள் குளிர்பானங்கள், ஐஸ் கிறீம், புடிங் தயாரித்தல்.
✌ கூந்தல் வடிவமைப்புகளும் முடி சீராக்குதலும்
40 வகையான கொண்டைகள் போடுதல், முடி அயன் செய்தல், முடி சுருட்டுதல், Hair Colouring, முடி வெட்டுதல், Hair Perming.

✌ FACIALS (முக அழகுக்கலை)
Pedicure, Manicure, Nail Art, கண் புருவம் சீராக்குதல் (Eye Brow Threading), தேவையற்ற முடிகளை அகற்றுதல் (Waxing)
✌ BRIDAL DRESSINGS
(மணப்பெண் அலங்காரங்கள்) இந்து, கிறிஸ்தவ இஸ்லாம் மணப்பெண் அலங்காரமும் Modern, கூர்க்காஸ், சிங்கப்பூர் குஜராத்தி, மடிசார், சிங்கள முறையிலான சேலை அணியும் முறைகள்.
பயிற்சிகளின் முடிவில் சான்றிதழ் வழங்கப்படும்.
✌ பிளவுஸ், சாறி பிளவுஸ், சுரிதார், மற்றும் மகளிருக்கான ஆடைகள் தைக்கும் கிழமைநாள் தையல் பயிற்சிகள்.

பயிற்சிகள் யாவும் பலவருட அனுபவமிக்க எமது ஆசிரியைகளினால் சிறந்த முறையில் பயிற்றுவிக்கப்படும்!
கிழமை நாள் புதிய பிரிவுகள் ஆரம்பம் 24-05-2017
புதன் காலை 10.00 மணி
சனி, ஞாயிறு புதிய பிரிவுகள் ஆரம்பம் 27-05-2017
சனி காலை 10.00 மணி
மேலும் விபரங்களை நேரில் அறிந்து கொள்ளலாம்
-இயக்குநர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மிகப் பழமைவாய்ந்த ஆலயம் கிளிநொச்சியில் கண்டுபிடிப்பு

யாழ்ப்பாணம், மே 21
கிளிநொச்சி, திருமங்களாய் பகுதியிலுள்ள ஆலயத்தில் 11ஆம் நூற்றாண்டு கால சாசனங்கள் ஆறு இனங்காணப்பட்டுள்ளன என்று யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத் தொல்லியல் துறைப் பேராசிரியர் புஸ்பரட்ணம் தெரிவித்தார்.
சாசனங்களை பகுப்பாய்வு செய்து வாசித்தல் தொடர்பில் மாணவர்களுக்கு விளக்கமளிக்கும் 10 நாள் செயலமர்வில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் தெரிவித்தார்.
யாழ்ப்பாணப் பல்கலைக்கழக வேந்தர் பேராசிரியர் பத்மநாதன் தலைமையில் யுரோவில் பொது மண்டபத்தில் செயலமர்வு நடைபெற்றது.
அவர் தெரிவித்தாவது:
இந்த ஆலயம் கிளிநொச்சிப் பிரதான வீதியில் இருந்து 9 கிலோ மீற்றர் தூரம் பயணிக்கும் போது காட்டுப்புறப்பகுதியில் அமைந்துள்ளது. 1964 ஆம் ஆண்டு காலப்பகுதியில் 250 குடும்பங்கள் அந்தப் பகுதியில் வாழ்ந்தன என அறிகிறேன். 1983ஆம் ஆண்டு காலப்பகுதியில் இடம்பெற்ற இனக் கலவரத்தின்போது இது எல்லைக் கிராமமாக அமைந்திருந்தமையால் மக்கள் இடம்பெயர்வை சந்தித்தனர். இந்தப் பகுதியிலே அழிவடைந்த நிலையில் இந்து ஆலயம் ஒன்று இருந்தது என்று தொல்லியல் திணைக்களத்தில் பணியாற்றும் ஒரு உத்தியோகத்தர் எமக்குத் தகவல் வழங்கியிருந்தார். மத்திய கலாசாரத்தியத்தின் வேலை ஆள்களின் உதவியோடு குறித்த பகுதிக்கு நாங்கள் சென்று ஆலயத்தைக் கண்டுபிடித்தோம். ஆலயத்திலே கர்ப்பக்கிரக முன்பகுதி அழிவடைந்து ஒரு சிறிய பள்ளமாகக் காணப்பட்டது. கர்ப்பக்கிரகத்துக்கு முன்னர் அந்தராளம் ஒருமுக மண்டபம், பலிபீடம், கொடித்தம்பம் என்பன காணப்படுகிறன.
ஆலயத்தைச் சுற்றி சுற்றுமதில் ஒன்றின் அத்திபாரம் காணப்பட்டதற்கான அடையாளங்கள் காணப்படுகின்றன. உப தெய்வங்கள் சுற்றுப்புறத் தெய்வங்கள் இருந்தமைக்கான அடையாளங்கள் காணப்படுகின்றன. ஆலயத்துக்கு அருகில் கருங்கற்களைக் கொண்டு அமைக்கப்பட்ட கேணி ஒன்றும் இருந்தமைக்கான அடையாளங்கள் காணப்பட்டன. ஆலயத்துக்கு அப்பால் பொதுமக்கள் பயன்படுத்தும் வகை யான கிணறு ஒன்றும் காணப்பட்டுள்ளது.
எனக்குக் கிடைத்த தகவலின்படி இங்கு காணப்பட்ட சிவலிங்கம் வேறொரு இடத்தில் வைக்கப்பட்டுள்ளது என்று அறிகிறேன். அண்மையில் பேராசிரியர் பத்மநாதன் மண்முனை என்ற இடத்துக்குச் சென்ற போது இந்த ஆலயத்துக்கு உபயோகத்துக்குப் பத்தன் என்பவரால் கொடுக்கப்பட்ட மணி ஒன்றை படம்பிடித்து அதில் காணப்பட்ட சாசனத்தை வாசித்துள்ளார். 16ஆம் 17ஆம் நூற்றாண்டைச் சேர்ந்தது என்று பேராசிரியர் குறிப்பிடுகின்றார். 20ஆம் நூற்றாண்டு வரை வழிபாட்டிலிருந்து பின்னர் அழிவடைந்திருக்கலாம் எனக் கூறப்பட்ட சிற்பங்கள் தூண்கள் என்பவற்றை மேலும் ஆய்வுக்கு உட்படுத்த வேண்டியதேவை உள்ளது. அதில் காணப்படும் கலை மரபுகள் பொலநறுவை 2ஆம் சிவாலயத்தை ஒத்ததாகக் காணப்படுகின்றது.
ஆலயத்தில் கருங்கற்கள் பெருமளவில் பயன்படுத்தப்பட்டு கட்டப்பட்டுள்ளன. நான், வடக்கு - கிழக்கு எனப் பல்வேறு மாகாணங்களில் ஆய்வு நடத்தியவன் என்ற ரீதியில் இவ்வளவு அதிகளவு செங்கட்டிகளையும் கருங்கற்களையும் பயன்படுத்திக் கட்டப்பட்ட ஆலயம் ஒன்றையும் காணவில்லை என்று சொல்லலாம்.
ஆலயத்தில் ஐந்து கல்வெட்டுக்கள் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன. ஐந்து கல்வெட்டிலே மூன்று கல்வெட்டுக்கள் 11ஆம் நூற் றாண்டைச் சார்ந்தவை என்று கருதுகிறோம். அந்த மூன்று கல்வெட்டிலே இரண்டு கல்வெட்டுக்கள் ஓரளவு வாசிக்கக் கூடியதாகக் காணப்படுகின்றன. முதலாவது தூண் கல்வெட்டிலே வேழ திருவெண்ணை முற்ற காசு ஒன்று என்று எழுதப்பட்டுள்ளது. அதாவது ஆலயத்துக்குத் தானமாகக் காசு வழங்கப்பட்ட செய்தி சொல்லப்படுகிறது. மற்றைய கல்வெட்டிலே திருச்சிற்றம்பலமுடையான் திருவரங்க தேவனுக்கு ஸ்ரீபதியாக தேவர்களுடைய கடன்பத்து என்று கூறப்பட்டுள்ளது. மற்றைய இரண்டு கல்வெட்டுக்கள் 16,17 ஆம் நூற்றாண்டுகளைச் சார்ந்தவை என்று குறிப்பிடப்படு கின்றது.
அதை இந்திய கல்வெட்டு சார்பான அறிஞர் 15 , 16ஆம் நூற்றாண்டுக்கானவை எனக் குறிப்பிடு கின்றார். முதலாவது 11ஆம் நூற்றாண்டாகவும் மற்றையது 15,16ஆம் நூற்றாண்டு எனக் கூறப்பட்டுள்ளன. சிறு கால வேறுபாடுகள் காணப்பட்டாலும், அவற்றில் 34 பசுக்கள் 24 பசுக்கள் 14 பசுக்கள் தானமாகப் பெறப்பட்ட செய்திகள் சொல்லப்படுகின்றன.
வரலாற்றில் மிக முக்கியமாக வழிபாட்டு மரபைக் கொண்ட ஆலயம் என்ற கல்வெட்டுக்களுடனும் சாசனங்களுடனும் கண்டுபிடிக்கப்பட்டமை மிக முக்கியம் வாய்ந்தது. அங்கு மீட்கப்பட்டிருக்கும் ஆலயம் தமிழர்களின் தொன்று தொட்ட வரலாற்றுக்கும் தமிழர் மதத்துக்கான தொன்மையையும் அப்படியே வெளிக்காட்டி விடுவது தமிழர்களின் நீண்ட வரலாற்றுக்கு புது வெளிச்சம் ஒன்றை பாய்ச்சி இருக்கின்றது.
மீண்டும் எதிர்வரும் 2ஆம் 3ஆம் திகதிகளில் அவ்விடத்துக்குப் போவதற்கான அனுமதியை இந்து கலாசார அமைச்சர் சுவாமிநாதன் வழங்கியிருக்கிறார்.
அதற்குப் பல்வேறு தரப்பினரின் உதவிகள் தேவைப்படுவதால் மீண்டும் அந்த இடத்துக்குச் சென்று கல்வெட்டுக்களைப் படியெடுப்பதற்கான நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளோம். என்றார். (ற-09)

தாக்குதலுக்குள்ளான பிரதேசங்களை பார்வையிட்டார் அமைச்சர் ரிசாத்

கொழும்பு, மே 22
இனந்தெரியாதவர்களால் தாக்குதலுக்குள்ளான தோப்பூர், செல்வநகர், நினாய்கேணி பிரதேசங்களுக்குச் சென்ற அகில இலங்கை மக்கள் காங்கிரசின் தலைவரும், அமைச்சருமான ரிசாத் பதியுதீன் நிலைமைகளை ஆராய்ந்தார். கடந்த வெள்ளிக்கிழமை மாலை அவர் அந்தப் பகுதிகளுக்குச் சென்றார் என்று தெரிவிக்கப்பட்டது.
இந்தக் கிராமங்களில் வாழும் முஸ்லிம் மக்கள் மீது கடந்த செவ்வாய்க்கிழமை இனந்தெரியாதவர்கள் தாக்குதல் நடத்தினர் என்று தெரிவிக்கப்படுகின்றது.
"நினாய்க்கேணியில் 127 பேருக்குச் சொந்தமான சுமார் 49 ஏக்கர் காணிகள் இருக்கின்றன. இந்தப் பகுதியில் 47 வீடுகள் அமைந்திருக்கின்றன. இவை எமது பூர்வீகக்காணிகள்.

இங்கு வாழ்ந்து வரும் நாங்கள் எமது நிலங்களில் விவசாயம் செய்து வருகின்றோம். எமக்குச் சொந்தமான காணிகள் தொல்பொருள் திணைக்களத் துக்கு சொந்தமாக்கப்பட்டுள்ளன எனக் கூறப்படுகின்றது.
எங்களை இந்த இடத்திலிருந்து வெளியேற்றிவிட்டு எமது கிராமத்துக்கு தொலைவில் அமைந்திருக்கும் பன்சல ஒன்றுக்கு இந்தக் காணிகளை பெற்றுக்கொடுப்பதே இனவாதிகளின் நோக்கமாகும்"
என்று அமைச்சரிடம் நினாய்க்கேணி மக்கள் கவலை வெளியிட்டனர்.
சம்பவங்களையும், விவரங்களையும் கேட்டறிந்து கொண்ட அமைச்சர் ரிஷாத் பதியுதீன், கல்வி அமைச்சர் அகிலவிராஜ் காரியவசத்துடன் தொடர்புகொண்டு நிலைமைகளை எடுத்துக் கூறினார். இவ்வாறான செயற்பாடுகளைத் தடுத்து நிறுத்த நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றும் கோரினார் என்று தெரிவிக்கப்பட்டது. (ற)

கடவுள் நினைக்கும்போது தமிழருக்குத் தீர்வு கிட்டும்

இராஜாங்க அமைச்சர் விஜயகலா கூறுகின்றார்

யாழ்ப்பாணம், மே 22
தீர்வு விரைவில் கிடைக்கும் என்று எண்ணியிருந்தோம். ஆனால் தற்போதைய நிலைமையில் தீர்வு எப்போது கிடைக்கும் என்பது தெரியாத நிலைமையே காணப்படுகின்றது. கடவுள் எப்போது நினைக்கின்றாரோ அன்றே எமக்குத் தீர்வு கிடைக்கும்.
இவ்வாறு தெரிவித்தார் இராஜாங்க அமைச்சர் விஜயகலா மகேஸ்வரன்.
நேற்றுமுன்தினம் கிளிநொச்சி கண்டாவளை பிரதேச செயலக பிரிவில் இடம்பெற்ற நிலமெஹெவர அரச தலைவர் மக்கள்சேவை தேசியநிகழ்ச்சி திட்டத்தில் கலந்துகொண்டு உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.
அவர் தெரிவித்ததாவது
நாங்கள் தீர்வு தீர்வு என்று எப்போதும் நினைத்துக் கொண்டிருக்காமல் போரின் வடுவில் இருந்து வெளியேற முயற்சிக்க ணேடும். கடந்த காலத்தை எப்போதும் நினைத்துக் கொண்டிருந்தால் அதிலிருந்து மீள முடியாது.
போரின் பின்னர் அடிப்படை வசதிகளை நாம் ஏற்படுத்திக் கொள்ள வேண்டும். அபிவிருத்தி அவசியமானது. வடக்கு, கிழக்கு மாகாணங்கள் அதிகம் போரால் பாதிக்கப்பட்டுள்ளன. இந்த மாகாணங்களில் உள்ள ஒவ்வொரு குடும்பத்தினரும் ஏதோ ஒரு வகையில் பாதிக்கப்பட்டுள்ளனர்.
அமைச்சர் வஜிர அபேயவர்த்தன விடுதலைப்புலிகளின் காலத்திலும் கூட இங்கு வந்து சென்றிருக்கின்றார். அவர் சிறுபான்மை மக்களின் பிரச்சினைகளை நன்கு தெரிந்தவர். எதிர்காலத்தில் நாளைய அரசியல் தலைவர்களை தெரிவு செய்கின்ற போது மக்கள் நிதானமாக தெரிவு செய்ய வேண்டும். இல்லையேல்மீண்டும்வீதிக்கு செல்ல வேண்டிய நிலை உருவாகும். நல்லாட்சி அரசில் துரோகிகளுக்கும், இனவாதிகளுக்கும் இடம்கொடுக்க கூடாது. என்றார். (ற)

அரச தலைவர் மக்கள் சேவையின் இரண்டாம் நாள் நிகழ்வுகள்

கிளிநொச்சி, மே 22
அரச தலைவரின் மக்கள் சேவை (நிலமெகவர) நடமாடும் சேவையின் இரண்டாவது நாள் நிகழ்வுகள் கிளிநொச்சி பச்சிலைப்பள்ளி பிரதேச செயலாளர் பிரிவில் நேற்று நடைபெற்றன.
நிகழ்வுகள் பச்சிலைப்பள்ளி பளை மத்திய கல்லூரி மண்டபத்தில் காலை 9 மணியளவில் ஆரம்பமானது. உள்நாட்டு அலுவல்கள் அமைச்சர் வஜிர அபேவர்த்தனதலமையில் இடம்பெற்ற இந்த நிகழ்வில் பச்சிலைப்ப்ள்ளி பிரதேசத்துக்குட்பட்ட மக்களின் பல்வேறு தேவைகள் நிறைவேற்றப்பட்டன. தம்பதியினருக்கு பிந்திய திருமண பதிவு இடம்பெற்றது. அவர்களுக்கான சாட்சிபத்திரத்தில் அமைச்சர் மற்றும் ராஜாங்க அமைச்சர்கள் கையொப்பமிட்டனர்.
இந்த நிகழ்வில் உள்நாட்டு அலுவல்கள் அமைச்சர் வஜிர அபேவர்தன, இராஜாங்க அமைச்சர் விஜயகலா, வடமாகாண சபை உறுப்பினர் தவநாதன், மாவட்ட செயலாளர், திணைக்களம் சார் அதிகாரிகள் பிரதேச செயலாளர்கள் உட்படப் பலர் கலந்து கொண்டனர். (ற-6)

வாள்வெட்டுச் சம்பவம்: சந்தேகநபருக்கு மறியல்

சாவகச்சேரி மே.22
மந்துவில்பகுதியில்இடம்பெற்ற வாள்வெட்டுச் சம்பவத்துடன் தொடர்புடைய நபரை விளக்கமறியலில் வைக்குமாறும், இந்த நபரை அடையாள அணிவகுப்பில் நிறுத்த ஏற்பாடுகள் மேற்கொள்ளுமாறும் சாவகச்சேரி நீதிமன்ற நீதிவான் உத்தரவிட்டார்.
மந்துவில்பகுதியில் அண்மையில்இடம்பெற்றவாள்வெட்டுச் சம்பவத்தில் 20 வயது இளைஞருக்கு விரல் துண்டிக்கப்பட்டது. தோள், கால் பகுதியில் காயங்கள் ஏற்பட்டன. இளைஞன் சாவகச்சேரி வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டு மேலதிக சிகிச்சைக்காக யாழ்.போதனா வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டார்.
இந்தச் சம்பவம் தொடர்பாக தலைமறைவாகத் திரிந்த இளைஞர் ஒருவரை ஊர் மக்கள் கடந்த வெள்ளிக்கிழமை பிடித்து கொடிகாமம் பொலிஸாரிடம் ஒப்படைத்திருந்தனர்.
இந்த நபரைப் பொலிஸார் நேற்று முந்தினம் மாலை நீதிவான் முன்னிலையில் முற்படுத்தினர்.
வழக்கை விசாரித்த நீதிவான் எதிர்வரும் 2ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு உத்தரவிட்டதுடன் வெட்டுக்காயங்களுக்கு இலக்கானவர் இன்னமும் வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வருவதால் அடையாள அணிவகுப்பு நடத்த ஏற்பாடுகள் மேற்கொள்ளுமாறும் பொலிஸாருக்கு உத்தரவிட்டார். (ற-9)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கொழும்பை வந்தடைந்தது கனேடியப் போர்க்கப்பல்

கொழும்பு, மே 22

கனேடியக் கடற்படையின் போர்க்கப்பல் ஒன்று கொழும்பு துறைமுகத்தை நேற்று முன்தினம் வந்தடைந்தது.

எச்எம்சிஎஸ் வின்னிபெக் HMCS Winnipeg (FFH 338) என்ற றோயல் கனேடியக் கடற்படைப் போர்க்கப்பலே இலங்கைக்கு நல்லெண்ணப் பயணமாக வந்தடைந்துள்ளது.

இந்தப் போர்க்கப்பலுக்கு இலங்கைக் கடற்படையினர் பாரம்பரிய முறைப்படி வரவேற்பு அளித்தனர். இந்தோ ஆசிய பசுபிக் பிராந்தியத்தில் ஆறு மாதங்கள் தரித்து நிற்கவுள்ள கனேடியப் போர்க்கப்பல் எதிர்வரும் 25 ஆம் திகதி வரை கொழும்புத் துறைமுகத்தில் நங்கூரமிட்டிருக்கும். இலங்கைக் கடற்படையினருடன் இணைந்து, பல்வேறு பயிற்சிகள் மற்றும் விளையாட்டுகளிலும் கனேடியக் கடற்படையினர் ஈடுபடவுள்ளனர் எனத் தெரிவிக்கப்பட்டது. (ஐ-10)

5 ஆம் ஆண்டு நினைவஞ்சலி 22.05.2017

தோற்றம்
09 - 10 - 1972

மறைவு
22 - 05 - 2012

அமரர் செல்லத்துரை டேமியன்
(யாழ்.ப.நோ.கூ.ச.சிளை முகாமையாளர்)

அந்திரான் - சண்டிலிப்பாய்

குடும்பத்தினர்.

(அ.எண் 4090) (13)

09 ஆம் ஆண்டின் நிறைவினிலே

அமரர் திலகவதி கனகசபாபதி

நிஜமாய்
05.06.1949

நினைவாய்
01.05.2008

திதி: ஏகாதசி (22.05.2017)

சிரித்த முகத்துடன் அனைவரையும்
அரவணைக்கும் - அம்மாவே....
உங்கள் விரிந்த மனதுக்கு
ஈடிணையில்லையே - உங்கள்
பரிவான வார்த்தைகள் எம்மை
என்றும் வாழ வைக்கும் அம்மா....
என்றும் உங்கள் நினைவுடன்

"காவேரி"
உசன் மிருசுவில்.

குடும்பத்தினர்.

உ ஆம் ஆண்டு நினைவஞ்சலி

செல்வி
பொன்னம்பலம் கண்மணி

தோற்றம்
12.12.1936

மறைவு
12.06.2015

திதி: அபரபக்க ஏகாதசி

ஆயிரம் ஆயிரம் உறவுகள் வந்தாலும்
அம்மா எங்கள் பாசமுள்ள தாயே
உன் போலாகுமா?
ஈராண்டுகள் ஆனதம்மா
எங்களை எல்லாம்
தவிக்கவிட்டுச் சென்றீரே
காலங்கள் உருண்டோடினாலும்
எம் உயிர் பிரியும் நொடிவரை
உன் நினைவோ மாறாது உங்கள் அழகிய முகமும் புன் சிரிப்பும்
என்றும் எங்கள் கண்முன்னே நின்று நிழலாடுதம்மா
உங்கள் பிரிவாலே உங்கள் உறவுகள் படும் வேதனை அறியீரோ அம்மா!

உங்கள் ஆத்மா என்றும் சாந்தி பெறட்டும்

மண்டைதீவு - 06

குடும்பத்தினர்.

முதலாம் ஆண்டு நினைவஞ்சலி

அமரர் பாலரட்ணம் இராஜமோகன்

மண்ணுலகில்
30.05.1957

விண்ணுலகில்
17.05.2016

திதி: ஏகாதசி (22.05.2017)

பற்றுடன் கைபிடித்த பாசமலரையும் - அருகில்
இருந்து பாசமழை பொழிந்த மக்களையும் - மனதார
உறவு கொண்ட மருமக்களையும் - அன்புடன்
அரவணைத்த பேரப்பிள்ளைகளையும் மனமுருகி
கதறி அழவைத்து நீண்ட உறக்கம் கொண்டீரோ!
எம் அன்புத் தந்தையோ.....
மண்ணை விட்டு மறைந்தாலும் எம் மனதில் வாழ்கின்றீர்கள்
இன்றோடு ஓராண்டு அப்பா
உங்கள் ஆத்மா சாந்தி அடைய இறைவனை வேண்டுகின்றோம்.

RDS லேன்,
தாவடி.

குடும்பத்தினர்.

(AJA.4124) (13)

துயர்பகிர்வு

எமது வித்தியாலய ஆசிரியை
திருமதி தி.கேமலா
அவர்களின் அன்புத் தந்தை
அருளப்பு ஞானானந்தன்

அவர்களின் மறைவினால் துயருறும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதுடன் அவர்களின் ஆத்மா சாந்தியடையவும் பிரார்த்திக்கின்றோம்.

பாடசாலைச் சமூகம்
கிளி/இரணைதீவு றோ.க.த.வித்தியாலயம்.

மட்டக்களப்புக்கு ரூ.150 மில். பெறுமதியான அபிவிருத்தி திட்டங்கள்

செங்கலடி, மே22

கரையோரம் பேணல் மற்றும் கரையோர மூலவள முகாமைத் திணைக்களத்தால் மட்டக்களப்பு மாவட்டத்தில் கடந்த ஆறு ஆண்டுகளில் 150 மில்லியன் ரூபா செலவில் அபிவிருத்தித் திட்டங்கள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

மாவட்டத்திலுள்ள வாவிகள் எல்லையிடல், மீனவர்களின் வாழ்வாதாரத்தை மேம்படுத்தும் நோக்கில் தொழில் உபரணங்கள், மீன் விற்பனை நிலையம், இலகு தவணைக் கடன், விவசாயம் பொருளாதாரத்தை முன்னேற்றுவதற்கான உதவிகள், சுற்றுலாத்துறையை மேம்படுத்தும் நோக்கில் படகுச் வேவை என்பன இந்தத் திட்டத்தில் உள்ளடக்கப்பட்டுள்ளன.

இந்தத்திட்டங்களுக்கு விவசாய அபிவிருத்திக்கான பன்னாட்டு நிதியம் மற்றும் உலக ளாவிய சுற்றாடல் ஏற்பாடு என்பன நிதியுதவி வழங்கியுள்ளன.

கோறளைப்பற்று வடக்கு பிரதேசத்தினுள்ள 2 ஆயிரத்து 600 ஹெக்ரெயர் வாவி 6 மில்லியன் ரூபா செலவில் எல்லையிடப்பட்டுள்ளது. 3 மில்லியன் ரூபா செலவில் எல்லையிடப்பட்ட பகுதியில் வாவி முகாமைத்துவ குழுக்கள் உருவாக்கப்பட்டுள்ளன.

போர் மற்றும் ஆழிப்பேரலை இடரால் அதிகம் பாதிப்புக்குள்ளான வாகரை பிரதேசத்தில் 80 மில்லியன் ரூபா செலவில் மேற்கொள்ளப்பட்ட அபிவிருத்தித் திட்டங்களை மக்களிடம் கையளிக்கும் நிகழ்வு நேற்று முன்தினம் பனிச்சங்கேணி மற்றும் வாகரை கிராமங்களில் நடைபெற்றன என்று தெரிவிக்கப்பட்டது. (ற-ய-47)

இரு தீபங்களின் ஆண்டு நினைவு

10 ஆம் ஆண்டு நினைவு

பிறப்பு
15 - 10 - 1935

இறப்பு
19 - 12 - 2006

அமரர்
கந்தையா சண்முகம்
திதி: தேய்பிறை சதுர்த்தசி

" மாற்றம் எதையும் மாற்றும்
மாற்றம் மட்டும் மாறாது,

01 ஆம் ஆண்டு நினைவு

பிறப்பு
27 - 03 - 1945

இறப்பு
(கேமலா)
02 - 06 - 2016

அமரர் சண்முகம் புஸ்பவதி
(குஞ்சுக்கிளி)
திதி: தேய்பிறை திரயோதசி

ஏற்றம் தந்த தாய் தந்தை
அன்பும் என்றும் மாறாது"

அவர்களின் ஆண்டு நினைவு நிகழ்வுகள் நாளை (23.05.2017) செவ்வாய்க்கிழமை மு.ப. 10.00 மணியளவில் அவர்களின் இல்லத்தில் நடைபெற இருப்பதனால் தாங்கள் தங்கள் குடும்ப சகிதம் வருகை தந்து அவர்களின் ஆத்ம சாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதிய போசனத்திலும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

நதியா நகை மாடம் (தவம்)
புதிய நதியா நகை மாடம் (மண்கும்பானூர் கண்ணன்)
321,323, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.

உங்களால் ஏற்றம் காணும்
குடும்பத்தினர்.

23 ஆம் ஆண்டு நினைவஞ்சலி

அமரர் அம்பிகாபதி பாலசுந்தரம்

(தலைவர் - வடக்கு - கிழக்கு மாகாண உள்-ளூராட்சி எழுதுவினைஞர் சங்கம், வவுனியா நகரசபை உள்ளகக் கணக்காய்வாளர்)

மண்ணில்
12.12.1941

விண்ணில்
22.05.1994

இருபத்து மூன்று ஆண்டுகள் அகன்று விட்டபோதும்
அன்றென எண்ணிடும் வேளையில்
எங்கள் நெஞ்சம் கலங்குகின்றது அப்பா!
என்றும் எங்கள் நினைவில் வாழும் தெய்வம்
நீங்கள் மட்டுமே அப்பா!
ஆண்டவன் அடியில் சாந்திபெற பிரார்த்திக்கின்றோம்.

மனைவி - விக்னேஸ்வரி
பிள்ளைகள் - ரேவதி, சுரேஸ், பாலினி, அகிலன்
மருமக்கள் - பேரப்பிள்ளைகள்.

ஆனைக்கோட்டை

(ஆ.4113) (13)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆந்திர மாநில அரசுக்கு 500 ஏக்கர் காணிகள்

இலங்கை அரசு வழங்கும்

கொழும்பு, மே 22

தொழிற் பூங்காவை உருவாக்குவதற்காக இந்தியாவின் ஆந்திர மாநில அரசுக்கு 500 ஏக்கர் காணிகளை வழங்குவதற்கு இலங்கைஅரசுமுன்வந்துள்ளது.

கடந்த வெள்ளிக்கிழமை ஆந்திர முதல்வர் சந்திரபாபு நாயுடுவோடு, அரச தலைவர்மைத்திரிபாலவும், தலைமை அமைச்சர் ரணில் விக்கிரமசிங்கவும் தொலைபேசியூடாகதொடர்பு கொண்டு பேசியபோது இலங்கை அரசு எடுத்த முடிவை அறிவித்தனர்.

கடந்த ஜனவரி மாதம் இலங்கைக்குப் பயணம் மேற்கொண்டிருந்த ஆந்திர முதல்வர் சந்திரபாபு நாயுடு, சமர்ப்பித்த திட்ட முன்மொழிவுக்குப் பதிலளிக்கும் வகையிலேயே இலங்கை அரசு 500 ஏக்கர் காணிகளை வழங்க முன்வந்துள்ளது என்று ஆந்திர முதல்வரின் சிறப்புப் பணி அதிகாரியான ஸ்ரீனிவாசராவ் புதுடெல்லியில் தெரிவித்தார்.

இந்தத் திட்டம் தொடர்பாக இலங்கை அரசுடன் கலந்துரையாடுவதற்காக தொழில்த் துறை தலைவர்கள் மற்றும் அதிகாரிகளைக் கொண்ட குழுவொன்று கொழும்புக்கு அனுப்பப்படும் என்று சந்திரபாபு நாயுடு அரச தலைவர் மைத்திரிபாலவுக்கு தெரிவித்துள்ளார்.

இந்திய மாநிலம் ஒன்றுக்கு இலங்கையில் தொழில்த் துறை வலயத்தை உருவாக்குவாக்குவதற்கு இலங்கை அரசு அழைப்பு விடுத்துள்ளமை இதுவே முதல்முறையாகும்.

(ற-10)

முஸ்லிம் எம்.பிக்கள் சுயாதீனமாக செயற்படுவது தொடர்பில் தீர்மானம்

கொழும்பு, மே 22

முஸ்லிம் நாடாளுமன்ற உறுப்பினர்கள் சுயாதீனமாகச் செயற்படுவது தொடர்பில் தீர்மானம் எடுக்கப்படும் என்று ஐக்கிய தேசியக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் முஜிபுர் ரக்மான் தெரிவித்தார்.

அவர் தெரிவித்ததாவது:

இன நல்லிணக்கத்துக்கு எதிராக சில நபர்களால் முன்னெடுக்கப்படும் இனவாதச் செயற்பாடுகளைத் தடுப்பதற்கு அரசு உரிய நடவடிக்கைகளை எடுக்காவிட்டால் சுயாதீனமாகச் செயற்படுவதற்கு தீர்மானம் எடுக்கப்படும். முஸ்லிம் நாடாளுமன்ற உறுப்பினர்கள் மேற்கொண்ட சந்திப்பின் போது இது தொடர்பான இணக்கப்பாடு எட்டப்பட்டுள்ளது.

கடந்த சில நாள்களாக முஸ்லிம்களின் பள்ளிவாசல்கள் மற்றும் வியாபார நிறுவனங்கள் ஆகியவற்றின் மீது நடத்தப்பட்ட 14 தாக்குதல் சம்பவங்கள் பதிவாகியுள்ளன. இந்தச் செயற்பாடு தொடருமானால் விரைவில் தீர்மானமொன்றுக்கு வரவேண்டி ஏற்படும் என்றார். (ஐ-10)

டெங்குக்கட்டுப்பாடு: 2,000 பேர் மீது வழக்கு

இரு நாள்களாக முன்னெடுக்கப்பட்ட சிறப்பு டெங்கு ஒழிப்பு நடவடிக்கைகளின் போது சுமார் 2ஆயிரம் பேருக்கு எதிராக வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்று தேசிய டெங்கு ஒழிப்புப்பிரிவின்சிறப்புவைத்தியநிபுணர்ப்ரஷீலாசமரவீரதெரிவித்தார். "கடந்த 18 மற்றும் 19 ஆம் திகதிகளில் டெங்கு அபாயம் நிலவும் 12 மாவட்டங்களில் சிறப்பு டெங்கு ஒழிப்பு நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டிருந்தன. இதில் 8 ஆயிரம் பேருக்கு சிவப்பு அறிவித்தல் விடுக்கப்பட்டுள்ளது. நாடு முழுவதிலும் சுமார் 48 ஆயிரம் பேர் டெங்குத் தொற்றால் பீடிக்கப்பட்டுள்ளனர். யாழ்ப்பாணம், திருகோணமலை, மட்டக்களப்பு, புத்தளம், உள்ளிட்ட பல மாவட்டங்களில் அதிக டெங்கு நோயாளர்கள் பதிவாகியுள்ளனர்." என்று அவர் குறிப்பிட்டார். (ற-10)

மரண அறிவித்தல்

திருமதி பொன்னு சின்னையா

தோற்றம் 31 . 08 . 1937

மறைவு 21 . 05 . 2017

இமையாணன் கிழக்கு உடுப்பிட்டியை பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி பொன்னு சின்னையா நேற்று (21.05.2017) ஞாயிற்றுக்கிழமை இறைபதமடைந்தார்.

அன்னார் காலஞ்சென்ற செல்லப்பா தங்கம்மா தம்பதியரின் புத்திரியும் காலஞ்சென்ற கிட்டினர் சின்னையா (ஓய்வு பெற்ற நகரக் காவலர்) அவர்களின் மனைவியும் கலாநிதி ஜெயலிங்கவதனி (Head Department of Animal Science, Faculity of Agriculture, University of Jaffna), அருள் (Swiss), அன்பழகன் (Net work Engineer, Dubai), அமிர்தசீலன் (Irrigation Engineer, Irrigation Department ,Vavuniya) ஆகியோரின் அன்பு தாயாரும் அனுராதா (ஆசிரியர் - கொழும்பு), தஷினா (முகாமைத்துவ உதவியாளர் - வவுனியா) ஆகியோரின் மாமியாரும் தரங்கினி, அபராஜித், ஆதித்யா ஆகியோருடைய பேர்த்தியாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

ஸ்ரீ முருகபவனம்,
இமையாணன் கிழக்கு,
உடுப்பிட்டி.

தகவல்:
குடும்பத்தினர்.

அன்பழகன் 0777346536
அமிர்தசீலன் 0771615252

மரண அறிவித்தல்



பிறப்பு 04 . 08 . 1936

இறப்பு 21 . 05 . 2017

அருளப்பு ஞானானந்தன்

நவாலி தெற்கைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட அருளப்பு ஞானானந்தன் நேற்று (21.05.2017) ஞாயிற்றுக் கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற அருளப்பு - புலோமினா தம்பதிய ரின் அன்பு மகனும், காலஞ்சென்ற நாகேந்திரம் - ஆசைப் பிள்ளை தம்பதியரின் மூத்த மருமகனும், விஜயதேவியின் அன்புக் கணவரும், காலஞ்சென்ற மரியானந் தம், அல்லேலுயா மற்றும் ஆரோக்கிய நாயகி ஆகியோரின் அன்புச் சகோதரனும், இராஜ நாயகி (ஆசிரியை யா/ மயிலிட்டி றோமன் கத்தோலிக்க பாடசாலை), லோறன்ஸ் (அன்றா பதிப்பகம்), ஹேமலா (ஆசிரியை கி/இரணைதீவு R.C பாடசாலை), சத்தியசீலன் (பான்சி கடை உரிமையாளர் நவாலி), கருணாகரன் (கிளிநொச்சி வைத்தியசாலை உளவளத்துணை ஆலோசகர்), நிர்மலா (கிளி/ பாரதிபுரம் ம.வி) ஆகியோரின் அன்புத் தந்தையும், ஆனந்த ராஜன் (புடைவை வியாபாரி - சங்கானை), சரினா (ஆசிரியை - கிளி/பரந்தன் இந்து ம.வி), திருச்செல்வம் (ஊழியர் இ.போ.ச - கோண்டாவில் சாலை), சாந்தினி, அமிர்தா (சாவகச்சேரி பிரதேச சபை) ஆகியோரின் அன்பு மாமனும், சஜீவன்போல், பவிசாளினி,டிலக்சியா, கிளின்ரன்போல், டியானி ஆகியோரின் அன்புப் பேரனும், அருட்சகோதரி - புறோத்மேரியின் சிறிய தந்தையும் ஆவார்.

அன்னாரின் இறுதி சடங்கு இன்று (22.05.2017) திங்கட் கிழமை பிற்பகல் 2.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று நவாலி சென்பீற்றர் தேவாலயத்தில் பிற்பகல் 3.00 மணிக்கு இரங்கல் திருப்பலி ஒப்புக்கொடுக்கப்பட்டு நவாலி சென் பீற்றர் சேமக் காலையில் நல்லடக்கம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

அரசடி வீதி,
(மடுமாதா ஒழுங்கை)
நவாலி தெற்கு, மானிப்பாய்.

தகவல்:
குடும்பத்தினர்.

077 1017 118 (4151) (13)

மரண அறிவித்தல்

உதிப்பு 07 . 08 . 1930

உதிர்வு 20 . 05 . 2017

திருமதி சரஸ்வதி செல்லத்துரை

சாவகச்சேரி, சப்பச்சிமாவடியைப் பிறப்பிடமாகவும் வதிவிடமாகவும் கொண்ட திருமதி சரஸ்வதி செல்லத்துரை 20.05.2017 சனிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான செல்லையா - தங்கமுத்து தம்பதிகளின் அன்பு மகளும், காலஞ்சென்றவர்களானகுமாரசிங்கம்-தெய்வானைப்பிள்ளைதம்பதிகளின்அன்புமருமகளும், காலஞ்சென்ற செல்லத்துரையின் அன்பு மனைவியும், காலஞ்சென்றவர்களான செல்வராணி செல்வரத்தினம், செல்வமலர் செல்வபூபதி மற்றும் செல்வநாதன் (கனடா), செல்வேந்திரம் (ஜேர்மனி) ஆகியோரின் பாசமிகு தாயாரும், சிவஞானமூர்த்தி மகேஸ்வரி, அமுதி (கனடா), சந்திரா (ஜேர்மனி) ஆகியோரின் அன்பு மாமியாரும், லஷ்மன், மிதுனா, சர்மிளா, தனுஷா, தமிழினி, யாழினி , ஆதி,கார்த்தி, நிசாந்,தர்ஷி, பிரியனா ஆகியோரின் அன்புப் பேர்த்தியும், கஷகாயருள், ஆதுஷன், ஆதுஷா, ஆருயா ஆகியோரின் அன்புப் பூட்டியுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் 24.05.2017 புதன்கிழமை முற்பகல் 10 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக சாவகச்சேரி கண்ணாடிப்பிட்டி இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

சப்பச்சிமாவடி,
சாவகச்சேரி.

தகவல்
குடும்பத்தினர்.

(C/ 30065)(11)

திருமதி சத்தியபாமா (இராசமணி)
இராமலிங்கம்

புங்குடுதீவு 12 ஆம் வட்டாரத்தைப் பிறப்பிடமாகவும் 3 ஆம் வட்டாரம் மாரியம்மன் வீதியை வதிவிடமாகவும் கொண்ட திருமதி இராமலிங்கம் சத்தியபாமா (ராசமணி) 20.05.2017 சனிக்கிழமை காலமானார்.

அன்னார் இராமலிங்கத்தின் அருமைத் துணைவியாரும் காலஞ்சென்றவர்களான சின்னத்தம்பி - பாக்கியலட்சுமி தம்பதியரின் அன்பு மகளும் காலஞ்சென்ற யோகராஜா மற்றும் இரத்தினம், அப்புத்துரை, சிவராசா, கமலா ஆகியோரின் அன்புச் சகோதரியும் காலஞ்சென்றவர்களான கந்தையா சின்னத்துரை மற்றும் அப்புத்துரை, சின்னப்பொடி, வைத்திலிங்கம் ஆகியோரின் மைத்துனியும் குகேந்திரன், யோகேஸ்வரி, ரவீந்திரன் (ரவி) ஆகியோரின் பாசமிகு தாயாரும் சாந்தகுமாரி, ராதிகா ஆகியோரின் அன்பு மாமியாரும் லக் ஷிகன், லக் ஷியா, புகழ்ஜா, ஜீனுசன், கோபிகா, கோபிகன் ஆகியோரின் அன்புப் பேர்த்தியுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (22.05.2017) திங்கட்கிழமை காலை 10மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக மணற்காடு இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:
குடும்பத்தினர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிறுமி வன்கொடுமையை கண்டித்து ஆர்ப்பாட்டம்

நுவரெலியா, மே 22
நுவரெலியா கந்தப்பளை தேயிலை மலைத் தோட்டத்தைச் சேர்ந்த 16 வயதுச்சிறுமி ஒருவர் நால்வரால் கூட்டு வன்கொடுமைக்கு உட்படுத்தப்பட்ட சம்பவத்தைக் கண்டித்து நேற்றுக் காலை ஆர்ப்பாட்டம் நடத்தப்பட்டது.
மலையக ஆய்வாளர் அமைப்புடன் இணைந்த மீனாட்சி பெண்கள் பாதுகாப்பு அமைப்பின் ஏற்பாட்டில் கந்தப்பளை நகரில் இடம்பெற்ற ஆர்ப்பாட்டத்தில் சுமார் 300க்கு மேற்பட்ட ஆண்களும் பெண்களும் கலந்துகொண்டனர்.
கைது செய்யப்பட்ட சந்தேகநபர்களுக்கு அதிகூடிய தண்டனையான தூக்குத் தண்டனை வழங்கப்படவேண்டும் என ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டவர்கள் கோசமிட்டனர்.
பொலிஸாரின் தடையையும் மீறி ஆர்ப்பாட்டம் இடம்பெற்றது.
கடந்த 12 ஆம் திகதி 16 வயதான சிறுமி நால்வரால் வன்கொடுமைக்கு உட்படுத்தப்பட்டு மயக்கமடைந்த நிலையில் தேயிலைத் தோட்டத்திலிருந்து மீட்கப்பட்டார். சந்தேகநபர்கள் மயக்கமடைந்த சிறுமியை வாழை இலையால் மூடி விட்டுத் தப்பிச்சென்றிருந்தனர். (ற-ய-43)

ஆசிரியர்களின் மாற்றல்களை கிழக்கு ஆளுநர் நிறுத்தவில்லை

கிழக்கு மாகாண கல்விப் பணிப்பாளர் தெரிவிப்பு

எருவில், மே 22
கிழக்கு மாகாணத்தில் நடைபெற்ற ஆசிரியர் இடமாற்றத்தை ஆளுநர் நிறுத்திவிட்டார். என்று பத்திரிகையில் வெளியானது செய்தி முற்றிலும் பொய்யானது என கிழக்கு மாகாண கல்விப்பணிப்பாளர் ஏ.ரீ.எம்.நிசாம் தெரிவித்தார்.
2016ஆம் ஆண்டில் தரம் ஐந்து மாணவர்களுக்கு கற்பித்தல் நடவடிக்கைகளில் ஈடுபட்ட ஆசிரியர்களை கௌரவிக்கும் நிகழ்வு நிந்தவூர் அல் மஸ்கர் பெண்கள் பாடசாலையில் நடைபெற்றது. அதில் 72 ஆசிரியர்கள் கௌரவிக்கப்பட்டனர். நிகழ்வில் அதிதியாகக் கலந்துகொண்டு உரையாற்றியபோதே அவர் இதனைத் தெரிவித்தார்.
அவர் தெரிவித்ததாவது;
கல்முனை வலயம் என்பது பல்வேறு சவால்களுக்கும், விமர்சனங்களுக்கும் மத்தியில் சாதனை செய்து முன்னுக்கு வருகின்ற ஒரு வலயமாகும். இந்த வலயத்தில் உள்ள ஆளணி தொடர்பான தவறான பார்வை நீண்டகாலமாக இருந்து கொண்டு வருகின்றது.
சுமார் 10 வருட காலமாக எந்த ஒரு புதிய ஆசிரியரையும் தங்களது மாணவர்களுக்கு அறிமுகம் செய்யமுடியாத ஒரு வலயமாக இந்த வலயம் காணப்படுகின்றது. இதனை எவருமே கண்டு கொள்வதில்லை இன்று பட்டதாரிகள் ஆரம்பக் கல்வி மாணவர்களுக்கு கல்வியை கற்பிப்பதற்கு பயப்படுகின்றார்கள. ஆரம்பக் கல்வியைக் கண்டு பயந்து ஓடுகின்றார்கள். அந்தளவிற்கு மிகவும் கடினமான பணிதான் ஆரம்பக்கல்வி ஆசிரியர்களின் பணி. கிழக்கு மாகாணத்தில் இடம்பெற்ற ஆசிரியர் இடமாற்றங்களை ஆளுநர் இரத்துச் செய்திருக்கிறார் என பத்திரிகைகளில் வெளியான செய்தியில் எவ்வித உண்மைத் தன்மையும் இல்லை. என்றார். (ற-ய)

கொழும்புத் துறைமுகத்தில் தரித்தது இந்திய "சுமேதா

கொழும்பு, மே 22
இந்திய கடற்படைக்கு சொந்தமான போர்க் கப்பலான 'சுமேதா' கொழும்பு துறைமுகத்தை வந்தடைந்துள்ளது. இந்தக் கப்பல் எதிர்வரும் 24 ஆம் திகதிவரை கொழும்புத் துறைமுகத்தில் தரித்திருக்கும். இரண்டு நாடுகளுக்கும் இடையிலான சுமூக உறவை மேலும் வலுப்படுத்தும் நோக்கில் போர்க்கப்பல் கொழும்பு துறைமுகத்தை வந்தடைந்துள்ளது எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.
நேற்றுக் காலை கொழும்புத் துறைமுகத்துக்கு வந்த போர்க்கப்பலுக்கு இலங்கை கடற்படையினர் பாரம்பரிய முறைப்படி வரவேற்பு அளித்துள்ளனர். உத்தியோகபூர்வமாக நாட்டை வந்தடைந்துள்ள இந்த கப்பல் 3 நாள்கள் நாட்டில் நங்கூரமிடப்பட்டிருக்கும் எனவும், கடற்படையினரால் ஏற்பாடு செய்யப்பட்டிருக்கும் பல நிகழ்வுகளில் அதிலுள்ளோர் கலந்து கொள்ளவுள்ளனர் என்று தெரிவிக்கப்பட்டது.
கப்பலானது கடற்படையினரின் பயிற்சிக்காகவும் குறித்த காலப்பகுதியில் பயன்படுத்தப்படவுள்ளது என்றும் கடற்படை தெரிவித்துள்ளது. இந்த வருடத்தில் இதுவரைக்கும் பன்னாட்டு நாடுகளை சேர்ந்த 20 போர்க்கப்பல்கள் இலங்கைக்கு பயணம் மேற்கொண்டுள்ளன. (ற-10)

உளமார வாழ்த்துகிறோம்

Best Wishes
Best Wishes

18.05.2017 அன்று மாவட்ட நீதிபதி முன்னிலையில் சமாதான நீதிவானாகச் சத்தியப்பிரமாணம் செய்து கொண்ட சித்தங்கேணி, சிவன் கோவிலடியைச் சேர்ந்த நேர்மையும் பண்பும் நிறைந்த **உயர்திரு.வேலுப்பிள்ளை கணேசன்** (ஓய்வுநிலை தொழிநுட்ப உத்தியோகத்தர்) அவர்களை உளமார வாழ்த்துகிறோம்.

கணபதிப்பிள்ளை குடும்பம்
சித்தன்கேணி.
(CS/4149) (22,17)

சட்டவிரோத மணல் அகழ்வு தருமபுரத்தில் 12 பேர் கைது

கிளிநொச்சி, மே 22
கிளிநொச்சி, கல்லாறில் காட்டுப் பகுதியில் சட்டவிரோதமான மணல் அகழ்வில் ஈடுபட்ட குற்றச்சாட்டில் 12 பேர் நேற்றுக் கைது செய்யப்பட்டள்ளனர் என்று தர்மபுரம் பொலிஸார் தெரிவித்தனர்.
நீண்ட காலமாக சட்ட விரோதமாக நடைபெற்று வரும் இம் மணல் அகழ்வு மற்றும் வியாபாரம் தொடர்பாகக் கிளிநொச்சி மற்றும் முல்லைத்தீவு மாவட்டங்களுக்கு பொறுப்பான பொலிஸ் உயர் அதிகாரியான மகேஸ் வெலிகண்ணவுக்கு கிடைத்த தகவலை தொடர்ந்து தருமபுரம் பொலிஸார் மற்றும் மாவட்ட ஊழல் தடுப்புப் பிரிவினர் இணைந்து மேற்கொண்ட சோதனையின் போதே சந்தேக நபர்கள் கைது செய்யப்பட்டனர்.
மணல் ஏற்றிச் செல்லப் பயன்படுத்தப்பட்ட வாகனங்களும் கைப்பற்றப்பட்டுள்ளன.
கல்லாறு காட்டுப்பகுதியில் இருந்து பிரமந்தனாறு காட்டுப்பகுதியினை வந்தடையும் ஆற்றில் இருந்து இரகசிய முறையில் நீண்ட காலமாக சட்டவிரோதமாக மணல் அகழ்வு இடம்பெற்றமை கண்டறியப்பட்டுள்ளது.
மீள்குடியமர்வு செய்யப்பட்ட மக்களின் வீடுகள் அமைப்பதற்கு என்று கூறியே நீண்ட காலமாக இம் மணல் வியாபாரம் நடைபெற்றது என்றும் கூறப்படு கின்றது.
சந்தேக நபர்களை கிளிநொச்சி நீதிவான் மன்றில் முற்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என்று தர்மபுரம்பொலிஸ்நிலைய பொறுப் பதிகாரி தெரிவித்தார்.
(ற-21)

பாராட்டி வாழ்த்துகின்றோம்



Best Wishes

சித்தங்கேணியைச் சேர்ந்த மைந்தர்
உயர்திரு வேலுப்பிள்ளை கணேசன்

ஓய்வுபெற்ற சிரேஷ்ட தொழில் நுட்ப உத்தியோகத்தர் அவர்களுக்கு நீதி அமைச்சினால் அதிஉயர் பதவியாகிய சமாதான நீதிவான் பதவி வழங்கப்பட்டு 18.05.2017 அன்று யாழ். மாவட்ட நீதிவான் முன்னிலையில் சத்தியப்பிரமாணம் செய்துகொண்டமையையிட்டு பாராட்டி வாழ்த்து கின்றோம்.
அவரது சேவை சித்தங்கேணி வாழ் மக்களுக்கு மட்டுமன்றி ஏனைய பிரதேச மக்களுக்கும் கிடைக்குமென்ற நம்பிக்கையுடன், சேவை சிறக்க வாழ்த்தி எல்லாம்வல்ல சித்தங்கேணி மகா கணபதிப்பிள்ளையார் மற்றும் சிவகாமிசமேத நடராசப் பெருமானின் அருள் கிடைக்க வேண்டு கின்றோம்.

வாழ்த்துவோர்: க.தணிகாசலம் - குடும்பத்தினர்.
லண்டன் புலம்பெயர் வாழ் நண்பர்கள்.
(ச.103)
(13.18)

வடமாகாண முன்பள்ளி கல்வி நியதிச்சட்டம்

வடமாகாணத்தின் 2015 ஆம் ஆண்டின் 3ஆம் இலக்க முன்பள்ளி கல்வி நியதிச்சட்டம் கௌரவ ஆளுநர் அவர்களினால் 25.07.2016 அனுமதிக்கப்பட்டுள்ளது. இச்சட்ட பதிவு அறிவித்தல் இலங்கை ஜனநாயக சோசலிஷ குடியரசு வர்தகமானி பத்திரிகை அதி விசேட பதிவு 08.08.2016 இல் வெளியிடப்பட்டது. இவ் 'வறிவித்தலை முன்பள்ளிக் கல்வியோடு சம்பந்தப்பட்ட சகலருக்கும் அறியத்தர விரும்புகின்றேன்.

இதனடிப்படையில் கல்வி அமைச்சின் ஆரம்ப பிள்ளைப்பருவ அபிவிருத்தி பிரிவினால் முன்பள்ளிகளும் அதில் கற்பிக்கும் ஆசிரியர்களும் பதிவு செய்யப்பட்டு பதிவு சான்றிதழ் வழங்கப்படும். இப்பதிவுகள் யாவும் நியதிச்சட்டத்தில் குறிப்பிட்டுள்ள விதப்புரைகளின் அடிப்படையிலேயே நடைபெறும். மேலும் முன்பள்ளி நியதிச் சட்டத்தில் குறிப்பிடப்பட்டிருக்கும் விடயங்களை சகல நடத்துனர்களும் பின்பற்ற வேண்டும் எனவும் கேட்டுக் கொள்கின்றேன்.

இ.இரவீந்திரன்,
செயலாளர்
கல்வி, பண்பாடு, விளையாட்டுத்துறை மற்றும் இளைஞர் விவகார அமைச்சு,
வடமாகாணம்.

ஆசிரியர்கள் தேவை
மருதனார் மடத்தில் இயங்கும் தனியார் கல்வி நிலையம் ஒன்றிற்கு கணிதம், ஆங்கிலம், வரலாறு, புவியியல், குடியுரிமை ஆகிய பாடங்கள் கற்பிக்கக்கூடிய ஆசிரியர்கள் தேவை.
077 592 2236, 075 254 0546

தேவை
யாழ் நகரில் உள்ள ஹோட்டல் வேலைக்கு ஆள்கள் தேவை.
1. நிர்வாக திறமையுள்ள காசாளர் (தங்கி நின்று வேலை செய்பவர்) தேவை. (ஆண்கள் மட்டும்)
ஹோட்டல் றொலெக்ஸ்
077 907 9888

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தகவல் அறியும் உரிமைச்சட்டத்தால் இலங்கைக்கு நற்பெயர்

அமைச்சர் கயந்த கருணாதிலக தெரிவிப்பு

கொழும்பு, மே 22
"தகவல் அறியும் உரிமைச் சட்டம் நடைமுறைப்படுத்தப்பட்டதன் மூலம் இலங்கையின் நற்பெயர் பன்னாட்டு ரீதியில் மேலோங்கியுள்ளது. அதனால் நாட்டுக்குக் கௌரவமும் அதிகரித்துள்ளது."
இவ்வாறு நாடாளுமன்ற மறுசீரமைப்பு மற்றும் ஊடகத்துறை அமைச்சர் கயந்த கருணாதிலக தெரிவித்தார். தகவல் அறியும் உரிமைச் சட்டம் குறித்து கொழும்பு மற்றும் களுத்துறை மாவட்ட ஆசிரிய ஆலோசகர்களுக்குத் தெளிவுபடுத்தும் செயலமர்வு கொழும்பிலுள்ள அரச தகவல் திணைக்களத்தின் கேட்போர் கூடத்தில் நேற்று முன்தினம் இடம்பெற்றது.
இந்த நிகழ்வில் கலந்து கொண்டு கருத்துத் தெரிவிக்கும்போதே அவர் மேற் கண்டவாறு தெரிவித்தார்.
"அரசின் நடவடிக்கைகள் மற்றும் அபிவிருத்தி நடவடிக்கைகள் தொடர்பிலான ஒழுக்கமுறைகளும்தகவல் அறியும்உரிமைச்சட்டத்தின் மூலம் ஏற்பட்டுள்ளது.
தற்பொழுது அரச நிறுவனங்களின் அதிகாரிகளுக்குச் சட்டம் பற்றித் தெளிவு படுத்தப்பட்டுள்ளது" என்றும் அவர் குறிப்பிட்டார். (ஐ-10)

கூட்டு அரசை சீர்குலைக்கும் இனவாதிகளுக்கு இடமளிக்க முடியாது

கிழக்கு முதலமைச்சர் தெரிவிப்பு

கொழும்பு, மே 22
"கூட்டு அரசை சீர் குலைப்பதற்காக இனவாத சக்திகளைத் தூண்டிவிட்டு வேடிக்கை பார்க்கும், மகிந்த ஆட்சியின் இனவாத ஆட்சியாளர்களுக்கு ஒரு போதும் இடமளிக்க முடியாது" இவ்வாறு கிழக்கு முதலமைச்சர் நசீர் அஹமட் தெரிவித்தார்.
சம்பூரில் அபிவிருத்தித்திட்டங்களை ஆரம்பித்து வைக்கும் நிகழ்வு நேற்று முன்தினம் நடைபெற்றது. இந்த நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் மேற் கண்டவாறு தெரிவித்தார்.
"கிழக்கு மாகாணத்தில் தமிழர்கள், முஸ்லிம்கள் மற்றும் சிங்களவர்கள் ஒற்றுமையுடன் வாழ்ந்து வரும் நிலையில், அதனைச் சீர்குலைக்க முயற்சிப்பவர்களுக்கு எதிராக கடும் நடவடிக்கை எடுக்கப்படும். கிழக்கு மாகாணத்தில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு, சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸ் மற்றும் ஏனைய பெரும்பான்மைக் கட்சிகளும் இணைந்து எந்த விதப் பிரச்சினைகளும் இன்றி ஆட்சி நடத்தி வருகின்றன.
இந்த நிலையில் கிழக்கில் குழப்பங்களையும், இனமுறுகல்களையும் உருவாக்குவதற்கான முயற்சிகளைச் சிலர் முன்னெடுத்து வருகின்றனர்"-என்று கிழக்கு முதலமைச்சர் மேலும் தெரிவித்தார். (ஐ-10)

அவசரமாகத் தரையிறங்கிய வானூர்தி

கொழும்பு, மே 22
தாய்லாந்திலிருந்து கட்டார் நோக்கிப் பயணித்த வானூர்தி, கட்டுநாயக்க பன்னாட்டு வானூர்தி நிலையத்தில் தரையிறக்கப்பட்டது என்று வானூர்தி நிலையத் தகவல்கள் தெரிவித்தன. கட்டார் எயார்வேஸ் நிறுவனத்துக்குச் சொந்தமான போயிங் 787 ரக வானூர்தியே தரையிறக்கப்பட்டது. வானூர்தியில் ஏற்பட்டபுகைகாரணமாகவேஅதுஅவசரமாகத்தரையிறக்கப்பட்டது என்று தெரிவிக்கப்பட்டது. குறித்த வானூர்தியில் 208 பயணிகளும், 15 ஊழியர்களும் இருந்தனர். சம்பவத்தில் எவருக்கும் எந்தவிதப் பாதிப்பும் ஏற்படவில்லை என்று அதிகாரிகள் தெரிவித்தனர். (ஐ-10)

மைத்திரி அரசால் நீர்ப்பாசனத்துறையில் பெரும் அபிவிருத்தி

அமைச்சர் விஜித் விஜயமுனி சொய்சா தெரிவிப்பு

கொழும்பு, மே 22
அரச தலைவர் மைத்திரிபால சிறிசேன, தலைமை அமைச்சர் ரணில் விக்ரமசிங்க ஆகியோர் தலைமையிலான அரசு, நீர்ப்பாசனத் துறையில் பெருமளவிலான அபிவிருத்திகளை முன்னெடுத்து வருகிறது.
இவ்வாறு நீர்ப்பாசன மற்றும்நீர்வளமுகாமைத்துவ அமைச்சர் விஜித் விஜயமுனிசொய்சாதெரிவித்தார்.
நீர்ப்பாசன அமைச்சில் நேற்று முன்தினம் இடம் பெற்ற செய்தியாளர் சந்திப்பில் கருத்துத் தெரிவிக்கும் போதே அவர் மேற் கண்டவாறு தெரிவித்தார்.
அவர் மேலும் தெரிவித்ததாவது,
"பெரியளவிலான குளங்களை அமைத்த மன்னர்களின் ஆட்சியின் பின்னர், தற்போதைய அரசு நீர்ப்பாசனத்துறையில் கவனம்செலுத்துகின்றது. விவசாயத்துறைக்கென அரச தலைவர் மற்றும் தலைமை அமைச்சரின் வழிகாட்டல்களில் ஐந்து குளங்களை சீரமைப்பதற்கு அமைச்சரவைப் பத்திரம் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.
கடந்த காலங்களில் சிறியளவிலான 100 குளங்களை மீளமைத்துள்ளதோடு, அணைகளை உறுதிப்படுத்தி, குளங்களின் கொள்ளளவை அபிவிருத்திசெய்யும்வேலைத்திட்டத்தையும் அரசு ஆரம்பித்திருக்கிறது. அதனால் விவசாயிகள் எதிர்காலத்தில் நீரைத் தடையின்றிப் பெற்றுக் கொள்ளலாம்.- என்றார். (10)

வெள்ளவத்தை, பம்பலப்பிட்டியில் 1,800 சட்ட விரோதக் கட்டடங்கள்

அமைச்சர் சம்பிக்க ரணவக்க தகவல்

கொழும்பு, மே 22
"கொழும்பில் மக்கள் செறிந்து வாழும் வெள்ளவத்தை, பம்பலபிட்டி ஆகிய பகுதிகளில் சுமார் ஆயிரத்து 800 சட்ட விரோதக் கட்டடங்கள் காணப்படுகின்றன. அவற்றுக்கு எதிராக விரைவில் நடவடிக்கை எடுக்கப்படும்"
இவ்வாறு பெரிய நகர் மற்றும் மேல் மாகாண அபிவிருத்தி அமைச்சர் சம்பிக்கரணவக்கதெரிவித்தார்.
வெள்ளவத்தையில் 5 மாடிக் கட்டடமொன்று திடீரென இடிந்து வீழ்ந்தது. அது தொடர்பில் கருத்துத் தெரிவிக்கையிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.
அவர் மேலும் தெரிவித்ததாவது,
"வெள்ளவத்தையில் இடிந்து விழுந்த, 5மாடி திருமண மண்டபக் கட்டடமானது முற்றிலும் சட்ட விரோதமான முறையில் அமைக்கப்பட்டுள்ளது. முறையற்ற கட்டுமானப் பணிகளே இந்த இடருக்குக் காரணமாகும்.
இந்த இடர் தொடர்பிலான மேலதிக விசாரணைகள் முன்னெடுக்கப் பட்டு வருகின்றன.
இடருக்குக் காரணமானவர்கள் கண்டறியப்பட்டு, அவர்களுக்கு எதிராகக் கடுமையான சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் - என்றார். (ஐ-10)

முஸ்லிம் அரசியல்வாதிகளால் பெருமளவு காணிகள் அபகரிப்பு

பொதுபலசேனா குற்றச்சாட்டு

கொழும்பு, மே 22
"முஸ்லிம் அரசியல்வாதிகளால் பெருமளவு காணிகள் சட்ட விரோதமாகக் கைப்பற்றப்பட்டுள்ளன"
இவ்வாறு பொதுபல சேனா அமைப்பின் பொதுச் செயலாளர் கலகொட அத்தே ஞானசார தேரர் குற்றஞ்சாட்டினார்.
அவர் மேலும் தெரிவித்ததாவது:
"நாடு முழுவதும் முஸ்லிம் மக்கள் வாழும் பிரதேசங்களை விரிவுபடுத்தும் நோக்கில் முஸ்லிம் அரசியல்வாதிகள் பெருமளவான காணிகளைச் சட்ட விரோதமாகக் கைப்பற்றியுள்ளனர்.
முல்லைத்தீவு, மன்னார், ஏறாவூர் பிரதேசங்களில் பாதுகாக்கப்பட்ட வனப் பகுதிகளுக்கு அருகில், பெருமளவிலான காணிகளை அவர்கள் கையகப்படுத்தியுள்ளனர். அதற்காகப்பெருமளவுபணத்தைக் கொடுத்து, அவற்றைப் எதிர்கால நடவடிக்கைகளுக்காக முஸ்லிம் அரசியல்வாதிகள்பாதுகாத்துவைத்துள்ளனர். போர் முடிவுக்கு வந்த பின்னர் இந்த நிலமை இன்னமும் அதிகரித்துள்ளது. அதனைத் தடுத்து நிறுத்த சம்பந்தப்பட்ட அதிகாரிகள் உடனடியாக நடவடிக்கைகளை எடுக்க வேண்டும்" என்றார். (ஐ-10)

நயினாதீவு ஸ்ரீ நாகபூஷணி அமுதசுரபி அன்னதான சபை

பதிவு இல. S236 (வரைவுள்ளது) ஆரம்பம் - 1960

விசேட அறிவித்தல்

நயினாதீவு அருள்மிகு ஸ்ரீ நாகபூஷணி அம்பாளின் திருவருளினால் 1960 ஆம் ஆண்டு ஆரம்பிக்கப்பெற்ற நயினாதீவு ஸ்ரீ நாகபூஷணி அமுதசுரபி அன்னதான சபை "அமுதசுரபி" என் னும் பெயர் தாங்கிய மணிமண்டபத்தின் கண்ணே ஆண்டுதோறும் பல்லாயிரக்கணக்கான அடியார்களுக்குச் சிறந்த முறையில் அன்னதானத் தொண்டினைச் செய்து வருகின்றது. இவ்வாண்டுடன் 58 ஆவது ஆண்டில் பிரவேசிக்கின்றோம்.
அம்பாளின் திருப்பதியிலே நடைபெறும் இத் தொண்டு சிறந்த சேவையெனக் கருதி தரும சீலர்களாகிய வர்த்தகப் பெருமக்கள், விவசாயப் பெருமக்கள், தொழிலாளப் பெருமக்கள் மற்றும் அம்பிகை அடியார்கள், அன்பர்கள் அனைவரும் மனமுவந்து பணம், பொருள், உதவி செய்து வருவதுடன் ஆக்கமும் ஊக்கமும் தந்து அன்னதான சபையின் சேவையைப் பாராட்டியும் வருகின்றனர்.

அம்பாளின் திருவருளால் பணிக்கப்பெற்ற இச்சேவையைச் சிறந்த முறையில் செய்து அல்லும் பகலும் அயராது உழைக்கின்ற சபை நிர்வாகிகளுக்கும், உறுப்பினர்களுக்கும், நற்சேவைத் தொண்டர்களுக்கும், அமுதசுரபி மண்டபத்துக்கு வந்து பணி செய்யும் அடியார்களுக்கும், தத்தம் கடமைகளைத் திறமையாகச் செய்த, செய்கின்ற சேவையாளர்களுக்கும், அன்னதான தொண்டினை நேரடியாகக் கண்டும், கேட்டும் ஆசியுரை வழங்கிய அன்பர்களுக்கும், எல்லாவற்றுக்கும் மேலாக ஆண்டாண்டு தோறும் அன்னதானம் சிறப்பாக நடைபெறப் பணம், பொருள் முதலியவற்றை மனமுவந்து உதவி வரும் தருமசீலர்களுக்கும் எல்லாம் வல்ல ஸ்ரீ நாகபூஷணி அம்பாளின் திருவருள் கிடைக்கும் வண்ணம் பிரார்த்தித்துச் சபையினரின் மனமுவந்த பணிவார்ந்த வணக்கத்தைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

ஏவிளம்பி ஆண்டு ஆனி 11 ஆம் நாள் **25.06.2017** ஞாயிற்றுக்கிழமை **அம்பாளின் மஹோற்சவம் கொடியேற்றத் திருவிழாவுடன்** ஆரம்பமாகி ஆனித்திங்கள் 20 ஆம் நாள் **04.07.2017** செவ்வாய்க்கிழமை **மஞ்சத் திருவிழாவும்,** ஆனித்திங்கள் 23 ஆம் நாள் **07.07.2017** வெள்ளிக்கிழமை **சப்பறத் திருவிழாவும்,** ஆனித்திங்கள் 24 ஆம் நாள் **08.07.2017** சனிக்கிழமை **தேர்த்திருவிழாவும்.** ஆனித்திங்கள் 25 ஆம் நாள் **09.07.2017** ஞாயிற்றுக்கிமை **தீர்த்தத்திருவிழாவும்.** ஆனித்திங்கள் 26 ஆம் நாள் **10.07.2017** திங்கட்கிழமை **பூங்காவனமும்** நடைபெற இருப்பதால் அம்பாளைத் தரிசிக்க வரும் அடியார்களுக்குச் சிறந்த முறையில் பதினாறு (16) நாள்களும் இரவும், பகலும் அன்னதானம் வழங்கச் சபை தீர்மானம் செய்துள்ளது. ஆகவே தருமசீலர்களாகிய தங்களிடம் அன்னதான சபையால் நியமிக்கப்பட்ட தொண்டர்கள் வருவார்கள். அவர்களிடம் வழமைபோல் நீங்கள் உதவும் பணம், பொருள் முதலியவற்றைக் கொடுத்துச் சபையின் பற்றுச் சீட்டைப் பெறறுக் கொள்ளும்படி கேட்டுக் கொள்கின்றோம்.

நேடியாகப் பணம், பொருள் கொடுக்க விரும்பும் அடியார்கள் **யாழ்.மார்க்கட் சிவகுமார் வெற்றிலைக் கடையிலும்** திருநெல்வேலி மார்க்கட் **தேனு களஞ்சியத்திலும்** கொடுத்து அதற்குரிய பற்றுச்சீட்டுக்களைப் பெற்றுக் கொள்ளலாம்.

நேரடியாகப் பணம் கொடுக்க விரும்புவோர்
AMUTHASURABHI COMMERCIAL BANK
கணக்கு இல. 1247985001 Peoples Park கட்டடம், Pettah.
என்னும் விலாசத்துக்கும், இலங்கை வங்கி Kayts.
A/C NO. 7687836 என்னும் விலாசத்துக்கும் அனுப்பும்படி தாழ்மையுடன் கேட்டுக் கொள்கின்றோம்.

த.சிவானந்தன் - தலைவர்
ஸ்ரீ துர்க்கா என்டபிறைசஸ்
138 கோட்டைக்குத்தெரு,
கொழும்பு - 11.
தொலைபேசி - **2384757**

அ.சண்முகநாதன் J.P-
செயலாளர்
2ஆம் வட்டாரம், நயினாதீவு
தொலைபேசி:- **021 321 3575**

குமாரசாமி ஸ்ரீ காந்தராசா-
பொருளாளர்."மக்மிலன்"
புத்தகசாலை.195, ஒல்கொட்
மாவத்தை, கொழும்பு -11.
தொலைபேசி:- **244 9565**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அமெரிக்க அதிபர் ட்ரம்ப், தனது முதலாவது அயல்நாட்டுப் பயணத்தை சவூதிக்கு மேற்கொண்டுள்ளார். ட்ரம்ப் – சவூதி அரசர் சல்மான் இடையிலான சந்திப்பை அடுத்து, அங்குள்ள ஏழு நட்சத்திர விடுதியான ரிட் கார்ல்டன் இருநாடுகளின் தேசியக் கொடிகளையும் இரு அரச தலைவர்களின் ஒளிப்படங்களையும் மிகப்பிரமாண்டமான முறையில் காட்சிப்படுத்தியது. (ம)

பாரதிய ஜனதாவுடன் இணைகிறா

சென்னை, மே 21
இந்தியாவின் ஆளும் கட்சியான பாரதிய ஜனதாவுடன் இணைவது தொடர்பில் சில துலங்கல்களை வெளிப்படுத்தினார் தமிழகத்தின் முன்னாள் முதல்வர் ஓ.பன்னீர்செல்வம்.
முன்னாள் முதல்வர் ஜெயலலிதா மறைவுக்குப் பின், ஓ.பன்னீர்செல்வம் முதல்வராகப் பதவியேற்றார். அவர் முதல்வராகப் பதவியேற்றது முதல் பா.ஜ.க. அரசுடன் மிகவும் இணக்கமாக இருந்துவருகிறார் என்று விமர்சனங்கள் எழுந்தன. நீண்ட ஆண்டுகளாகத் தமிழகத்தில் தடை செய்யப்பட்டிருந்த ஆர்.எஸ்.எஸ் அமைப்பின் பேரணிக்கு, ஓ.பன்னீர்செல்வம் முதல்வராக இருக்கும்போது தான் அனுமதி அளிக்கப்பட்டது. மேலும், ஜெயலலிதாவால் தடைசெய்யப்பட்டிருந்த பறக்கும் சாலைத் திட்டத்துக்கும், உதய்மின் திட்டத்துக்கும் பன்னீர்செல்வம் முதல்வராக இருக்கும் காலத்தில் அனுமதியளிக்கப்பட்டது. இது, பன்னீர்செல்வத்துக்கு பாரதிய ஜனதாவுக்கு இருக்கும்



பிலிப்பைன்சில் நில அதிர்வு

மணிலா, மே 22
பிலிப்பைன்ஸின் போகோல் கடல் பகுதியில் நேற்று நில அதிர்வு ஏற்பட்டது. போகோல் கடல் பகுதியில் உள்ள செபுல் நகரத்திலேயே இந்த அதிர்வு உணரப்பட்டது. ரிச்டர் அளவுகோலில் 6 அலகுகளாக அதிர்வு பதிவானது என்று சீன புவியியல் ஆய்வுமையம் எச்சரித்தது. சுனாமி எச்சரிக்கை விடுக்கப்படவில்லை. சேத விபரங்களும் நேற்று மதியம் வரை வெளியாகவில்லை. (ம)

ஈரானின் அதிபராக மீண்டும் ரவுஹானி

தோல்வியை ஏற்கவில்லை ரைசி

தெஹ்ரான், மே 22
ஈரானின் அதிபர் தேர்தல் கடந்த வெள்ளிக்கிழமை நடைபெற்றது. அதிபர் ரவுஹானி மீண்டும் வெற்றி பெற்று தனது ஆட்சியைத் தக்கவைத்தார்.
கிட்டத்தட்ட 60 சதவீதமான வாக்குகளை ரவுஹானி பெற்றார். அவரின் போட்டியாளரான இப்ராஹிம் ரைசி கிட்டத்தட்ட 40 சதவீதமான வாக்குகளை மட்டுமே பெற்றார் என்பது குறிப்பிடத்தக்கது.
கடந்த மாதம் அதிபர் தேர்தலுக்கான அறிவிப்பு வெளியிடப்பட்டது. தேர்தலில் போட்டியிட ஆயிரத்து 636 பேர் பதிவுசெய்தனர். இதில் 137 பேர் பெண்கள். ஏனையவர்கள் ஆண்கள். பெண்கள் அத்தனைபேரினதும் மனுக்கள் நிராகரிக்கப்பட்டன. நான்கு பேருக்கு மட்டுமே தேர்தலில் போட்டிய அந்த நாட்டு நாடாளுமன்றம் அனுமதி வழங்கியது. நால்வரில் இருவர் தாமாக விலகிக்கொண்டனர். தற்போதைய அதிபர் ரவுஹானியும் இப்ராஹிம் ரைசியுமே களத்தில் நின்றனர்.
கடந்த வருடத்தின் மத்திய பகுதியில் இருந்தே ரவுஹானி மிகக் கச்சிதமாக காய் நகர்த்தினார். நாடுகளுக்கு இடையே செய்துகொண்ட பல்வேறு ஒப்பந்தங்கள் ஈரான் பொருளாதாரத்தில் மீண்டெள முக்கிய காரணமாக இருந்தது. "இந்த வெற்றி நாட்டின் பொருளாதாரத்துக்குக் கிடைத்த வெற்றி" என்று ஈரான் ஊடகங்கள் பல செய்தி வெளியிட்டன.
தனது தோல்வியை இப்ராஹிம் ரைசி ஏற்கவில்லை. "தேர்தல் தினத்தன்று வாக்குச் சாவடிகளுக்கு அருகில் ரவுஹானியின் ஆதரவாளர்கள் பரப்புரையில் ஈடுபட்டனர்" என்று ரைசி குற்றம் சுமத்தியுள்ளார். ஈரான் சட்டத்தின்படி, தேர்தல் தினத்தன்று பரப்புரையில் ஈடுபடுவது குற்றமாகும். (ம)

19 பொதுமக்கள கொன்றது ஐ.எஸ்

டமஸ்கஸ், மே 22
தமது பிடியில் இருந்து தப்பிக்க முற்பட்ட பொதுமக்களை ஐ.எஸ்.ஐ.எஸ். அமைப்பு கொன்று எரித்தது. இந்த 19 பேரில் 2 குழந்தைகளும் அடங்குகின்றனர் என்று சிரியாவில் செயற்படும் மனித உரிமைகள் கண்காணிப்பகம் தெரிவித்தது.
சிரியாவின் பல பகுதிகளைக் கைப்பற்றியிருந்தது ஐ.எஸ். அமைப்பு. [illegible]த அமைப்பின் பிடியில் சிரியாவின் வடக்குப் பகுதியில் உள்ள ஜஸ்ரத் மாகாணமும் உள்ளது. இதைத் திரும்பக் கைப்பற்றும் போரில் சிரியா இராணுவம் தீவிரமாக உள்ளது. பெரும் பகுதிகள் இராணுவத்தால் மீட்கப்பட்டுவிட்டன. ஆயுததாரிகளின் பிடியில் இருந்து அரச தரப்புக்குள் செல்ல முற்பட்டவர்களையே அந்த அமைப்பு நேற்று முன்தினம் கொலை செய்தது.
தமது பின்னடைவைச் சமாளிப்பதற்காக மக்களை அந்த அமைப்பு மனிதக் கேடயங்களாகப் பயன்படுத்துகிறது.
மக்கள் அவர்களிடத்தில் தப்பித்துச் சென்றால் தமது தோல்வி உறுதியாகும் என்பதால் ஆயுததாரிகள் இவ்வாறான காட்டுமிராண்டித்தனத்தில் ஈடுபடுகின்றனர் என்று மனித உரிமைகள் கண்காணிப்பகம் மேலும் தெரிவித்தது. (

சவூதி அரேபியா சென்றார் ட்ரம்ப்

ரியாத், மே 22
அமெரிக்க அதிபர் ட்ரம்ப், தனது முதலாவது உத்தியோகபூர்வ வெளிநாட்டுப் பயணமாக சவூதிக்கு நேற்றுமுன்தினம் சென்றார். பல பில்லியன் டொலர்கள் பெறுமதியுடைய ஒப்பந்தம் இந்த இரு நாடுகளுக்கும் இடையே கைச்சாத்தாகியது என்று பன்னாட்டு ஊடகங்கள் குறிப்பிட்டன.
கடந்த ஜனவரி மாதம் அதிபராகப் பொறுப்பேற்ற பின்னர் டொனால்ட் ட்ரம்ப் மேற்கொண்ட முதலாவது வெளிநாட்டுப் பயணமாக இது அமைந்தது.
ஐ.எஸ்.ஐ.எஸ். அமைப்புக்கு எதிராகப் போராடும் நாடுகளில் சவூதிக்கும் முக்கிய பங்குண்டு. எனவே இது தொடர்பிலும் ஏனைய சில வர்த்தகங்கள் தொடர்பிலும் இரு அதிபர்களும் கலந்தாலோசித்தனர் என்று பன்னாட்டு ஊடகங்கள் செய்தி வெளியிட்டன.
தனது 8 நாள் பயணத்தில் அடுத்ததாக இஸ்ரேல், உரோம் உள்ளிட்ட இடங்களுக்கும் ட்ரம்ப் செல்லவுள்ளார். (ம)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

றாரா ஓ.பி.எஸ்.?

இணக்கத்தை வெளிப்படுத்துவதாக அமைந்தது.

பன்னீர்செல்வம், முதல்வர் பதவியிலிருந்து விலகிய பின்னரும் பாரதிய ஜனதாவுடன் இணக்கமான உறவையே கடைபிடித்து வந்தார். இந்நிலையில், கடந்த வெள்ளிக்கிழமை திடீரென பன்னீர்செல்வம் தனது அணியுடன் டெல்லிசென்றுதலைமை அமைச்சர் மோடியைச் சந்தித்தார்.

நேற்றுமுன்தினம் தனது ருவிற்றர் பக்கத்தில், உள்ளாட்சித் தேர்தல் அறிவிப்புக்குப்பிறகு பாரதியஜனதாவுடனான கூட்டணி குறித்து அறிவிக்கப்படும்' என்று குறிப்பிட்டார். இந்தப் பதிவு ஓ.பி.எஸ். - பா.ஜ.க. இணைப்பின் முதல்படி என்று இந்திய ஊடகங்கள் குறிப்பிடுகின்றன. (ம)

ரூபா 1,800 கோடிகளை அள்ளிய ஓவியம்

நியூயோர்க், மே 22

அமெரிக்காவை சேர்ந்த பிரபல ஓவியர் ஜீன் மைக்கேல் யாசித் வரைந்த ஓவியமொன்று இலங்கை மதிப்பில் கிட்டத்தட்ட ரூபா ஆயிரத்து 800 கோடிகளுக்கு ஏலம் போனது.

தனது 18 ஆவது வயதில் ஓவிய உலகில் பிரவேசித்த மைக்கல் மிகச் சிறந்த ஓவியங்களைத் தீட்டியுள்ளார். தனது 19 ஆவது வயதில் இருந்து 27 ஆவது வயது வரை 8 ஆண்டுகள் கொடிகட்டிப் பறந்த அவர் 27 ஆவது வயதில் உயிரிழந்தார். 1982 ஆம் ஆண்டில் மண்டை ஓடு போன்ற தலை அமைப்பு கொண்ட ஓவியம் வரைந்தார். அதற்கு அவர் தலைப்பிடவில்லை.

அவர் வரைந்த இந்த ஓவியம் நியூயோர்க் நகர சோத்பை மையத்தில் சமீபத்தில் ஏலம் விடப்பட்டது. அந்த ஓவியம் இலங்கை மதிப்பில் கிட்டத்தட்ட ரூபா ஆயிரத்து 800 கோடிகளுக்கு ஏலம் போனது. ஜப்பானைச் சேர்ந்த கோடீஸ்வரர் ஒருவர் இந்த ஓவியத்தை ஏலத்தில் எடுத்தார். (ம)

ரான்சம்வேருடன் தொடர்பில்லை என்கிறது வடகொரியா

பியாங்யாங், மே 22

கிட்டத்தட்ட 150 நாடுகளில் உள்ள நிறுவனங்களின் தரவுகளை முடக்கிய ரான்சம்வேர் இணையத் தாக்குதல் தம்மால் நடத்தப்படவில்லை என்று வடகொரியா அறிவித்தது.

இந்தத் தாக்குதலில் உலகில் உள்ள முக்கிய நிறுவனங்கள், அரச நிறுவனங்கள் பலவும் பெரும் திண்டாட்டத்தை எதிர்கொண்டன. வடகொரியாவுக்கு எதிராக உலக நாடுகள் ஓரணியில் நிற்பதால் இந்தத் தாக்குதலில் வடகொரியா தொடர்புபட்டிருக்கலாம் என்று சந்தேகம் வெளியிடப்பட்டது. தற்போது இதை வடகொரியா முழுவதுமாக மறுத்துள்ளது.

ரான்சம்வேர் தாக்குதலில் அதிகம் பாதிக்கப்பட்ட முதலாவது நாடாக சீனா உள்ளது. அதற்கு அடுத்த பாதிப்பு ரஷ்யாவில் உணரப்பட்டுள்ளது. இவை இரண்டும் மட்டுமே வடகொரியாவுக்கு தற்போது ஓரளவு ஆதரவு வழங்கும் நாடுகள். எனவே இந்த உறவை முறித்துக்கொள்ள வடகொரியா விரும்பாது. எனவே இந்தத் தாக்குதலை வடகொரியா நடத்தியிருக்காது என்று சில பன்னாட்டு ஊடகங்கள் முன்னதாகக் கணித்திருந்தமை குறிப்பிடத்தக்கது. (ம)

மரண அறிவித்தல்

சபாபதிப்பிள்ளை இரத்தினகோபால்

(உரிமையாளர் - ஜெகா மோட்டோர்ஸ் & ஹாட்வெயர், வல்வெட்டி, நெல்லியடி, கோப்பாய்)

பிறப்பு 26.11.1944 — இறப்பு 19.05.2017

யாழ். வல்வெட்டியைப் பிறப்பிடமாகவும், கனடாவை வசிப்பிடமாகவும் கொண்ட சபாபதிப்பிள்ளை இரத்தினகோபால் அவர்கள் கடந்த 19.05.2017 வெள்ளிக்கிழமை அன்று இறைபதம் அடைந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சபாபதிப்பிள்ளை - பருவதம் தம்பதிகளின் அன்பு மகனும், காலஞ்சென்றவர்களான பொன்னுத்துரை - இலட்சுமிப்பிள்ளை தம்பதிகளின் அன்பு மருமகனும், ஜெகதேவி அவர்களின் அன்புக் கணவரும், சுதாகரன், பிரதீபன், பிரபாகரன், கிருபாகரன், ஞானகரன், பிரார்த்தனா, பிரசாத், பிரியதர்சினி ஆகியோரின் அன்புத் தந்தையும், ரத்தினம், ராஜேஸ்வரி, மல்லிகாதேவி, மகேஸ்வரி, சறோஜாதேவி, சித்திரம் ஆகியோரின் அன்புச் சகோதரரும், அருள்நிதி, துஷிந்தா, வதனா, அஜுவ் ஆகியோரின் அன்பு மாமனாரும், அன்னபூரணம், தங்கரத்தினம், சுந்தரலிங்கம், ராசலிங்கம், சறோயினிதேவி, காலஞ்சென்ற அன்னராணி, பஞ்சலிங்கம் ஆகியோரின் அன்புமைத்துனரும், அனித்தா, அபினாஸ், சாகித்தியா, கவிஷன், அப்சரா ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (23.05.2017) செவ்வாய்க்கிழமை முற்பகல் 10 மணியளவில் வல்வெட்டியிலுள்ள அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக ஊறணி இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

இந்துபாடசாலைவீதி, வல்வெட்டி,
வல்வெட்டித்துறை.

தகவல்
குடும்பத்தினர்.

077 763 0152

(CS/4148)(11)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உண்மை - நேர்மை - அஞ்சாமை

உதயன்

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

தலைமையகம்: 361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்

செய்தி : 021 493 0000
விளம்பரம் : 021-493 1111
விநியோகம் : 021-493 2222, 021 - 492 7450

செய்தி : uthayanprint@gmail.com கருத்து: comments@uthayan.com
விளம்பரம்: advt@uthayan.com

நினைவேந்தல் நிகழ்வில் புகுந்து குழப்ப முயன்றவர் பின்னணியாது?

போரில் தம் உறவுகளை இழந்துவிட்ட தமிழ் மக்கள் ஆண்கள், பெண்கள், முதியோர், இளையோர், சிறியோர்என்றுசகலரும்சாதிமதபேதமின்றிமுள்ளிவாய்க்கால் நினைவேந்தல் நிகழ்வில் கடந்த வெள்ளிக்கிழமை கலந்து கொண்டு உணர்ச்சிபூர்வமாக தமது உள்ளங்களைத் திறந்து வாய்விட்டுகதறிக்கண்ணீர்விட்டுஅழுதுஉறவுகளின்ஆன்ம ஈடேற்றத்துக்கான கைங்கரியங்களில் ஈடுபட்டிருந்தார்கள்.

இந்த நிகழ்வானது போரில் கொல்லப்பட்டமக்களுக்கான சோகத்தை மட்டும் வெளிப்படுத்துவதாக இருக்கவில்லை. அந்தக் கொடுமைக்கான நீதி இன்னமும் நிலைநாட்டப்படவில்லை என்பதை நாட்டுக்கும் உலகத்துக்கும் இடித்துரைப்பதாகவும், தமிழ்மக்கள் இந்த விடயத்தில்எப்போதுமேஒன்றாக நிற்பார்கள் நீதி கிடைக்கும்வரை ஓயமாட்டார்கள் என்பதையும்எடுத்துக்காட்டுவதாகஇருந்தது. அதனையேஅந்த நிகழ்வின்போது நாடாளுமன்ற உறுப்பினர்கள், மாகாண சபை உறுப்பினர்கள்என்றுமக்கள்பிரதிநிதிகள் எல்லோரும் கலந்து கொண்டு கண்ணீர் அஞ்சலி செலுத்தியிருந்த காட்சி நினைவூட்டுவதாக இருந்தது.

வடமாகாணசபையின்சார்பில்நடைபெற்றநிகழ்வில்முதலமைச்சர்விக்னேஸ்வரன்நிகழ்த்தியஇரங்கல்உரையில்கடந்த ஆண்டு அரசபடைகளின்எதிர்ப்பு இன்றிமுள்ளிவாய்க்கால் நினைவேந்தல் இடைஞ்சலின்றி நடந்து முடிந்த பின்னணியை எடுத்துக்கூறியிருந்தார். வேறு ஒரு பிரிவினர் விரும்பியிருந்தது போல் முதலமைச்சர் தம் நிலைப்பாட்டை மாற்றிக் கொள்ளாமல் சகல தரப்பினரையும் வடக்குமாகாணசபையின் கீழ் ஒன்றிணைக்க விரும்பியிருந்ததைக் காணமுடிந்தது. அவ்வாறு அமைந்தமையால் தான் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவரும் எதிர்க்கட்சித் தலைவருமான இரா. சம்பந்தன் பல்வேறுபட்டவர்களும் கலந்து கொண்டு இரங்கல் தெரிவிப்பதுசாத்தியமாகிற்று. இதுஇந்த ஆண்டுடன் முடிவடைவதில்லை. வரப்போகும் காலங்களிலும் தமிழ் மக்கள் ஒன்றிணைந்து உயிர் நீத்த உறவுகளுக்காக இடைஞ்சலின்றி பிரார்த்தனைகளில் ஈடுபடவும் நினைவு நிகழ்வுகளை நடத்தவும் வழிகாட்டுவதாக அமையும்.

முழுவதும் சிங்களவர்களாக அரச படைகள் நிகழ்த்திய ஈவிரக்கமற்ற கொடூரக் குண்டுத் தாக்குதல்களினால் கொத்துக் கொத்தாக மடிந்துபோன தமிழ் உறவுகளை நினைவுகூர்ந்து இரங்கலில் ஈடுபட்டிருந்த மக்கள் மத்தியில் தமிழ் தேசியக் கூட்டமைப்புத் தலைவர் சம்பந்தன் பேசிக்கொண்டிருந்த போது ஊடகவியலாளர் என்று தன்னை வெளிப்படுத்திக் கொண்டநபர்ஒருவர்கேள்விகளைக்கேட்டு பேச்சாளரைத் தடுமாறச் செய்யமுற்பட்டுள்ளார். உண்மையான ஊடகவியலாளர் எவரும் இவ்வாறான இரங்கல் நிகழ்வில் இங்கிதமின்றிநடந்துகொண்டிருக்கமாட்டார். கேள்விகேட்பதைக் கூட்டம் முடிந்த பின்னர் அதுவும் அரசியல் நிகழ்வுகளின் போதேவைத்துக்கொள்வார்கள். மக்களைத்திசைதிருப்பவும் கூட்டத்தில் குழப்பம் விளைவிக்கவும் இவ்வாறு எடுக்கப்பட்ட முயற்சி முறியடிக்கப்பட்டமை வரவேற்கத்தக்கது. இறந்த உறவுகளை நினைவுகூற நடந்த நிகழ்வை இவ்வாறு களங்கப்படுத்த முயன்றவர்கள் கண்டிக்கப்பட வேண்டியவர்கள். கேள்விகேட்டு குழப்பம் விளைவிக்க முனைந்தவர் அரசியல்கட்சிதலைவர்ஒருவரின் வாகனத்திலேயே நிகழ்ச்சிக்குவந்தார்என்றும்அதேவிதமாகவேதிரும்பிச்சென்றமையும்அவதானிக்கப்பட்டிருப்பதாகநாடாளுமன்றஉறுப்பினர் எம்.ஏ. சுமந்திரன் தெரிவித்துள்ளார்.

மக்கள் துயரங்களை அரசியலுக்காகப் பங்குபோட்டுக் கொள்ளமுயல்பவர்கள்கண்டிக்கப்படவேண்டும், அவர்கள் மக்களால்புறக்கணிக்கப்பட்டுஓரங்கட்டப்பட வேண்டும். இப்படியானவர்களால்தான் தமிழ்ச்சமூகம் மலையகம் முதற்கொண்டுசீரழிந்துநிற்கின்றது. இந்தநிலமைகளுக்கெல்லாம் முடிவுகட்டப்படுவதற்கான முயற்சிகள் கனிந்து வரக்கூடிய காலகட்டத்தில் மீண்டும் தமிழ் சமூகத்தைப் பிரித்து அரசியல்நடத்தமுயலும்சக்திகள்கண்காணிக்கப்பட வேண்டும்.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் மூத்த தலைவர்களில் ஒருவரும்தமிழ்மக்களில்மாத்திரமின்றி தென்னிலங்கைமற்றும் இந்தியாவில் கூட பெருமதிப்புக்குரியவரால் திகழும் சம்பந்தனைஅவமதிப்பதானதுதமிழ்மக்கள் அனைவரையும் அவமதிப்பதாகும் என்பதை இவ்வாறு இழிசெயல்களில் ஈடுபடுபவர்கள் உணர்ந்து கொள்ள வேண்டும்.

தமிழர்களது கோரிக்கைகளையும் அரசினால் நிறைவேற்ற இயலாது

நீதி அமைச்சர் விஜேதாச ராஜபக்சவுடன் ஓர் நேர்காணல்

எம்.ஐ.முபாறக்

"தமிழ்த் தேசிய கூட்டமைப்பின் தலைவர் ஆர். சம்பந்தன் கூட்டாச்சித் தீர்வை நிராகரித்து ஒற்றை ஆட்சிக்குள் அதிகாரப் பகிர்வைக் கோருகின்றார். அவரே கூட்டாச்சியைக் கோராத போது நாம் அதை வழங்கவா போகிறோம்."

"தமிழ்த் தேசிய கூட்டமைப்பில் உள்ள ஏனைய கட்சிகள்கூட்டாச்சியைக் கோரினாலும் சம்பந்தனின் நிலைப்பாடுதான் எங்கும் எடுபடும்"

இவ்வாறு நீதி அமைச்சர் விஜயதாஸ ராஜபக்ஸ சிங்களத் தொலைக்காட்சி ஒன்றுக்கு வழங்கிய நேர்காணலில் குறிப்பிட்டார். நேர்காணலின் முழுமையான விவரங்கள் கீழே தரப்பட்டுள்ளன.

கேள்வி : ஐக்கிய தேசிய கட்சியில் சரத் பொன்சேகாவுக்கு உயர்பதவி வழங்கும் திட்டத்துக்கு நீங்கள் எதிர்ப்புத் தெரிவிப்பது ஏன்?

பதில் : ஐக்கிய தேசிய கட்சி மிகவும்இக்கட்டான கால கட்டத்தைக் கடந்து இப்போது இந்த நிலைக்கு வந்துள்ளது.

பலர் மேற்கொண்ட தியாகநடவடிக்கைகள்தான் கட்சியின் இந்த முன்னேற்றத்துக்குக் காரணம். 17 வருடங்களாக கட்சி வீழ்ச்சிப் பாதையிலேயே பயணித்தது.

இந்த வீழ்ச்சியில் இருந்து கட்சியைப் பாதுகாப்பதற்கு எந்தவிதப் பங்களிப்பும் செய்யாதவர்களுக்கு நாடாளுமன்ற உறுப்பினர் பதவியும், அமைச்சர் பதவியும் வழங்கி கட்சியில் உயர் பதவியும் வழங்குவது எந்த வகையில் நியாயம்?

ரோசி சேனாநாயக போன்றவர்கள் 60 ஆயிரம் வாக்குகளைப் பெற்று மாகாண சபையில் எதிர்க்கட்சித் தலைவராக இருந்து இந்தக் கட்சியைப் பாதுகாத்தவர்கள். இன்று ரோசி அரசியலில் தோல்வியடைந்து உள்ளார். ஆனால் இந்தக் கட்சிக்கு எதிராகத் தேர்தலில் போட்டியிட்டு 5 ஆயிரம் வாக்குகள்கூடப் பெற முடியாதவர்களுக்கு பதவிகளுக்கு மேல் பதவிகள் கொடுப்பதை ஏற்க முடியாது.

புதிய அரசமைப்பில் பௌத்த மதத்துக்கான முன்னுரிமை உறுதிப்படுத்தப்படும்

கே : புதிய அரசமைப்பில் பௌத்த மதத்துக்கான முன்னுரிமை நீக்கப்படுமா?

ப: நிச்சயமாக இல்லை. நாம் அரசமைப்பு யோசனைகள் எவற்றையும் தயாரிக்கவில்லை. மக்களிடம் இருந்துதான் யோசனைகளைத் திரட்டினோம். மக்கள் முன்வைத்த யோசனைகளுள் பௌத்த மதத்துக்கு எதிரான யோசனைகள் இருந்தால் அவற்றை அரச யோசனைகள் என்று சொல்லலாமா? இது ஜனநாயக நாடு. எவரும் எத்த

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



“

நாம் இங்கு ஒற்றை ஆட்சியை நீக்குவது பற்றியும், கூட்டாச்சித் தீர்வை வழங்குவது பற்றியும் பேசிக் கொண்டிருக்கின் றோம் ஆனால், சம்பந்தன் மாத்த றைக்கு வந்து சிங்கள மக்களிடம் என்ன கூறினார் என்பதை நாம் சிந் தித்துப் பார்க்க வேண்டும்.நாட் டைப் பிரிப்பதற்கு நாம் விரும்ப வில்லை. ஒற்றை ஆட்சிக்குள் அதிகாரப்பகிர்வையே கோருகின்றோம் என்று சம்பந்தன் கூறியிருந்தார். ஆகவே,சம்பந்தன் கூட்டாச்சியைக் கோரவுமில்லை; ஒற்றை ஆட்சியை எதிர்க்கவுமில்லை.

கைய யோசனைகளையும் முன் வைக்க முடியும்.நாம் அவற்றை ஏற் றால்தான் பிரச்சினை. நாம் எதனை யும் மறைக்கவில்லை. பௌத்த மதத் துக்கு இப்போது இருக்கின்ற முதலி டம், ஒருபோதும் நீக்கப்படமாட்டாது என்பதை பௌத்த சாசன அமைச்சர் என்ற வகையில் மிகவும் பொறுப்பு டன் கூறுகிறேன்.

சிறிமாவோ பண்டாரநாயக தனது அரசியல்தேவையை நிறைவேற்றிக் கொள்வதற்காக 1972 இல் அரசமைப் பொன்றை உருவாக்கினார்.

அதனைத் தொடர்ந்து ஜே.ஆர்.ஜெய வர்தன 1978 இல் கொண்டுவந்த அரசமைபுக்கூட மக்கள் நலனுக்காக அல்லாது அவரது அரசியல் தேவைக் காகவே உருவாக்கப்பட்டது.ஆனால், நாம் எந்தவோர் அரசியல் தேவைக் காகவும் அரசமைப்பை உருவாக்க மாட்டோம். மக்கள் நலனுக்காகவே உருவாக்கவுள்ளோம்.எமது செயற் பாடு இது தொடர்பில் வெளிப்படையா னதாகும்.

அரசியல் கட்சிகள்,சிவில் அமைப்பு கள் மற்றும் மத அமைப்புகள் போன் றவற்றுடன் கலந்துரையாடி சகலரது இணக்கப்பாட்டைப் பெற்றுக்கொள் வதே எமது திட்டமாகும்.

கே: ஆனால்,மகிந்த அணி இந்தப் பனியில் இருந்து விலகிவிட்டதே?

ப: அது பொய்; அவர்கள் விலக வில்லை.வழிநடத்தல் குழுவுக்கு அறிக்கை சமர்ப்பிக்க ஆறு உப குழுக்கள் உருவாக்கப்பட்டன.அந்த உப குழுக்கள் ஒவ்வொன்றிலும் மகிந்த அணியினர் இருந்தனர் அந் தக் குழுக்கள் அறிக்கை சமர்பித்த தும்அவற்றின்பணிமுடிந்துவிட்டது. குழுக்களும் தாமாகக் கலைந்து விட்டன.

கே: வடக்கு-கிழக்கு தமிழர்களின் பிரச்சினைக்கு கூட்டாச்சித் தீர்வு தான் வழங்கப்படும் என்று எதிர்க்கட் சிகள் கூறுகின்றனவே?

ப: நாம் இங்கு ஒற்றை ஆட்சியை நீக்குவது பற்றியும், கூட்டாச்சித் தீர்வை வழங்குவது பற்றியும் பேசிக்கொண்டிருக்கின்றோம். ஆனால்,சம்பந்தன் மாத்தறைக்கு வந்து சிங்கள மக்களிடம் என்ன கூறினார் என்பதை நாம் சிந்தித்துப் பார்க்க வேண்டும்.நாட்டைப் பிரிப்ப தற்கு நாம் விரும்ப வில்லை.

ஒற்றை ஆட்சிக்குள் அதிகாரப் பகிர் வையே கோருகின்றோம் என்று சம்பந்தன் கூறியிருந்தார். ஆகவே,சம்பந்தன் கூட்டாச்சியைக் கோரவுமில்லை; ஒற்றை ஆட்சியை எதிர்க்கவுமில்லை.

அவரே கூட்டாச்சியைக் கோராத போது நாம் கூட்டாச்சியைக் கொடுக் கப் போகிறோம் என்று சொல்வது நம்பக்கூடியவகையிலா இருக்கிறது.

கே: சம்பந்தன் அப்படிக்கூறினாலும், அவரதுகூட்டமைப்பில்உள்ளஏனைய கட்சிகள் ஒற்றை ஆட்சி முறை மையை எதிர்த்து கூட்டாச்சி முறை மையைத் தானே கோருகின்றன?.

ப: நீங்கள் கூறுவது சரி.வடக்கு முதல மைச்சர்கூட இது விடயத்தில் பாரதூர மான கருத்துக்களை வெளியிட்டு வருகின்றார். எவர்தான் எத்தகைய கருத்துக்களைக் கூறினாலும், கூட்ட மைப்பின் தலைவராக இருக்கும் சம் பந்தனின் கருத்துக்கள்தான் எங்கும் எடுபடும்.

எவரானாலும், எதை வேண்டுமானா லும் கோர முடியும்.அது ஜனநாயகம். அதை வைத்துக்கொண்டு ஒரு முடி வுக்கு வர முடியாது.அவர்கள் கேட்கும் எல்லாவற்றையும் வழங்க முடியாது.

கே : பௌத்த மதத்துக்கு இருக்கும் முதலிடம் நீக்கப்படமாட்டாது என்று சொல்கிறீர்கள்.ஆனால்,இந்த ஆட்சி யில்தானே அதிகமான தேரர்கள் சிறையில் அடைக்கப்பட்டுள்ளனர்.?

ப: அவர்கள் மீதான குற்றச்சாட்டு என் னவென நாம் முதலில் பார்க்க வேண் டும். அவர்கள் [illegible] குற்றங்க ளுக்காகத்தான் அவர்கள் தண்டிக்கப் படுகின்றார்கள். அரசியல் காரணங்க ளுக்காக எவரும் சிறையில் அடைக் கப்படவில்லை.சட்டம் எல்லோருக் கும் பொதுவானது.

பண்டாரநாயகவை கொலை செய்த குற்றத்துக்காக சோமராம தேரர் தூக் கிலிடப்பட்டார்.அதற்காக எல்லாத் தேரர்களும் தண்டிக்கப்படுகின்றனர் என்று அர்த்தமில்லை. தேரர்களும் இந்த நாட்டு சட்டத்தை மதித்து நடக்க வேண்டும் என்று கற்பிக்கப்படுகின்ற னர்.அனைவரும் சட்டத்தை மதித்தே நடக்க வேண்டும்.

தனித்துப் போனதால் சிக்கலில் மாட்டிக்கொண்ட புத்தர் சிலைகள்

கே: வடக்கு-கிழக்கில் புத்தர் சிலைகள் அதிகம் உடைக்கப்படுகின்றன என்று தெரிவிக்கப்படுகின்றதே?

ப: அங்கு நான் பல இடங்களுக்கு நேரில் சென்று பார்த்தேன்.தேரர்களு டனும் பேசினேன்.போர் இடம்பெற்ற காலகட்டத்தில் தற்காலிக இராணுவ முகாம்கள் அமைக்கப்பட்டபோது அங்கு நிரந்தரமாக புத்தர் சிலைகளை அமைக்க வேண்டாம் என்று சொல் லப்பட்டது.

இருந்தபோதிலும் அவை, நிரந்தரமாகவே வைக்கப்பட்டன. இறு தியில் முகாம்கள் நீக்கப்பட்டபோது சிலைகள் மாத்திரம் எஞ்சியிருந்தன. மக்கள் எவருமே இல்லாத குறிப் பாக,சிங்களர்கள் எவரும் இல்லாத நிலையில், தனித்துவிடப்பட்ட புத்தர் சிலைகளே இவ்வாறு சிக்கலில் மாட் டிக்கொண்டன. இருந்தும் நீங்கள் சொல்வதுபோல் பாரதூரமான சம்ப வங்கள் எவையும் இடம்பெற வில்லை.மட்டக்களப்பில் மாத்திரம் சம்பவம் ஒன்று இடம்பெற்றது. நாம் உடனடியாக அதில் தலையிட்டு நிறுத் திவிட்டோம்.

கே: ஊழல்,மோசடிக் குற்றச்சாட்டு க்கள் சுமத்தப்பட்டுள்ள மகிந்த ராஜ பக்ச குடும்பத்தை, ரணில் அரசு பாது காத்து வருவதாக குற்றஞ்சாட்ட ப்படு வது பற்றி உங்களின் கருத்தென்ன?

ப:இந்த அரசு கோத்தபாயவையும் மகிந்தவையும் பாதுகாத்து வருகின் றமை உண்மை.

புலிகளுடனான போரை வென்றெடுப் பதற்கு அவர்கள் இருவரும் பங்களிப்பு வழங்கியமையே இதற்குக் காரணம். அனால், ஊழல்,மோசடி குற்றச்சா ட் டுக்களில் இருந்து அவர்களை பாது காக்கவில்லை.

அவர்கள் ஊழல்,மோசடிகளில் ஈடுபட் டிந்தால் அவர்களுக்கு சட்டம் தண் டனை வழங்கும்.இதில் இருந்து அரசு யாரையும் பாதுகாகாது.



ஆசிரியருக்கான கடிதம்

இலவசக் கல்வி முறையை கேலிக்கு உள்ளாக்கும் நடைமுறை தடுக்கப்படுமா?

பாடசாலையொன்றில் புதிதாக மாணவர்களுக்கு அனுமதி வழங்கும் வேளையில், பாடசாலை அபிவிருத்திக்கென நன்கொடை கோரும் அதிபர்கள் குறித்து உடன் அறிக்கை தருமாறு. அதிகாரிகளுக்கு கல்வியமைச்சர் உத்தரவு பிறப்பித்துள்ளார். தரம் ஒன்று, தரம் ஆறு, மற்றும் க.பொ.த சாதாரண தர பெறுபேற்றின் அடிப்படையில் தரம் 12 என்பவற்றுக்கான அனுமதிகள் மேற்கொள்ளப்படும் காலகட்டங்களில் இத்தகைய அறிவித்தல்கள், உத்தரவுகள் வெளிவருவது ஒன்றும் புதுமை யான ஒன்றல்ல. குறிப்பாகச் சொல்லப் போனால், இது போன்ற அறிவித்தல்கள், அறிவுறுத்தல்கள் வெளியிடப்பட்ட பின்னரே பல பாடசாலைகளில் நன்கொடை பெறுவதற்கான ஏற்பாடுகளே மேற்கொள்ளப்படுகின்றன. இலவசக் கல்வி முறையை அர்த்தமுள்ளதாக்கவும், உண்மையில் வறுமை நிலையிலுள்ள கெட்டிக்காரப் பிள்ளைகள் தமது கல்வியைத் தொடர வழி ஏற்படுத்திக் கொடுக்கும் விதத்திலும், இத்தகைய பாடசாலை அனுமதிக் காலங்களில் ஓரிரு மாதங்களுக்கு பிரபலமான பாடசாலைகளில் பேணப்படும் கட்டண அறவீட்டை உறுதிப்படுத்தி வழங்கும் பற்றுச்சீட்டுப் படிவப் புத்தகங்களை சம்பந்தப்பட்ட கல்விப் பணிமனையோ அல்லது கல்வித் திணைக்களத்துடன் தொடர்புபட்ட பதவிநிலை அதிகாரிகளோ பொறுப்பேற்று வைத்திருந்து முற்றுமுழுதாக புதிய மாணவர்களுக்கான பாடசாலை அனுமதி இலவசமாக வழங்கப்பட்டு, கல்வி நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்ட பின்னர் அவற்றை பாடசாலைகளுக்கு மீளக் கையளிக்கலாம்.

அத்தகைய அர்த்தமுள்ள நடவடிக்கைகள் எடுப்பதை விடுத்து, இத்தகைய அறிக்கைகளை கூட்டு அரசும் விடுத்துக் கொண்டிருப்பது கல்வியில் ஊழல்களும், மோசடிகளும் தொடரவே வழிவகுக்கும். கொழும்பு மற்றும் மாகாணக் கல்வி அமைச்சுக்கள் இது விடயம் குறித்து அக்கறை காட்டிச் செயற்பட முன் வரவேண்டியது இன்றைய காலத்தின் அவசிய தேவையாகும்.

த.பிரவிந்தன்
நெல்லியடி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பொருளாதார அபிவிருத்தியில் சவால் மிகுந்த நாடாக இலங்கை மாறியுள்ளது

தலைமை அமைச்சர் ரணில் விக்கிரமசிங்க தெரிவிப்பு

பொருளாதாரத்தன்மைகளுக்குச்சவால் மிகுந்தநாடாகஇலங்கைமாறியுள்ளது. அதனைக்கட்டியெழுப்புவதற்கானஒன்றிணைவை மேற்கொள்ளத் திட சங்கற்பம் பூண வேண்டுமென்பதான கருத்து தலைமை அமைச்சர் ரணில் விக்கிரமசிங்கவால் வெளிப்படுத்தப்பட்டுள்ளது.

யாழ். மாவட்ட செயலகத்தின் கேட்போர் கூடத்தில் நேற்று முன்தினம் இடம்பெற்றிருந்த யாழ் மாவட்ட அபிவிருத்திச் செயற்றிட்ட உயர்மட்ட மாநாட்டில் கலந்துகொண்டுநிகழ்வைத்தலைமைதாங்கி கருத்துரைக்கும் போதே இந்த விடயங்கள்அவரால்தெரியப்படுத்தப்பட்டுள்ளது. இது குறித்து மேலும் கருத்துரைத்துள்ள அவர்,

"நாட்டின் நிலையான அபிவிருத்திக்கு அரச அதிகாரிகள் வினைத்திறனான முறையில் செயலாற்ற வேண்டும். எதிர்காலத்தில்முன்மாதிரியானதிட்டங்களை முன்னேடுக்கஅவர்கள்முன்வரவேண்டும். நாட்டிற்குரித்தான பல்வேறு செயற்றிட்டங்களை கொண்டுள்ள அபிவிருத்திப் பணிகளாக அவை அமையும்.

குறிப்பாகஎமதுநாட்டில்முன்னெடுக்கப்பட்டுவருவதானஅபிவிருத்திச்செயற்பாடுகளை துரித கதியில் முன்னேடுக்க வேண்டும்.

பொருளாதாரக் கொள்கைக் திட்டமிடல் அமைச்சு மற்றும் தலைமை அமைச்சரின்செயலகஏற்பாட்டில்பலம்மிக்கதோர் இலங்கையில் அனைவருக்கும் நன்மை கிடைப்பதான ஓர் பொருளாதாரம் என்னும் தொனிப்பொருளின் கீழாக யாழ் மாவட்டத்தில் பொருளாதார ரீதியான திட்டங்களை முன்னேடுக்க நாம் பல்வேறு செயற்றிட்டங்களை நடைமுறைப்படுத்தத் திட்டமிட்டுள்ளோம்.

அதற்கான அதீத பங்களிப்புகள் எதிர்பார்க்கப்படுகின்றது. புதிய யுகம் நோக்கிய மாற்றத்திற்கு எதிர்காலத்தினை சரியானமுறையில்திட்டமிடுவதானஅபிவிருத்திக்குமுன்னுரிமைகொடுக்கவேண்டும்" - என்றார்.

மேலும் இந்த அபிவிருத்தி மாநாட்டில் மீள்குடியேற்றம், புனர்வாழ்வு, இந்து சமயவிவகாரம், சிறைசாலைகள், சட்டம் ஒழுங்கு, பொது நிர்வாகக் கட்டமைப்பு மற்றும் காணி, இதர அபிவிருத்திட்டங்கள் தொடர்பாகவும் கலந்துரையாடப்பட்டது.

சிறந்த பொருளாதார முதலீட்டு வலயமாக இலங்கை கணிப்பீடு

ஆசிய பசுபிக் வலயத்தில் இலங்கையே சிறந்த பொருளாதார முதலீட்டு வலயமாகக் கணிக்கப்பட்டிருப்பதான தகவல் தலைமை அமைச்சர் ரணில் விக்கிரமசிங்க வால் வெளிப்படுத்தப்பட்டுள்ளது. தவிர, "சீனா, ஜப்பான்போன்றமுன்னணி நாடுகள் இலங்கையில் முதலீடு செய்வது குறித்து அதிக ஆர்வம் காட்டிவருகின்றன. இலங்கையில் பன்னாடுகளின் முதலீடுட்டுச் செயற்பாடுகளை ஊக்குவிப்பதற்கு அரசும் தனது பன்னாட்டுப் பொருளாதாரக் கொள்கைகளை மேம்படுத்தி வருகின்றது" - என்றார்.

அண்மையில் பீஜிங்கில் இடம்பெற்றதான பொருளாதார மாநாட்டில் கலந்துகொண்ட தன் பிற்பாடு உலக நாடுகளின் பிரதிநிதிகள் இலங்கையில்முதலீடுசெய்வதில் ஆர்வம்காட்டி வருகின்ற தன்மைகள் குறித்து கருத்துரைக்கும் போதே மேற்போந்த விடயங்கள் அவரால் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

கொமர்ஷல் வங்கியின் 'டொட்கொம் டீன்' கணக்குகள் மீள் வடிவமைப்புப் பெற்றுள்ளது

வாடிக்கையாளர்கள் புதிய அம்சங்களைப் பெற முடிகிறது

கொமர்ஷல் வங்கியின் 'டொட்கொம் டீன்' கணக்குகள் மீள் வடிவமைப்புப் பெற்றுள்ளதான தகவல் தெரிவிக்கப்படுகின்றது.

கொமர்ஷல்வங்கியின்மிகப்பிரபல்யமானஇளைஞர்சேமிப்புத்திட்டமாச்சொல்லப்படும் இந்த 'டொட்கொம் டீன்' கணக்குகளில் புதிய அம்சங்களோடு வாடிக்கையாளர் நலன் சார் அனுகூலங்கள் பலவும் சேர்க்கப்பட்டுள்ளதாகக் கூறப்படுகின்றது.

குறிப்பாக 10 வயதுக்கும் 18 வயதுக்கும் இடைப்பட்ட டொட்கொம் டீன் கணக்குகளை வைத்திருப்பவர்கள் தற்போது கல்வித் தேவைகளுக்கான கடன்களைப் பெற்றுக் கொள்ள முடிவதுடன் அவர்களின் டெபிட் காட்டினை கொள்வனவுச் செயற்பாடுகளுக்கும், பணத்தை மீளப் பெறவும் பயன்படுத்திக் கொள்ள முடிகிறது.

அதேவேளைஇணையத்தளம் மூலமான வங்கிசேவை, மொபைல் வங்கிச் சேவை என்பனவற்றை கட்டணமின்றி பயன்படுத்திக் கொள்ள முடியுமெனவும் வங்கி அறிவித்துள்ளது.

இவற்றுக்கு மேலதிகமாக டொட்கொம் கணக்குவைப்பாளர்களின் பெற்றோர்கள் அல்லது பாதுகாவலர்கள் நிலையியற் கட்டளைகள் ஊடாக கட்டணங்கள் ஏதுமின்றியே தமது பிள்ளைகளின் கணக்குகளுக்கான நிதி மாற்றங்களைச் செய்து கொள்ள முடியும்.

எல்லாகொடுப்பனவுகளின்போதும்காட்வைத்திருப்பவர்கள் கொம் பங்க் மெக்ஸ் லோயல்டி வெகுமதி திட்டத்துக்கான புள்ளிகளைப்பெற்றுக்கொள்ளும்உரித்துடையவர்கள்என்றும் வங்கி அறிவித்துள்ளது.

மேலும், 10 முதல் 18 வயதுக்கு இடைப்பட்டவர்கள் குறைந்த பட்சம் ஆயிரம் ரூபாவை வைப்பிலிட்டு டொட்கொம் டீன் கணக்கொன்றை திறக்கலாம். தற்போதுள்ள சேமிப்புக் கணக்கு வட்டிவீதங்களை விடவும் மேலதிகமாக ஒரு வீதம் இந்தகணக்குகளுக்காகசெலுத்தப்படுகின்றது. இதுகுறித்துக் கருத்துரைத்துள்ள வங்கியின் தனியார் வங்கிப் பிரிவுக்குப் பொறுப்பான பிரதி முகாமையாளர் திருமதி சன்றாவெல்கம, "பருவ வயதினர் மத்தியில் சேமிப்புப் பழக்கத்தை ஊக்குவிப்பதற்காக அறிமுகம் செய்யப்பட்டதே டொட்கொம் டீன் கணக்குகளாகும். அத்தோடு இளவயதில் இருந்தே தமக்கான நிதியை தாமே கையாள்வதானதோர் வாய்ப்பையும் அவர்களுக்கு வழங்குவதே இதன் நோக்கமாகும்.

கணக்குகளின்பண்புகள்குறிப்பிட்டகாலத்துக்குஒருதடவை தொழில்நுட்ப முன்னேற்றம் மற்றும் மாறிவரும் இயல்புகள் என்பனவற்றின் அடிப்படையில் மேம்படுத்தப்படுகின்றன. கணக்கு வைத்திருப்பவர்களுக்கு அதிஉச்ச நன்மைகளை வழங்குவதும் இதன் நோக்கமாகும்" - என்றார்.

இலங்கைக்கான ஜீ.எஸ்.பி பிளஸ் வரிச்சலுகை நடைமுறைக்கு

2021ஆம் ஆண்டு வரையான காலப்பகுதிக்கு கிடைக்கவுள்ளது

இலங்கைக்குமீண்டும்வழங்கப்பட்டுள்ளதான ஜீ.எஸ்.பி பிளஸ் வரிச் சலுகை நடைமுறைக்கு வந்துள்ளது.

இதன்படிஎதிர்வரும்2021ஆம்ஆண்டு வரையான காலப்பகுதிக்கு இந்தச் சலுகையானது இலங்கைக்கு வழங்கப்படும் என ஐரோப்பிய ஆணைக்குழு அறிவித்துள்ளது.

அதற்கமைவானதாக இலங்கையில் இருந்து ஐரோப்பிய நாடுகளுக்கு ஏற்றுமதி செய்யப்படுகின்ற பொருள்களுக்கு அந்தநாடுகளில்விதிக்கப்படுவதானவரி மேலீடுகள் தளர்த்தப்பட்டுள்ளது.

இதன்மூலம்இலங்கைக்குவருடாந்தம் 5 ஆயிரம் கோடி ரூபாவுக்கும் அதிகமான வருமானம் கிடைக்குமென ஐரோப்பிய ஒன்றியம் நம்பிக்கையை வெளிப்படுத்தியுள்ளதாகக் கூறப்படுகிறது.

இலங்கையின் ஏற்றுமதிப் பொருள்களில் மூன்றில் ஒரு பகுதியானவை ஐரோப்பியநாடுகளுக்கேஏற்றுமதிசெய்யப்பட்டு வருகின்றமை குறித்து நோக்கத்தக்கது.

மிகச்சிறந்த பொதுப்பட்டியலிடப்பட்ட நிறுவனங்களில் ஒன்றாக டி.எவ்.சி.சி தெரிவு

இலங்கையின் மிகச் சிறந்த பொதுப்பட்டியலிடப்பட்ட நிறுவனங்களில்ஒன்றாக டி.எவ்.சி.சி வங்கி தெரிவுசெய்யப்பட்டுள்ளது.

2015/16 நிதியாண்டிற்கான பிஸ்னஸ் ருடே ரொப் 30 விருது வழங்கல் நிகழ்வின் போதே இந்த கௌரவத்தினை டி.எவ்.சி.சி வங்கிபெற்றுக்கொண்டுள்ளது. வங்கியின்பிரதமநிறைவேற்றுஅதிகாரி அர்ஜீன்பெர்ணாண்டோநிதியமைச்சர் ரவிகருணாநாயக்காவிடமிருந்து விருதினை பெற்றுக்கொண்டார். தற்போது வங்கியானது 21ஆவது இடத்தைப்பெற்றுக்கொண்டுள்ளதுடன் அதன் பன்முக வர்த்தக மற்றும் அபிவிருத்தி வங்கியியல் செயற்பாடுகளின் பேண்தகைமையை [illegible]ப்படுத்தியமையை [illegible] இவ்விருதைவங்கி [illegible]து.

விருது தொடர்பில் வங்கியின் பிரதம நிறைவேற்று அதிகாரி அர்ஜீன் பெர்ணாண்டோ கருத்துரைக்கையில், "மிகச் சிறந்த செயற்பாடுகளை வெளிப்படுத்தும் 2015/16 நிதியாண்டுக்கான முதல் 30 பொதுப்பட்டியலிடப்பட்ட நிறுவனங்களில்ஒன்றாக பிஸ்னஸ் ருடே இனால் நாம் தெரிவுசெய்யப்பட்டுள்ளமைஎமக்குமிகுந்த பெருமையளிக்கின்றது.

வாடிக்கையாளர்களுக்கு அதிநவீன தொழில்நுட்பத்தின்பின்புலம்கொண்ட தீர்வுகளை அளிப்பதுடன் அவர்களின் வாழ்க்கைத்தரத்தினை மேம்படுத்துவதற்கான நிதிசார் தொழில்நுட்ப தீர்வு[illegible]ளை அளித்து வாடிக்கையாளர்களின் [illegible]ங்கியியல் சேவைகளை பலப்படுத்துவது தொடர்பில் நாம் தீவிர கவனம் செலுத்துகின்றோம். நுகர்வோர் வங்கியியல் எமது எதிர்கால வங்கி நடவடிக்கைகளில் முக்கிய இடத்தினை பிடித்துக்கொள்ளும். வாடிக்கையாளர்கள் தமது வாழ்க்கையினை மேலும் சிறப்பாக்கும் வகையிலானதொழில்நுட்பம் சார்ந்த தீர்வுகளை எம்மிடமிருந்து எதிர்பார்க்கமுடியும்.

இந்தக் கௌரவங்கள் எமது நிறுவனத்தின்முழுமையானசெயற்பாடுகளை மேலும் சிறப்பானதாக மேற்கொள்ளவும், அதன்வழியே முன்னோக்கி நகர்வதற்கும் தன்னம்பிக்கையை தந்துள்ளது. வாடிக்கையாளர் நலன்சார்ந்து முன்னோக்கி பயணிப்பதற்கான வலிமையை நாம் கொண்டுள்ளோம்" என்றார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாணவர்களின் தொழில்நுட்ப தேடல்களுக்கு ஏற்றதாகக் கல்வி உருவாக்கப்பட வேண்டும்

வயவன் சிவசாகரன்

(நேற்றுமுன்தினம் வெளியான **"மாணவர் எதிர்கொள்ளும் சவால்களும் அவற்றுக்கான ஆற்றுப்படுத்தல்களும்"** என்ற தலைப்பிலான கட்டுரையின் தொடர்ச்சி....)

மாணவர்களுக்குப் பாடசாலைமீது பற்று ஏற்படுவதோடு தமது நாளாந்தக் கடமைகளைச் சரியாக நிறைவேற்றிக் கொள்வதுடன் எதிர்கால சந்ததியினருக்கு உதவக்கூடியவர்களாக உருவாக்கப்படுகின்றனர். ஒவ்வொரு பாடசாலைளிலும் -

01. நீதி நூல்கள் பற்றிய விடயங்கள்கூறுதல்
02. உலக சமயப் பெரியார்கள் வரலாறு பற்றிக் கூறுதல்
03. உலக சாதனையாளர்கள் கண்டுவிடிப்பாளர்கள் பற்றிக் கூறுதல்
04. தியானப் பயிற்சிகள் மேற்கொள்ளல்
05. யோகாசனம். மூச்சுப் பயிற்சிகளுக்கு வழிப்படுத்தல்
06. தொன்மைப் பொருள்களைப் பேணுதல்

இதன் மூலமே ஒழுக்கம் நிறைந்த ஒரு மாணவ சமுதாயத்தை உருவாக்க முடியும் எனலாம்

பாடசாலை அதிபர், ஆசிரியர்கள், சமூக அங்கத்தவர்கள் மாணவர்களுக்கு முன்மாதிரியானவர்களாகச் செயற்படல். அவர்களைப் பின்பற்றி மாணவர்கள் உருவாக்கப்பட வேண்டும். எனவே இவர்ககளிடம் எதிர்பார்க்கப்படும் பண்புகள் பின்வரு மாறு:

01. நல்ல மனிதனாக இருத்தல்
02. நற்பண்புகளைக் காண்டிருத்தல்
03. அர்ப்பணிப்புடையவர்களாக இருத்தல்
04. அனைவரையும் சமமாக மதித்தல்
05. மற்றையவர்களது கருத்துக்களுக்கு மதிப்பளித்தல்
06. புத்தாக்க சிந்தனையுடையவர்களாக இருத்தல்
07. 5எஸ் முகாமைத்துவத்தைக் கடைப்பிடிப்பவராக இருத்தல்
08. சூழலை அழகுடையதாக வைத்திருத்தல்
09. இயற்கையை நேசிப்பராக இருத்தல்
10. பாடம் தொடர்பாக முழு நிபுணத்து வமுடையவராக இருத்தல் போன்ற பல்வேறு ஆளுமைப் பண்புகள் கொண்டிருப்பது மிகவும் அவசியமாகும்.

தன்னம்பிக்கை வேண்டும்

மாணவர்கள் ஒவ்வொருவரும் தன்னம்பிக்கை உடையவர்களாக இருத்தல் வேண்டும். "யானையின் பலம் தும்பிக்கையிலே. மனிதனின் பலம் நம்பிக்கையிலே" அதாவது என்னால் முடியும் இல்லையேல் முயற்சி செய்வேன் என்ற இலட்சியத்துடன் வாழ வேண்டும் இந்தியாவின் முன்நாள் அரசதலைவர் அப்துல் கலாம் "கனவு காணுங்கள்" என்றார் அதாவது நான் எதுவாக வர நினைக்கின்றேனோ அதுவாகவே வருவதற்காக கனவு காணுதல் வேண்டும். எமது இலட்சியம் உயர்வானதாக இருக்க வேண்டும். அப்போது தான் நாம் உயர்நிலை அடைய முடியும். கற்றல் கற்பித்தலின் போது தலைமைத்துவத்தை வளத்தல் பிரச்சினைகளுக்குத் தீர்வு காணல் கற்றல் மூலம் நம்பிக்கையைக் கட்டியெழுப்ப முடியும்.

மாணவர்களது பாடத் தெரிவானது சிறந்த முறையில் அமைய வேண்டும் அப்போது தான் பிள்ளை விருப்புடன் கற்கும் தரம் 6 தரம் 9 க.பொ.த, க.பொ.த உயர்தரம் ஆகிய வகுப்புகளில் மாணர்களது பாடத் தெரிவு முக்கியம் பெறுகின்றது. எனவே மாணவர்களது விருப்பு, வெறுப்பு, ஆற்றல் என்பவற்றுக்கு ஏற்ப பாடத் தெரிவு அமைய வேண்டும் இந்தப் பாடத் தெரிவில் பல்வேறு காரணிகள் செல்வாக்குச் செலுத்துகின்றன.

01. பெற்றோரது விருப்பு, குடும்பச் செல்வாக்கு
02. சகபாடிக்குழுக்கள்
03. பாடசாலைக் காரணிகள்
04. பரீட்சைப் பெறுபேறுகள்
05. பிள்ளைகளின் ஆற்றல்
06. தனியார் கல்வி நிறுவனங்களின் செல்வாக்கு
07. மாணவர்களின் எதிர்காலம் பற்றிய இலக்கு
08. புதிய பாடமாக தொழிநுட்ப பாட அறிமுகம்
09. பிள்ளைகளது மொழியறிவு
10. தொழில் வழிகாட்டல், ஆலோசனை வழங்கல் சேவை
11. தொடர்பு சாதனங்களின் பங்களிப்பு
12. பல்கலைக்கழக அனுமதிக்கான Z புள்ளி

அன்பான பெற்றோர்களே! உங்களது விருப்பங்களைப் பிள்ளைகள் மீது திணிக்காதீர்கள் அவர்களுக்குத் தேவையான ஆலோசனைகளை வழங்கி அவர்களே தமது விருப்புக்கு ஏற்ப பாடங்களைத் தெரிவு செய்யும் போது உயர்நிலைக்கு வரமுடியும். ஒவ்வொரு பாடத் தெரிவு தொடர்பான பலம், பலவீனம், நன்மை, தீமை எதிர்கால எதிர்பார்ப்புக்கள் தொடர்பாக விளக்கமளிப்பது சிறப்பானதாக அமையும். பாடசாலையானது பிள்ளைகளை விருப்புடன் வரவேற்றக்கூடிய வகையில் அங்கு பௌதிகக் கட்டமைப்பு, மனித வளம், ஏனைய அம்சங்கள் காணப்பட வேண்டும். அதற்கு ஏற்றாற்போல பிள்ளை நேயப் பாடசாலைச் சூழலின் அம்சங்கள் கருத்தில் கொள்ளப்பட வேண்டும்.

இந்த அம்சங்களை நிறைவேற்றுவதற்கு அதிபர், ஆசிரியர் சமூகம் சார்ந்த உறவுகள் சீராகப் பேணப்படும் போதே வினைத்திறன், விளைதிறன் கொண்ட பாடசாலையாக மிளிர முடியும்.

தொழில்நுட்பத் தேடல்கள்

பாடசாலை மாணவர்களின் தொழிநுட்ப தேடல்களுக்கு தீனி போடுவதாக உருவாக்கப்பட வேண்டும். நவீன மாற்றங்களை உள்வாங்கக் கூடிய வகையிலே உலகில் ஏற்படும் மாற்றங்களை உடனுக்குடன் அறிந்து கொள்வதற்கான வாய்ப்புக்கள் வழங்கப்பட வேண்டும். அப்போதுதான் அறிவானது இற்றைப்படுத்தப்படும் மாணவர்களது கற்றலும் வினைத்திறனடையும். ஏனைய துறைகளோடு ஒப்பிடும் பொழுது கல்வியில் தொழிநுட்பப் பயன்பாடு மிகக் குறைந்தளவே எனவே வெளிநாட்டில் வாழும் உறவுகளிடமிருந்து இதற்கான உதவிகளைப் பெற்று பாடசாலைகளை நவீன தொழிநுட்ப சாதனங்களுடன் கூடிய கற்றல் வள நிலையங்களாக்குவோம்.

> அன்பான பெற்றோர்களே! உங்களது விருப்பங்களைப் பிள்ளைகள் மீது திணிக்காதீர்கள். அவர்களுக்குத் தேவையான ஆலோசனைகளை வழங்கி, அவர்களே தமது விருப்புக்கு ஏற்ப பாடங்களைத் தெரிவு செய்யும் போதே அவர்கள் உயர் நிலைக்கு வரமுடியும். ஒவ்வொரு பாடத் தெரிவு தொடர்பான பலம், பலவீனம், நன்மை, தீமை எதிர்கால எதிர்பார்ப்புக்கள் தொடர்பாக அவர்களுக்கு விளக்கமளிப்பது சிறப்பானதாக அமையும். பாடசாலையானது பிள்ளைகளை விருப்புடன் வரவேற்றக்கூடிய வகையில் அங்கு பௌதிகக் கட்டமைப்பு, மனித வளம், ஏனைய அம்சங்கள் காணப்பட வேண்டும்.

பாடசாலைகள் மாணவர்களை ஏளனமாகப் பார்க்காமல் அவர்கள் ஒவ்வொருவரும் எமது நாட்டின் எதிர்கால வளம் என நினைத்து அவர்களிடம் பொதிந்துள்ள ஆறறல்களை வெளிக்கொண்டு வருவோம் ஏனெனில் இவர்கலே எதிர் காலத்தில் வைத்தியர்கள், பொறியியலாளர்கள், ஆசிரியர்கள், தொழிநுட்பவியலாளர்கள், தொழில்அதிபர்கள், பொருளியல் நிபுணர்கள், இராணுவம், பொலிஸ், போக்குவரத்து. சுகாதாரத் துறை எனப் பல்வேறு துறைகளையும்அலங்கரிக்கப்போகின்றவர்கள். எனவே இவர்களது ஆற்றல்களை நல்லமனப் பாங்குடன் விருத்தி செய்து எமது பெருளாதாரத்தையும், நாட்டையும் வளர்ச்சிப் பாதைக்கு கொண்டு செல்வது நம் அனைவரினதும் கடமையாகும்.

"எதிர்கால உலகில் பல துறைகளையும் அலங்கரித்து வாசனை பரப்புபவர்கள் எமது வகுப்பறையில் உள்ள மாணவர்களே. அவர்களின் ஆற்றல்களை மதிப்போம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

2017 வைகாசி மாத பலன்

மகரம்

எவருக்காகவும் குறிக்கோளை மாற்றிக் கொள்ளாத நீங்கள் அழுத்தமான கொள்கைப் பிடிப்புள்ளவர். ராஜ கிரகங்களான சனியும், குருவும் வலுவாக இருப்பதால் வாழ்வு சிறப்புற்றிருக்கும். அழகு, ஆரோக்கியம் கூடும். குடும்பத்தில் அடுத்தடுத்த சுப நிகழ்ச்சிகளால் மகிழ்ச்சி தங்கும். பிரபலங்கள் உங்களுக்கு ஆதரவாகப் பேசுவார்கள். வீடு கட்ட வங்கிக் கடன் உதவி கிடைக்கும்.

கல்யாணப் பேச்சு வார்த்தை சுமூகமாக முடியும். எதிர்ப்புகள் குறையும். வெளிநாடு செல்லும் வாய்ப்பு வரும். குடும்பத்தினருடன் புண்ணிய ஸ்தலங்களுக்குச் சென்று நேர்த்திக் கடனைச் செலுத்துவீர்கள். பழைய நண்பர்கள் தேடி வந்து பேசுவார்கள். திடீரென்று அறிமுகமாகுபவர்களால் பயனடைவீர்கள்.

நீண்ட காலமாகச் செல்ல வேண்டுமென்று நினைத்திருந்த சுற்றுலா தலத்துக்கும் சென்று வருவீர்கள். பழைய கடனை நிவர்த்தி செய்வதற்கு கடன் உதவிகள் கிடைக்கும். சூரியன் சாதகமாக இல்லாததால் அலைச்சல் அதிகமாகும். திடீர் பயணங்கள், வீண் செலவுகள் அதிகமாகும். அரசகாரியங்கள் தடைப்பட்டு முடியும். அரச அதிகாரிகளைப் பகைத்துக் கொள்ளாதீர்கள். வழக்குகளில் எச்சரிக்கையுடன் செயற்படப்பாருங்கள். வழக்கறிஞரை மாற்ற வேண்டிய சூழ்நிலை உருவாகும். சுக்கிரனும், புதனும் சாதகமான வீடுகளில் செல்வதால் விருந்தினர்கள், உறவினர்களின் வருகையால் வீடு களைக்கட்டும். வாகனத்தைச் சீர் செய்வீர்கள். பழுதான மின்னணு, மின்சார சாதனங்களை மாற்றுவீர்கள். 25ஆம் திகதி வரை செவ்வாய் 5இல் நிற்பதால் கர்ப்பிணிப் பெண்கள் மருந்துவரின் ஆலோசனையின்றி எந்த மருந்தையும் உட்கொள்ள வேண்டாம். பிள்ளைகள் இன்னும் கொஞ்சம் கடினமாக உழைக்கலாமே என்றெல்லாம் அவ்வப்போது ஆதங்கப்படுவீர்கள். உங்களுடைய இளமைக் காலங்களை அவர்களுடன் ஒப்பீட்டுக் கொண்டிருக்க வேண்டாம். பூர்வீகச் சொத்துப் பிரச்சினையில் இப்போது மூக்கை நுழைக்காதீர்கள். கன்னிப் பெண்களே! உங்கள் ரசனைக் கேற்ப நல்ல வரன் அமையும். தடைகள் நீங்கும். பெற்றோரின் பாச மழையில் நனைவீர்கள்.

வியாபாரத்தில் புதிய தொழில் தொடங்கும் முயற்சி நல்ல விதத்தில் முடியும். பழைய கடன் வசூலாகும். பழைய வாடிக்கையாளர்களும் தேடி வருவார்கள். உத்தியோகத்தில் சலுகைகள் கிடைக்கும். அதிகாரிகள் மதிப்பார்கள். சக ஊழியர்கள் மத்தியில் செல்வாக்குக் கூடும்.

வரலாற்றில் இன்றைய தினம்

1370-புருஷல்ஸ் படுகொலை நாள். யூதர்கள் பலர் கொல்லப்பட்டதுடன் யூத சமூகத்தினர் பல வந்தாமாக புருஷெல்சிலிருந்து வெளியேற்றப்பட்டனர்.

1840 -குற்றத் தீர்ப்பு அளிக்கப்பட்டவர்கள் நியூ சவுத் வேல்ஸ் குடியேற்ற இடத்துக்க அனுப்பப்படுவது இல்லாமற் செய்யப்பட்டது.

1906-தமது பறக்கும் இயந்திரத்துக்காக காப்புரிமத்தை அமெரிக்காவில் ரைட் சகோதரர்கள் பெற்றுக் கொண்டனர்.

1915 -ஸ்கொட்லாந்தில் மூன்று தொடருந்துகள் மோதிக் கொண்டதில் 227 பேர் உயிரிழந்ததுடன் 246 பேர் காயமடைந்தனர்.

1927 -சீனாவில் ஷினிங்கில் இடம்பெற்ற 8.3 அளவிலான நிலநடுக்கத்தில் 200, 000 பேர் உயிரிழந்தனர். உலகின் மிக மோசமான நில நடுக்கங்களில் இதுவும் ஒன்றாகும்.

1939- இரண்டாம் உலகப் போர் இடம்பெற்றது. ஜேர்மனியும் இத்தாலியும் உருக்கு ஒப்பந்தத்தில் கையொப்பமிட்டன.

1968 -அமெரிக்காவின் USS ஸ்கோர்ப்பியர் அணுசக்தி நீர் மூழ்கிக் கப்பல் 99 பேருடன் மூழ்கியது.

1972- புதிய அரசமைப்புக்கு அமைவாக இலங்கை குடியரசானது. இதற்கமைய அதன் பெயர் சிறிலங்கா என மாற்றப்பட்டது. அத்துடன் பொது நலவாயத்திலும் இணைந்தது.

1990-வடக்கு மற்றும் தெற்கு யேமன் இணைந்து யேமன் குடியரசு உருவானது.

1996-மியன்மார் இராணுவ ஆட்சியாளர்களால் ஆன்சாங் சூகியின் 71 ஆதரவாளர்கள் சிறையிலடைக்கப்பட்டனர். ஜனநாயகத்துக்கு ஆதரவான கூட்டங்களைத் தடை செய்யவே இந்த நடிவடிக்கை மேற்கொள்ளப்பட்டது.

2000-யாழ்ப்பாணத்தைக் கட்டுப் பாட்டுக்குள் கொண்டுவரும் சண்டையில் 150 விடுதலைப் புலிகளின் போராளிகள் உயிரிழந்தனர்.

2010-எயர் இந்திய வானூர்தி சேவை வானூர்தி போயிங்க 737 பெங்களூரில் தரையிறங்கும் வேளையில் விபத்துக்குள்ளானது. அதிலிருந்த 166 பேரில் 158 பேர் உயிரிழந்தனர்.

2015-பொதுக் கருத்துக் கணிப்பின் மூலம் ஆண் ஆணைத் திருமணம் செய்வதனைச் சட்டபூர்வமாக்கியது அயர்லாந்துக் குடியரசு.

1999-தமிழ் இளைஞர்களைப் படையில் சேர்க்கும் முயற்சி தொடரும் என இலங்கை இராணுவத்தரப்பு அறிவிப்பு.

2003 -அல்ஜீரியாவில் பூகம்பம், 500 பேருக்கு மேல் உயிரிழப்பு.

நாளை

வைகாசி-09
செவ்வாய்க்கிழமை -23.05.2017
திதி: துவாதசி மு.ப.08.52
நட்சத்திரம்: அச்சுவினி பி.இ.04.03
சுபநேரம்:10.22-11.52 வரை
ராகுகாலம்:02.32-04.22 வரை
பிரதோஷ விரதம்

வீதி விபத்துக்கள் குறைவது பொலிஸார் மற்றும் சாரதிகளின் கரங்களில்

இலங்கையில் நடைமுறைக்கு வந்துள்ள புதிய போக்குவரத்துச் சட்டங்கள் வரவேற்கத்தக்கன என்றாலும், அந்த சட்டம் சாரதிகள் மத்தியில் பயத்தையும், நிதானமாக வாகனத்தை செலுத்த வேண்டும் என்ற உணர்வையும் ஏற்படுத்துமா? என்பது சந்தேகமே. நூற்றுக்கு எண்பது வீதமான சாரதிகள் வாகனத்தை சட்டத்தின் பிரகாரம் ஓட்டுபவர்களாக இல்லை என்பதே உண்மை. அவ்வாறாக இருப்பதற்கு முக்கிய காரணம் கையூட்டு வழங்கப்படுவது ஆகும். வடக்கு மாகாணத்தை பொறுத்தவரையில் சாரதிகள் மூன்று வகையானவர்கள் என்று கூறவேண்டும். ஒன்று தாறுமாறாக வகனத்தைச் செலுத்தி, அதனால் வரும் குற்றச் செயல்களுக்காக பொலிஸாருக்கு இலஞ்சம் கொடுப்பவர்கள், இரண்டு, எந்தக் குற்றமும் செய்யாதவராக இருந்தாலும், பொலிஸார் மறித்து ஏதாவது கூறிப் பணம் கேட்கும் போது எதுவும் பேசாது எதுக்கு வம்பு என்றுநினைத்துப் பணத்தை கொடுப்பவர்கள், மூன்றாவது, பொலிஸார் பணத்தைக் கேட்டால் கூட எந்தத் தப்பும் இல்லை என்று வாதாடி அதில் வென்று காட்டுபவர்கள். இங்கு இலஞ்சம் என்பதே முன்னுரிமை பெற்றுவிடுகின்றது.

சாரதிகளுக்கு ஏதிரான சட்டத்தை இயற்றி எந்தப் பயனும் இல்லை. பொலிஸாருக்குத் தான் புதிய சட்டங்களை இயற்ற வேண்டும் என்பது போல் ஆகிவிட்டது. வடக்கில் நாற்பது வீதமான போக்குவரத்துப் பொலிஸார் இலஞ்சம் வாங்குகின்றார்கள் என்றுதான் கூறவேண்டும். 500 ரூபாவுக்கோ, 1000 ரூபாவுக்கோ ஆசைப்படும் அவர்கள் சாரதிகளிடம் எதாவது கூறி, பணத்தை பெற்றுக் கொள்கின்றனர். இதனால் குற்றம் இழைக்கும் சாரதிகள் தப்பிக்கவிடப்படுகின்றார்கள். ஒரு சில நேர்மையான சாரதிகளும் இந்த இலஞ்சத்துக்குள் சிக்குண்டு பணத்தை இழந்து விடுகின்றனர். இந்த விடயம் இங்குள்ள மக்களுக்கும், சாரதிகளுக்கும், பணம் வசூலிக்கும் போக்குவரத்துப் பொலிஸாருக்கும் நன்கு தெரியும். சட்ட விதிமுறைகளுக்கு அப்பால் வாகனத்தைச் செலுத்தும் எவராக இருந்ததாலும், அவர்களுக்குரிய தண்டம் அறவிடப்பட வேண்டும். அப்போதுதான் தலை விரித்து ஆடுகின்ற வாகன விபத்துக்களைத் தடுக்க முடியும். ஒரு சில பொலிஸார் மத்தியில் காணப்படும் இந்த இலஞ்ச ஊழல் ஒழிக்கப்பட வேண்டும். இல்லையேல் என்னதான் புதிய சட்டங்கள் கொண்டு வந்தாலும் பயனில்லை.

தற்போது இலங்கையில் நடைமுறையில் உள்ள மோட்டார் போக்குவரத்துச் சட்டம் புதிய நடைமுறையை நடைமுறைக்குக் கொண்டுவந்துள்ளது. இதன் அடிப்படையில் அதிக தண்டப் பணமும் சாரதி அனுமதிப் பத்திரத்தை இடை நிறுத்தி வைப்பதும் நடைமுறையில் உள்ளது.

"திருடனாய்ப் பார்த்து திருந்தாவிட்டால் திருட்டை ஒழிக்க முடியாது" என்று முதுமொழி உண்டு. சாரதிகள், மற்றும் பொலிஸார் தங்களுடைய நலனிலும், பொது மகக்ளுடைய நலனிலும் அக்கறை செலுத்தி வாகத்தைச் செலுத்தினாலோ, அன்றிப் புதிது புதிதாக சட்டங்களை இயற்றி அவர்களை திருத்திவிடமுடியாது.

ஒவ்வொரு குற்றச் செயலுக்கும் வெவ்வோறு தண்டப் பணத்தை நிர்ணயம் செய்வதால் வீதி விபத்துக்கள் குறைந்துவிடாது. பொலிஸார் தமது கடமைகளைச் சீராகச் செய்தால் போலும் சாரதிகள் தாமாகவே திருந்தி விடுவார்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இன்றைய நாள் உங்களுக்கு எப்படி?

நகுலன் : வித்யா

மேடம்: குடும்பத்தின் சிரமம் பற்றிப் பிறரிடம் பேச வேண்டாம். தொழில், வியாபாரத்தில் நிலுவைப்பணி நிறைவேற்றுவது நல்லது. சுமாரான வருமானம் கிடைக்கும். வெளியூர் பயணத்தில் திடீர் மாற்றம் உண்டாகும்.

இடபம்: நண்பர்களால் பிரச்சினைகளுக்கு ஆளாகலாம். தொழில், வியாபாரத்தில் வருமானம் சுமாராக இருக்கும். பணியாளர்கள் பணி விடயமாக வெளியூர் செல்வர். நகை, பணம் இரவல் கொடுக்க, வாங்க வேண்டாம்.

மிதுனம்: மற்றவர் நலனில் அக்கறை கொள்வீர்கள். உறவினர்களின் வருகை மகிழ்ச்சி அளிக்கும். தொழில், வியாபாரத்தில் லாபம் உயரும். அரசியல்வாதிகளுக்குப் பதவி பெற வாய்ப்பு உண்டு.

கடகம்: முக்கியப்பணி நிறைவேற அனுகூலம் உண்டாகும். தொழில், வியாபார வளர்ச்சியால் ஆதாயம் அதிகரிக்கும். பணியாளர்கள் பணி விடயமாக வெளியூர் செல்வர்.

சிங்கம்: எதிர்பாராத வகையில் திடீர்ச் செலவு ஏற்படலாம். தொழில், வியாபாரத்தில் கடின உழைப்புத் தேவைப்படும். லாபம் சுமாராக இருக்கும். பணியாளர்கள் பணிச்சுமையைச் சமாளிக்கத் திணறுவர்.

கன்னி: மனதில் இனம் புரியாத குழப்பம் ஏற்படலாம். தொழில், வியாபாரத்தில் லாபம் சுமாராக இருக்கும். பணியாளர்கள், சக ஊழியர்களுடன் கருத்து வேறுபாடு கொள்வர்.

துலாம்: திறமையுடன் செயல்பட்டு வெற்றி காண்பீர்கள். எதிர்பார்ப்பு இனிதே நிறைவேறும். தொழில், வியாபாரத்தில் லாபம் திருப்திகரமாக இருக்கும். பணியாளர்கள் சலுகை கிடைக்கப் பெறுவர்.

விருச்சிகம்: உங்களின் செயலைச் சிலர் பரிகாசம் செய்யலாம். தொழிலில் திட்டமிட்ட இலக்கை அடைய விடாமுயற்சி தேவை. லாபம் சுமார். பெண்களுக்குச் செலவுக்கான பணத்தேவை அதிகரிக்கும்.

தனுசு: சமயோசிதமாகச் செயல்பட்டு வளர்ச்சி அடைவீர்கள். தொழில், வியாபாரத்தில் லாபம் பன்மடங்கு உயரும். நிலுவைப் பணம் வசூலாகும். பெண்கள் விருந்து, விழா வில் கலந்து கொள்வர்.

மகரம்: மனதில் குழப்பம் ஏற்பட்டு விலகும். நண்பர்களிடம் எதிர்பார்த்த உதவி கிடைக்கும். தொழில், வியாபாரத்தில் லாபம் சுமாராக இருக்கும். பெண்கள், பிள்ளைகளால் சிரமத்துக்கு ஆளாகலாம்.

கும்பம்: குடும்பத்தினரின் ஆலோசனையை ஏற்பது நல்லது. தொழில், வியாபாரத்தில் அபரிமிதமான வளர்ச்சி ஏற்படும். வருமானம் அதிகரிக்கும். பணியாளர்களுக்கு பாராட்டு வெகுமதி கிடைக்கும்.

மீனம்: நண்பரிடம் கேட்ட உதவி கிடைக்கும். தொழில், வியாபாரத்தில் எதிர்பார்த்த வருமானம் கிடைக்கும். பணியாளர்கள் பணி விடயமாக வெளியூர் செல்வர். பெண்கள் வீட்டு உபயோகப் பொருள் வாங்குவர்.

அஜித்தின் அடுத்த அறிவிப்பு என்ன?

அஜித் தற்போது `சிறுத்தை' சிவா இயக்கத்தில் `விவேகம்' படத்தில் நடித்து வருகிறார். இறுதிக் கட்டத்தை எட்டியுள்ள `விவேகம்' படத்தின் படப் பிடிப்பு பல்கேரியாவில் நடைபெற்று வருகிறது.

சத்யஜோதி பிலிம்ஸ் பிரம்மாண்டமாகத் தயாரித்து வரும் இந்தப் படத்தில் அஜித்துடன் இணைந்து விவேக் ஒபராய், காஜல் அகர்வால், அக்ஷரா ஹாசன் உள்ளிட்ட பலரும் நடிக்கின்றனர். சமீபத்தில் வெளியான `விவேகம்' படத்தின் முன்னோட்டம், ரசிகர்களால் விரும்பிப் பார்க்கப்பட்டு பல் வேறு சாதனைகளைப் படைத்திருக்கிறது. இந்த நிலையில் படம் எதிர்வரும் ஓகஸ்ட் மாதம் வெளியாக இருக்கிறது.

இந்த நிலையில், `விவேகம்' படத்துக்குப் பிறகு அஜித்தின் அடுத்த படம் குறித்த பரபரப்பில் அவரது ரசிகர்கள் தீவிரமாக இருக்கின்றனர். அதன்படி அஜித் அவரது அடுத்த படத்தில் சிறுத்தை சிவாவுடன் நான்காவது முறையாக மீண்டும் இணைய இருப்பதாக ஒரு தகவல் வெளியாகி இருக்கிறது. அந்தப் படத்தையும் சத்யஜோதி பிலிம்ஸ் நிறுவனமே தயாரிக்க இருப்பதாகவும் கூறப்படுகிறது. எனினும் அஜித் தற்போது `விவேகம்' படத்தின் டப்பிங் பணிகளில் தீவிரமாக ஈடுபட இருப்பதாகவும், தனது அடுத்த படம் குறித்து, அவர் இன்னமும் யோசிக்கவில்லை என்றும் அஜித்தின் நெருங்கிய வட்டாரத்தில் இருந்த வரும் தகவல்கள் தெரிவிக்கின்றன.

மேக்கப் போடாத பிகரும்
பஞ்சர் ஆகாத ரயரும்
றோட்டுல போனதா சரித்திரமே இல்லை!

தான் எவ்வளவு விலை உயர்ந்த புடவை உடுத்தினாலும்...

தன் குழந்தையின் வாய் துடைக்க அதைக் கைகுட்டையாய் மாற்றும் தாய் பேரழகு...

புருசன் பொண்டாட்டிய அடிச்சா நீயூஸ் பேப்பர்ல வருது...

பொண்டாட்டி புருசன அடிச்சா ஜோக்ல மட்டும்தான் வருது நல்லாருக்குயா உங்க டீலிங்கு...

பையன்:
நான் சாப்பிடும் போது எல்லாம் உன்னைத்தான் நினைப்பேன் ..

பொண்ணு:
நான் கை கழுவும் போது எல்லாம் உன்னைத்தான் நினைப்பேன்...

WhatsApp

சுடோக்கு
எண் விளையாட்டு

	1		2		9		7	
8								1
		6				9		
5			9		1			4
	6			3			8	
3			8		2			7
		5				6		
7								5
	8		5		3		4	

சுடோக்கு ஒரு எண் விளை யாட்டு. தர்க்க ரீதியான ஒழுங்குபடுத்தல் தான் இதன் அடிப் படை. 1-9 வரையான எண்களை ஒழுங்குபடுத்தி ஒரே கோலத்தை ஏற்படுத்த வேண்டும். இந்தப் பெட்டி 9 நிரல்களையும் 9 நிரைகளையும் கொண்டது. 3X3ஆக உள்ளேயும் 3 நிரல்களையும் 3 நிரைகளையும் கொண்டிருக்கிறது. (உள்ளே இருப்பவற்றை பெட்டிகள், கட்டங்கள், பகுதிகள், உப சதுரங்கள் என்றும் அழைக்கிறார்கள்).

இந்த ஒவ்வொரு நிரையிலும், நிரலிலும் 1-9 வரையான எண் கள், இரண்டு தடவைகள் (மீண்டும் மீண்டும்) வராது நிரப்பப்பட வேண்டும். அவ்வாறு நிரப்பப்படுகையில் உள் பெட்டிகளுக்குள்ளும் அவ்வாறே 1-9 இலக்கங்கள் இரட்டைப் படாமல் வரவேண்டும். சில கட்டங்கள் ஏற்கனவே நிரப்பப்பட்டிருக்கும். தர்க்க ரீதியில் ஏனைய வற்றை நிரப்ப வேண்டியதே வேலை. சுடோக்கு என்பது ஜப்பானியச் சொல். அதன் பொருள் தனி எண் என்பதாகும். 1986இல் ஜப்பானிய நிறு வனமான நிகோலி இதனை அறிமுகப்படுத்தி வெற்றிகரமாகப் பிரபலாக்கியது. 2005இல் இது உலக அளவில் பிரபல்யமானது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நேற்றைய சுடோக்கின் விடை

9	7	5	4	6	3	2	1	8
3	6	1	2	5	8	9	7	4
2	4	8	1	7	9	6	3	5
5	2	6	3	1	4	8	9	7
7	1	3	9	8	5	4	6	2
8	9	4	7	2	6	1	5	3
1	3	9	5	4	2	7	8	6
6	5	2	8	9	7	3	4	1
4	8	7	6	3	1	5	2	9

நினைவிற் கொள்வோம்

- மழை வருவதை முன்னதாக அறியும் பிராணிகள்
  ஈசல், மயில், எறும்பு
- சுனாமி வருவதை முன்னதாக அறியும் பிராணிகள்
  யானை, மான், பாம்பு
- கூர்மையான பார்வைத்திறன் கொண்ட பறவைகள்
  கழுகு, பருந்து
- செவியில் பிடித்துத் தூக்க வேண்டிய பிராணி – **முயல்**
- கழுத்தில் பிடித்து தூக்க வேண்டிய பிராணி
  வாத்து
- நீரில் வாழும் தாவர உண்ணி – **நீர் யானை**
- மண்ணைத் தோண்டி முட்டையிட்டு புதைக்கும் பிராணிகள் – **முதலை, ஆமை, ஓணான்**
- பறக்க முடியாத பூச்சிகள்
  பேன், மூட்டைப்பூச்சி, உண்ணி
- எதிரிகளிடமிருந்து தன்னைக் காத்துக் கொள்ள கறுப்பு திரவத்தைப் பாய்ச்சும் பிராணி
  கணவாய்
- எதிரிகளிடமிருந்து தன்னைப் பாதுகாத்துக் கொள்ள வாலை உடைத்துவிட்டுச் செல்லும் பிராணி
  பல்லி
- முதுகெலும்பு இல்லாத பிராணிகள்
  அட்டை, மண்புழு, இறால்
- தனது இளம் பருவத்தில் மீனை ஒத்தவடிவில் (வார்பேத்தை) காணப்படும் பிராணி
  தவளை
- எலிகளைப் பிடித்து உண்ணும் பறவை
  ஆந்தை
- நத்தைகளை ஓட்டிலிருந்து வெளியே எடுத்து உண்ணும் பறவை – **செண்பகம்**
- ஒளி புகக் கூடிய இரண்டு சோடி இறகுகள் உள்ள பூச்சி
  தும்பி

மேய்ப்பன் இல்லாத மந்தைகள்...

ஒரு காட்டில் ஒரு கூட்டம் மான்கள் தமக்கு, மிக மூத்த தலைமையின் கீழ் சந்தோஷமாக வாழ்ந்து வந்தன. சகல விடயங்களிலும் அந்த மூத்த தலைமையான மானே மான் கூட்டத்துக்கு ஆலோசனையையும் வழிகாட்டலையும் வழங்கி வந்தது.

திடீரென ஒரு நாள் அந்த மூத்த தலைமை மான் நோய் வாய்ப்பட்டுப் போனது. நீண்ட நாள்கள் அது படுக்கையில் இருந்து ஒருநாள் மரித்தும் போனது. நல்ல தலைமையை இழந்த மான்கள் தவித்தன. முதலிருந்த தலைமைக்கு ஈடாக இன்னொரு தலைமையை அவை தங்களுக்குள் உருவாக்கவும் தவறி விட்டன. இந்த நிலையில் அந்தக் காட்டில் வாழ்ந்த சிங்கங்கள், மான்கள் இரை தேடச் சென்ற இடங்களில் எல்லாம் அவற்றை வேட்டையாடத் தொடங்கின. காலம் செல்லச் செல்ல மான்கள் வாழ்ந்து வந்த இடங்களைத் தேடி வந்தும் சிங்கங்கள் வேட்டையாடின.

சிங்கங்களால் இவ்வாறு அப்பாவி மான்கள் வேட்டையாடப்படுவதிலிருந்து அவைகளைப் பாதுகாக்க அந்தக் காட்டில் வாழ்ந்த புலி, ஓநாய், கரடி, சிறுத்தை, நரி ஆகியவை துணிந்தன. மான்களை சிங்கங்கள் வேட்டையாடுவதிலிருந்து பாதுகாத்தன. மான்கள் தாம் எவருக்குப் பின்னால் நின்றால் பாதுகாப்பாக உயிர்வாழலாம் என எண்ணினவோ, அதன்படியே சில மான்கள் புலிகளுக்குப் பின்னாலும், சில ஓநாய்களுக்குப் பின்னாலும் சில கரடிகள் சிறுத்தைகளுக்குப் பின்னாலும் சில நரிகளுக்குப் பின்னாலும் அடைக்கலமாயின.

நாளடைவில் தங்களில் யார் பெரியவர் யாரால் மான்களைச் சரியான முறையில் பாதுகாக்க முடியும் என்ற போட்டி மான்களைப் பாதுகாக்க வந்த மிருகங்களுக்கிடையே எழுந்தது அது பின்னர் ஒரு கட்டத்தில் சண்டையாக உருவெடுத்தது. அவைகள் ஒன்டோடொன்று மோதிக் கொண்டும், ஒன்றை ஒன்று கொன்றொழித்துக் கொண்டும் இருந்தன. இவற்றின் வெறியாட்டத்தில் அப்பாவி மான்கள் பலவும் உயிர்ப் பலியாகின. இவ்வாறு திக்குத்திசை தெரியாது, யாரை நம்புவது? யாரிடம் போவதெனத் தெரியாது காட்டில் அலைந்து திரிந்த மான்களுக்கு சற்று ஆறுதலளிக்கும் வகையில் பக்கத்துக் காட்டிலிருந்து வந்த காட்டெருமைக் கூட்டம் ஒன்று அபயமளித்தது. அந்தக் காட்டெருமைகள் மான்களுக்காக மற்றைய மிருகங்களுடன் சண்டையிட்டன. ஒரு கட்டத்தில் மற்ற மிருகங்களுடன் மான்களையும் சேர்ந்து வேட்டையாடத் தொடங்கின. காட்டெருமைகள் அந்தக் காட்டுக்கு வந்த நோக்கம் ஒன்றாகவும் அவற்றின் செயற்பாடுகள் வேறாகவும் அமைந்தன. ஒரு கட்டத்தில் அவை தமது சொந்தக் காட்டுக்கே திரும்ப வேண்டிய நிலை ஏற்பட்டது. இந்த நிலையில் புலிகள் எல்லா மிருகங்களையும் அடித்துக்கொன்று தனி இராச்சியம் அமைத்து எஞ்சிய மான்களுக்கு பாதுகாப்பாக இருந்தன.

இப்படி சிலகாலம் ஓடி மறைந்தது. பலகாலம் தமக்கு உணவு கிடைக்காமல் பசியோடிருந்த சிங்கங்கள், வேறு பெருங்காடுகளில் உள்ள பல பெரிய மிருகங்களைத் தமக்கு பக்க பலமாக்கிக் கொண்டு புலிகளோடு பெரும் சண்டை போட்டன. இந்த நிலையில் பலவகையான உட்பூசல்கள் காரணமாக புலி களுக்குள் கருத்து முரண்பாடுகளும், பிரிவினைகளும் ஏற்படத் தொடங்கின. இந்த பலவீனங்களைத் தமக்குப் பலமாக்கிய சிங்கங்கள் புலிகளை மட்டுமல்ல அப்பாவி மான்களைக் கூட கொன்று பசியாறின. காடு முழுவதும் இரத்த ஆறு ஓடியது. சிங்கங்களால் மான்கள் கொடூரமாக கொன்று குதறப்படுகையில் மான்களின் கத்தல் கதறல்கள் அந்தக் காட்டையே அதிர வைத்தன. ஆனால் அந்த அப்பாவி மான்களின் அவலக்குரல் அக்கம் பக்கக் காடுகளில் இருந்த எந்த மிருகங்களின் காதுகளிலும் விழவேயில்லை. சில மிருகங்களின் காதுகளில் அந்த அவலக் குரல்கள் விழுந்த போதிலும் மான்களுக்கு அபயமளிக்க எந்தக் காட்டிலிருந்தும் எந்த மிருகமும் வரவுமில்லை.

ஒற்றுமையாய் வாழ்வதால் உண்டு நன்மை
வேற்றுமையை வளர்த்தால் விளையும் தீமை.

நான் ஒரு மருத்துவரானால்...

- நான் மருத்துவரானால் ஏழை நோயாளருக்கு இலவச சிகிச்சை அளிப்பேன்.
- நோயாளருடன் அன்பாகப் பேசி அவர்களது துன்பம் துடைப்பேன்.
- எல்லா நோயாளரையும் சமமாக மதித்து அவர்களது பிணி நீக்குவேன்.
- சில முக்கிய நோய்களை வருமுன் காப்பதற்கான ஆலோசனைகளை வழங்குவேன்.
- வைத்திய மருத்துவ வசதிகள் குறைந்த பிரதேசங்களுக்குச் சென்று சேவை செய்வேன்.
- எனது கடமையை நேர்மையாகவும் பொறுப்புணர்வுடனும் செய்வேன்.
- மருத்துவத்துறையில் மேன் மேலும் முன்னேற முயற்சிப்பேன்.
- புதிய ஆய்வுகளை மேற்கொண்டு சில மாற்ற முடியாத நோய்களுக்கு மருந்து கண்டு பிடிக்க முயற்சி எடுப்பேன்.
- மருந்து கால் மதி முக்கால் என்ற பழமொழிக்கு அமைவாக மருந்துகள் பாவனை பற்றியும், நல்ல உணவுப் பழக்க வழக்கங்கள் பற்றியும் நோயற்ற வாழ்வு வாழும் முறைகள் பற்றியும் மக்களுக்கு எடுத்துரைப்பேன்.
- தொற்று நோய்கள் ஏற்படும் காலங்களில் அந்த நோய்கள் பற்றிய விழிப்புணர்வுகளை மக்களிடையே ஏற்படுத்தும் சேவை செய்வேன்.
- ஒரு நாளில் எந்த வேளையிலும் அவசர நோயாளருக்கு சேவை செய்ய முன்நிற்பேன்.
- மக்களுக்குச் செய்யும் சேவை மகேசனுக்கு (இறைவனுக்கு) செய்யும் சேவையாகக் கருதி செயற்படுவேன்.

இலங்கையின் தேசிய குறியீடுகள்

தேசிய இலட்சினை

தேசியக் கொடி

தேசிய மரம்

நாகமரம்

தேசிய மலர்

நீலோற்பலம்

தேசிய பறவை



காட்டுச் சேவல்

தேசிய மாணிக்கம்

நீலமாணிக்கம்

தேசிய விலங்கு

மர அணில்

தேசிய விளையாட்டு

கரப்பந்து

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சபையில் தனித்துச் செயற்பட சு.க. உறுப்பினரால் முடியாதாம்

யாழ்ப்பாணம், மே 22

சிறிலங்கா சுதந்திரக் கட்சியில் அங்கத்துவம் வகிக்கும் எந்தவொரு உறுப்பினரும் மாகாண சபைக்குள் சுயாதீனமாக செயற்பட முடியாது என்று அந்தக் கட்சியின் பொதுச் செயலாளர் துமிந்த திஸாநாயக்க தெரிவித்தார்.

"கட்சியிலுள்ள மாகாண சபை உறுப்பினர், எவராவது கட்சியின் கொள்கையை மீறும் வகையில் சுயாதீனமாக செயற்பட தீர்மானம் எடுப்பாராயின், அவர் உடனடியாக கட்சியிலிருந்து வெளியேற வேண்டும்.

ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி யிலிருந்து மாகாண சபைத் தேர்தலில் போட்டியிட்டு வெற்றிபெற்றவர்கள் அந்தக் கட்சியின் கொள்கைக்கு ஏற்ப செயற்பட வேண்டும். அவ்வாறில்லாமல் தமது தனிப்பட்ட தீர்மானங்களின் படி செயற்பட முடியாது" என்று துமிந்த திஸாநாயக்க மேலும் கூறினார். (வ-5)

மரண அறிவித்தல்

செல்வி பொன்னுத்துரை தர்மபூபதி

(ஓய்வு பெற்ற மருத்துவ மாது, கோப்பாய் அரசினர் வைத்தியசாலை)

தாவடி வடக்கை பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட செல்வி பொன்னுத்துரை தர்மபூபதி (ஓய்வு பெற்ற மருத்துவ மாது, கோப்பாய் அரசினர் வைத்தியசாலை) நேற்று (21.05.2017) ஞாயிற்றுக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான பொன்னுத்துரை சின்னப்பிள்ளை தம்பதியரியின் அன்பு மகளும் காலஞ்சென்ற புகனேஸ்வரியின் அன்புத் தங்கையும் காலஞ்சென்ற இராமுப்பிள்ளையின் அன்பு மைத்துனியும் காலஞ்சென்ற பாலசுப்பிரமணியத்தின் சிறியதாயும் யோகேஸ்வரி யின் மாமியாரும் தயாபரன், சாலினி, துஸாந்தினி, யாழினி ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் ஆவார்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
தயாபரன் (பேரன்)
0771725450

மரண அறிவித்தல்

பென்ஜமின் சுந்தரராஜன் குணரட்ணம்

(முன்னாள் ஆசிரியர், காலி றிச்மண்ட் கல்லூரி, கொழும்பு றோயல் கல்லூரி).
(World Vision, L.E.A.D.S.)



148/7, புகையிரத நிலைய வீதி, யாழ்ப்பாணத்தை சேர்ந்த பென்ஜமின் சுந்தரராஜன் குணரட்ணம் நேற்று (21.05.2017) ஞாயிற்றுக்கிழமை கர்த்தருக்குள் நித்திரையடைந்தார்.

அன்னார் வசந்தி சத்தியதேவியின் அன்புக் கணவரும் டினேஷ்பிரியரங்கன் (பிரதேச செயலகம் வேலணை), சோபனா, மேனகா ஆகியோரின் அன்புத் தந்தையும் Dr.பிரித்திவராஜ் திசநாயகம் Dr.லக்ஷன் சோமநாதர், திருமதி ஷாமிலா (அஞ்சற் பயிற்சி கல்லூரி, யாழ்ப்பாணம்) ஆகியோரின் அன்பு மாமனும் ஜொனத்தன், ஜோயன்னா, ஆத்மிகா ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார்.

அன்னாரின் நல்லடக்க ஆராதனை நாளை (23.05.2017) செவ்வாய்க்கிழமை காலை 9.30 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று மெதடிஸ்த சேமக்காலை, பருத்தித்துறையில் நல்லடக்கம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

148/7, புகையிரத நிலைய வீதி,
யாழ்ப்பாணம். 0212227923

தகவல்:
குடும்பத்தினர்

மரண அறிவித்தல்

சின்னத்தம்பி குமாரசாமி

(பிரபல வர்த்தகர் - 6 ஆம் வட்டாரம், பருத்தித்துறை வீதி, மயிலிட்டி சிவசுப்பிரமணியம் பேக் கவுஸ் உரிமையாளர்)



பிறப்பு 19.09.1920 இறப்பு 21.05.2017

6ஆம் வட்டாரம் மயிலிட்டி பெரியநாட்டுத்தேவன்துறையைப் பிறப்பிடமாகவும், யாழ்ப்பாணம் மானிப்பாய் சங்கரப்பிள்ளை வீதி, மனோன் இல்லம் என்னும் முகவரியை வசிப்பிடமாகவும் கொண்ட சின்னத்தம்பி குமாரசாமி (21.05.2017) ஞாயிற்றுக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சின்னத்தம்பி - அன்னப்பிள்ளை தம்பதியரின் அன்புமகனும் காலஞ்சென்ற சிரோன் மணிஅம்மாவின் அன்புக்கணவரும் காலஞ்சென்றவர்களான கணபதிப்பிள்ளை - சின்னாச்சன் தம்பதியரின் அன்புமருமகனும் காலஞ்சென்ற தங்கச்சிஅம்மா, சோதிலிங்கம் ஆகியோரின் அன்புச் சகோதரரும் காலஞ்சென்றவர்களான ஞானரட்ணம், ஞானேஸ்வரி அம்மா ஆகியோரின் அன்புமைத்துனரும் குணரட்ணம் (மானிப்பாய்) காலஞ்சென்ற அரசரட்ணம் மற்றும் ராஜரட்ணம் (கொழும்பு), காந்தரட்ணம் (ஜெயகுமரன் பேக்கவுஸ் மானிப்பாய்), புதுமைராணி (நோர்வே), புஸ்பராணி (பிரான்ஸ்), செல்வரட்ணம் (நோர்வே), புனிதராணி (ஸ்ரீ ஜங்கரன் பேக்கரி இணுவில்) ஆகியோரின் பாசமிகு தந்தையும் சிவசுப்பிரமணியத்தின் சகலனும் மனோன்மணி காலஞ்சென்ற ஜமுனாராணி மற்றும் கீதாராணி, ஜெயராணி (வசந்தி), சுகந்தி, சிவபாதலிங்கம், தேவராசா, மகேந்திரன் ஆகியோரின் அன்புமாமனாரும் பிரபாகரன் (லண்டன்), சுதாகரன் (லண்டன்), கிருபாகரன் (Accountant கொழும்பு), சிவகரன் (லண்டன்), சிவதர்சனா, சுதர்சன் (கனடா), கஸ்தூரி (யாழ். பல்கலைக்கழகம்), அனுசா (மட்டக்களப்பு பல்கலைக்கழகம்), சந்திரிக்கா, மாதுரிக்கா, மயூரிக்கா, ராஜநாப (குமரன்- கொழும்பு), ரஜீத்காந் (ரஜீத் - Travels), சிவலக்சனா (பிரான்ஸ்), சுபலக்சனா கம்சானந், தினேஸ் (நோர்வே), சந்துரு (லண்டன்), நிலக்சன், நிருஷன் (நோர்வே), பதூஷன் (பிரான்ஸ்), அபிராமி, சங்கீதன் ஆகியோரின் அன்புப்பேரனும் அதிசன், திபுஷன், தனுஸ்கா, ஜானுஜா, கிசானா, கவிஸ்னா, அகிஷா, கிதுசன், பிரம்மிக்கா, சபீனா, நிற்றாஷா, மதுவர்சா, மதுசிகா, சர்ணா, அபிசா, அகேஸ் ஆகியோரின் பூட்டனாரும் சிங்கலக்ஷ்மி காலஞ்சென்ற சிங்கரட்ணம் மற்றும் ஜீவரட்ணம், சுபாசினி ஆகியோரின் பெரியதந்தையும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல் : கு. குணரட்ணம் (மகன் - 021 225 5881)
கு. கிருபாகரன் (077 302 8411)
கோ. மணிவண்ணன் (077 364 4048)
மு. மகேந்திரன் (077 302 7824)
கா. றஜித்காந் (077 354 5197)

மனோன் இல்லம்,
சங்கரப்பிள்ளை வீதி, மானிப்பாய்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கோடீபதி
சீட்டிழுப்பு வாரம்: 139
வர்ணம் : பச்சை
சீட்டிழுப்பு திகதி: 21.05.2017
அடுத்த செவ்வாய்க்கிழமைக்கான jackpot
ரூ. 87,311,956/-
ஆங்கில எழுத்து மற்றும் இலக்கங்கள்
C 28 32 33 65
தொ.பே: 011 4062002 / 0114062062 Web: www.dlb.lk
SMS: DLB<space>LOT<space>JY என டைப் செய்து 1919 இற்கு அனுப்பவும்.
அல்லது தரித் அழைப்பு 1919
இணையம், தே டிவிடெண்ட் 2017.05.23 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை நீல நிற டிக்கட்டுக்களாகும்.
வெற்றி பெற்ற சீட்டுக்கள் 6 மாதங்களுக்கு செல்லுபடியாகும்.

Galaxy Star
வெற்றி வாரம் 161
திகதி 21.05.2017
நட்சத்திர மற்றும் வெற்றி இலக்கங்கள்
01 21 25 32 34
அடுத்த புதன்கிழமை
சுப்பர் பரிசுப் பொதி
ரூ. 33,51,816/-
தொ.பே: 011 4062002 / 0114062062 Web: www.dlb.lk
SMS: DLB<space>LOT<space>GS என டைப் செய்து 1919 இற்கு அனுப்பவும். அல்லது தரித் அழைப்பு 1919
24.05.2017 ஆம் திகதி புதன்கிழமை நீல நிற டிக்கட்டுக்களாகும்.
வெற்றிபெற்ற சீட்டுக்கள் 6 மாதங்களுக்கு செல்லுபடியாகும்.

லக்கின
இம்முறை தனயோகம் உங்களுடையதா?
திகதி 21.05.2017
வெற்றிவாரம் 2135
வர்ணம் ஊதா
மீனம்
01 11 24 41
செவ்வாய்க்கிழமை வெற்றிப்பொதி
ரூ 5, 387, 676/=
2017.05.23 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை நீல நிற டிக்கட்டுக்களாகும்.
வெற்றி பெற்ற சீட்டுக்கள் 6 மாதங்களுக்கு செல்லுபடியாகும்.
தொ.பே: 011 4062002 / 0114062062 Web: www.dlb.lk
SMS: DLB<space>LOT<space>LW என டைப் செய்து 1919 இற்கு அனுப்பவும்.

சிறிபாதக் கல்வியியல் கல்லூரியின் மாணவர் தேர்வில் குளறுபடியில்லை

கல்லூரியின் பீடாதிபதி தெரிவிப்பு

நுவரெலியா, மே 22

சிறிபாதக் கல்வியியல் கல்லூரியின் மாணவர்கள் தேர்வில் எந்த விதமான குளறு படிகளும் நடைபெறவில்லை. அனைத்தும் வர்த்தமானி அறிவித்தலின் படியே நடைபெற்றுள்ளது. இந்தத் தேர்வுகள் தொடர்பாக எந்த நேரத்திலும் யாரும் பார்வையிட முடியும். இவ்வாறு சிறிபாத கல்வியியல் கல்லூரியின் பீடாதிபதி தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது,

"எங்களால் நடத்தப்பட்ட நேர்முகத் தேர்வுகளைத் தற்பொழுது கல்வி அமைச்சு மீள் பரீசீலனை செய்து கொண்டிருக்கின்றது. நாங்களும் அதனை முழுமையாக மீள் பரீசீலனை செய்திருக்கின்றோம். அதன் அடிப்படையில் இரண்டாம் கட்ட நேர்முகத் தேர்வு நடைபெற்றுள்ளது. அதில் 200 பேர் வரை உள்வாங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. நேர்முகத் தேர்விலும் முதலாவதாகப் பெருந்தோட்ட மாணவர்களுக்கு முக்கியத்துவம் கொடுக்கப்படுகின்றது. அதற்கு அடுத்தபடியாகவே பெருந்தோட்டங்கள் அல்லாத மாணவர்களுக்கும், இந்திய வம்சாவளித் தமிழர்களுக்கும் சந்தர்ப்பம் வழங்கப்படுகின்றது. சில பயிற்சி நெறிகளுக்கு மாணவர்கள் குறைவாகவே இருக்கின்றார்கள். ஆனால் அந்தப் பயிற்சி நெறிக்குத் தகுதியானவர்கள் அதாவது இந்திய வம்சாவளித் தமிழர்கள் இருக்கின்றார்கள். அவர்கள் காத்திருப்புப் பட்டியலில் வைக்கப்பட்டுள்ளார்கள். நேர்முகத் தேர்வுகளில் முகம் கொடுக்கின்ற பெருந்தோட்ட மாணவர்களின் பெறுபேறுகள் மிகவும் குறைவாக இருக்கின்றன. இந்தக் காரணத்தால் அவர்களை உள்வாங்க முடியாத ஒரு நிலை இருக்கின்றது" - என்றார்.

இது தொடர்பில் கல்வி இராஜாங்க அமைச்சர் வேலுசாமி இராதாகிருஸ்ணன் தெரிவித்ததாவது,

"காத்திருப்புப் பட்டியலில் இருப்பவர்கள் தொடர்பாக நான் எங்களுடைய அமைச்சின் அதிகாரிகளுடன் கலந்துரையாடி அவர்களை உள்வாங்குவதற்கு நடவடிக்கை எடுக்க இருக்கின்றேன். தகுதியானவர்கள் மட்டுமே உள்வாங்கப்படுவார்கள்.

தற்போது மலையக பாடசாலைகளில் கணித விஞ்ஞான ஆசிரியர்களுக்கு பெரும் தட்டுப்பாடு நிலவுகின்றது. அதற்கான ஓர் தீர்வை மிக விரைவில் பெற்றுக் கொடுக்க நடவடிக்கை எடுக்கப்படும் - என்றார். (ஐ-10)

முதலாம் பக்கத் தொடர்ச்சிகள்....

கண்ணீர் அஞ்சலி

யாழ்ப்பாண பல்கலைக்கழக விவசாயபீட விலங்கு விஞ்ஞானதுறை தலைவர் கலாநிதி **சி.ஜெயலிங்கவதனி** அவர்களின் அன்புத் தாயார்

திருமதி பொன்னு சின்னையா

அவர்கள் நேற்று (21.05.2017) ஞாயிற்றுக்கிழமை காலமானதையிட்டு அவர்தம் குடும்பத்திற்கு எமது அனுதாபத்தை தெரிவிப்பதுடன் அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனை பிரார்த்திக்கின்றோம்.

விவசாய பீட நலன்புரி சங்கம், யாழ்.பல்கலைக்கழகம்
அறிவியல்நகர், கிளிநொச்சி.

மரண அறிவித்தல்கள்

திருமதி இராசகிளி கந்தையா

சூசையப்பர் கோயிலடி, கோப்பாய் மத்தியைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி இராசகிளி கந்தையா 20.05.2017 சனிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற கந்தையா (சோமு) இன் அன்பு மனைவியும் காலஞ்சென்ற வேலன் செல்லம்மா தம்பதியரின் மூத்த மகளும் காலஞ்சென்ற விசுவர் வள்ளி தம்பதியரின் அன்பு மருமகளும் இராசரத்தினம் (ஜேர்மனி), வனா (ஜேர்மனி), விக்கிரமசிங்கம் (ஜேர்மனி), காலஞ்சென்ற சோதி, தேவகி மற்றும் நந்தகுமார் (சுவிஸ்), ஜெயா சிவகுமார் ஆகியோரின் அன்புத் தாயும் சரஸ்வதி (ஜேர்மனி), கந்தசாமி (ஜேர்மனி), சுதாசினி (ஜேர்மனி), இலங்கேஸ்வரன் (ஜேர்மனி), வசந்தினி (சுவிஸ்), மகேந்திரராசா, ஜெயசித்திரா ஆகியோரின் மாமியும் காலஞ்சென்ற தங்கராசா மற்றும் நிர்மலா (சிங்கம் கனடா), தெய்வேந்திரம் (ராசா ஜேர்மனி) ஆகியோரின் அன்புச் சகோதரியும் பத்திமாராணி (கனடா), அருமைத்துரை (கனடா), சிவந்தி (சிட்டுஜேர்மனி) ஆகியோரின் அன்புமைத்துனியும் பிரேமிலா, சர்மிலா, அனுகரன், அனுசியா, கிளவுடின், பேனோவின், கினர்ச்கா, துசியந்தன், விதுசன், றிசிதன் (ஜேர்மனி), சினேகா, கரன், கஜன் (சுவிஸ்), சியான், தேனுகா, சச்வன் ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் செல்லர், நல்லான் ஆகியோரின் அன்பு மைத்துனியும் குயின்ரி, ரோசா, லதன் (கனடா) ஆகியோரின் பெரியதாயும் லுச்சி, ரமேஸ் தாசன், பாப்பா (கனடா), தேனுகா (ஜேர்மனி) ஆகியோரின் அன்பு அத்தையும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (22.05.2017) திங்கட்கிழமை மு.ப.11 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று தகனக்கிரியைக்காக நண்பகல் 12.30 மணிக்கு கோப்பாய் இளங்காடு இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

கோப்பாய் மத்தி. **தகவல்: குடும்பத்தினர்.**

திருமதி தனபாக்கியம் சின்னத்துரை

அராலி தெற்கைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாவும் கொண்ட திருமதி தனபாக்கியம் சின்னத்துரை நேற்று (21.05.2017) ஞாயிற்றுக்கிழமை சிவபதமடைந்துவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற சின்னத்தம்பி சின்னத்துரையின் அன்பு மனைவியும் காலஞ்சென்ற திரு.திருமதி செல்லத்துரை ஆகியோரின் மகளும் காலஞ்சென்ற திரு.திருமதி சின்னத்தம்பி ஆகியோரின் மருமகளும் தனலட்சுமி சிவபாக்கியம் சுப்பிரமணியம் தையல்நாயகி ஆகியோரின் அன்புச் சகோதரியும் சிவராஜசிங்கம் (ஓய்வூதியர்), ஏரம்பமூர்த்தி (ஆசிரியர்), அரிச்சந்திரன் (வலிகாமம்மேற்குபிரதேசசபை), அருந்ததி ஆகியோரின் அன்புத் தாயாரும் லலிதகுமாரி, சிறிஜெயா ஆகியோரின் அன்புமாமியும் சகீலகன் (வலி.மேற்குபிரதேசசபை), தனலக்ஷன் ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (22.05.2017) திங்கட்கிழமை காலை 9.30 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக பூனாவோடை இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

அராலி **தகவல்: குடும்பத்தினர்**

மரண அறிவித்தல்

சோதிட கலாநிதி ஐயாத்துரை சுந்தரலிங்கம்

(நயினாதீவு) (ஓய்வு நிலை தபால் ஊழியர்)



நயினாதீவு 5 ஆம் வட்டாரத்தைப் பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட தற்போது இல 427, கோயில் வீதி, நல்லூரில் வசித்த வருமான ஐயாத்துரை சுந்தரலிங்கம் நேற்று (21.05.2017) ஞாயிற்றுக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சுந்தரர் ஐயாத்துரை - கமலாம்பாள் தம்பதியரின் கனிஷ்ட புத்திரரும் காலஞ்சென்றவர்களான நெடுந்தீவு கிழக்கு குருநாதர் சின்னக்குட்டி தம்பதியரின் மருமகனும் காலஞ்சென்ற நாகமுத்து (ஓய்வு நிலை பரிசாரகர் நயினாதீவு அரசினர் வைத்தியசாலை) அவர்களின் அன்புக் கணவரும் கலைவாணி (ஓய்வு நிலை நூலகர், வேலணை பிரதேசசபை), சத்தியபாமா, கமலாகரன் (நோர்வே), நாகபூஷணி (முன்னாள் சமுர்த்தி முகாமையாளர், வவுனியா - பிரான்ஸ்), தயாநிதி (முன்னாள் ஆசிரியை யா/நயினாதீவு கணேச கனிஷ்ட வித்தியாலயம் - லண்டன்), உமாதேவி (சுவிஸ்), கிருபா ஐயாத்துரை (நோர்வே) ஆகியோரின் பாசமிகு தந்தையும் இ.சண்முகலிங்கம் (ஓய்வூதியர் பிரதேசசபை நயினாதீவு), வி. தனிநாயகம் (ஓய்வு பெற்ற ஆரம்பக்கல்வி உதவிக்கல்விப்பணிப்பாளர் தீவகவலயம்) க.யோகமலர் (நோர்வே) ச.குகநேசன் (பிரான்ஸ்), யோ. அகிலன் (லண்டன்) காலஞ்சென்ற இ. சர்வேஸ்வரன் (சுவிஸ்), நந்தினி (நோர்வே) ஆகியோரின் அன்புமாமனும் காலஞ்சென்றவர்களான இ.நல்லம்மா, ஐ.அம்பிகாபதி, ஐ.கதிர்காமலிங்கம் (ஆசிரியர்), ஐ. சரவணபவன் (அதிபர்) ஆகியோரின் அன்புத்தம்பியாரும் அம்பிகைரூபன் அம்பிகை - கேதீஸ்வரன், சிவமங்கை - அஜித், ராம்காந்த், நிவேதிதா - கமலவேந்தன், துஜிகாந்த், அபிராமி, தனுசா, அனுசா, ஆர்த்தி, ஜனனி, ரதீபன், ரதீசன், சரண்யா, சங்கவி, பிரதீப், காவியா, கிருஷன் ஆகியோரின் அன்புப்பேரனும் அட்சரா, திவ்யன், குமரன் ஆகியோரின் அன்புப்பூட்டனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (23.05.2017) செவ்வாய்க்கிழமை காலை 6.30 மணியளவில் நல்லூரில் உள்ள அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக மு.ப. 9 மணியளவில் இங்கிருந்து நயினாதீவுக்கு எடுத்துச்செல்லப்பட்டு மு.ப. 11 மணியளவில் சல்லிபரவை இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

இல. 427, கோயில் வீதி, நல்லூர். **தகவல்: குடும்பத்தினர்.**

உணவு...

சில பிக்குகளும் போராட்டத்தில் ஈடுபட்டுள்ளனர். பிடியாணையின்றித் தன்னைப் பொலிஸார் கைது செய்ய முயற்சிப்பதாகக் குற்றஞ்சாட்டியே அவர் போராட்டத்தில் ஈடுபட்டுள்ளார் என்று பொதுபல சேனாவின் ஊடகப் பிரிவு அறிவித்தது. ஆனால், பொலிஸார் கைது செய்வதிலிருந்து தப்பிக்கும் நோக்கிலேயே அவர் அவ்வாறு போராட்டத்தை முன்னெடுத்துள்ளார் என இனவாதத்துக்கு எதிராகக் குரல் கொடுக்கும் சிவில் அமைப்புகள் தெரிவித்துள்ளன. (த-4)

மைத்திரி...

யளவில் ஐக்கிய தேசியக் கட்சி நாடாளுமன்ற உறுப்பினர்களை அலரி மாளிகைக்கு அழைத்த ரணில் பேச்சு நடத்தினார் என்று தெரிவிக்கப்பட்டது. அமைச்சரவையில் மாற்றம் ஏற்படுத்தப்பட்டு இன்று புதிய அமைச்சரவைக் கூட்டம் இடம்பெறும் என்று அறிவிப்பு வெளியாகவுள்ள நிலையில் இந்தச் சந்திப்புக்கள் இடம்பெற்றன. (வ-4)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தமிழ்...

இனவாத அமைப்புகளால் கிழக்கிலும் தென்னிலங்கையிலும் முஸ்லிம் மக்களுக்கு எதிராக முன்னெடுக்கப்படும் செயற்பாடுகளையடுத்தே அமைச்சர் ரவூப் ஹக்கீம் இந்தக் கருத்தைத் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பும், சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸும், கிழக்கு ஆட்சியின் பங்குதாரர்கள் என்ற நிலை நிரந்தரமாக இருக்க வேண்டும் என்று விரும்புபவர்கள் நாங்கள். அதன் மூலமே நாம் பல விடயங்களைச் சாதிக்க முடியும்.

வடக்கு - கிழக்கில் வாழும் தமிழ் மற்றும் முஸ்லிம் சமூகங்கள், தமிழ் பேசும் சமூகங்கள் என்ற அடிப்படையில் அரசியல் ரீதியாக ஒன்றித்துப் பயணிக்க வேண்டிய அவசியம் மிகத் தெளிவாக உணரப்பட்ட காலத்தில் நாங்கள் வாழ்கின்றோம்.

கடந்த கால இனவாதப் பூதங்கள் மீளக் கிளம்புகின்றன. இத்தகைய தீவிர சக்திகளுக்கு, ஆட்சியாளர்கள் அச்சம் கொள்கின்றார்களா? என்று கேட்கத் தோன்றும் அளவுக்கு சில சம்பவங்கள் அண்மையில் நடைபெற்றுள்ளன. இந்தக் காலத்தில் நாம் மிகவும் இறுக்கமாக ஒன்றுபட வேண்டிய நிலையில் உள்ளோம் - என்றார். (வ-5)

தாக்குதலுக்கு...

ரிக்கா கண்டித்துள்ளது. மேலும், எல்பிட்டியவில் முஸ்லிம் வர்த்தகரது வர்த்தக நிலையமுமே நேற்று அதிகாலை 2.30 மணியளவில் இனந்தெரியாத நபர்களால் தீக்கிரையாக்கப்பட்டுள்ளது. கடந்த சில நாள்களாக சிங்கள பௌத்த அடிப்படைவாத பொது பலசேனா அமைப்பு, முஸ்லிம்களுக்கு எதிரான இனவாதக் கருத்துக்களை வெளியிட்டு வந்ததால், முரண்பாடுகள் தலைதூக்கியிருந்தன.

இதற்கிடையே, மல்லவப்பிட்டியவில் பள்ளிவாசல் மீது நடத்தப்பட்ட தாக்குதலை அமெரிக்கா கண்டித்துள்ளது.

அமெரிக்கத் தூதுவர் அதுல் கெசாப், தனது கீச்சகப் பக்கத்தில் வெளியிட்டுள்ள செய்தியில், "மத வழிபாட்டு இடங்கள் மீதான தாக்குதல்கள் கண்டிக்கத்தக்கது. கடந்த ஒரு வார காலப் பகுதியில் 3 வழிபாட்டு இடங்கள் தாக்கப்பட்டுள்ளன. இந்தச் சம்பவங்களுடன் தொடர்புடையவர்கள் உடனடியாக கைது செய்யப்படுவார்கள் என்று நம்புகிறேன்" - என்று குறிப்பிட்டுள்ளார். (வ-5)

ஞானசாரர்...

தெரிவித்தார். இதேவேளை, சமூகவலைத் தளங்கள் ஊடாக பொதுபலசேனா அமைப்பினர் சிங்கள மக்களை ஒன்றுதிரண்டு ஒற்றுமையை வெளிப்படுத்துமாறு அறைகூவல் விடுத்து வருகின்றனர்.

"ஞானசார தேரரைக் கைது செய்ய பொலிஸார் வந்ததோடு, குருநாகல் பகுதியில் பதற்றத்தையும் ஏற்படுத்தினர். எனினும் பிக்குகளும், சிங்கள இளைஞர்களும் ஒன்றுதிரண்டு ஞானசார தேரரைக் காப்பாற்றினோம். ஞானசார தேரரின் உயிருக்கே ஆபத்து ஏற்பட்டுள்ளது. சிங்களவர்கள் அனைவரும் ஒன்று திரள வேண்டும் என்று கோரிக்கை விடுத்துள்ளோம்.

கண்டி தலதா மாளிகைக்கு முன்னால் அனைத்து பாகங்களில் உள்ளவர்களையும் உடனடியாக ஒன்று கூடுமாறு அழைக்கின்றோம். ஞானசார தேரர் மட்டுமே எமக்காக இருக்கின்றார். அவரைக் கொலை செய்ய திட்டம் தீட்டப்பட்டுவிட்டது. அவரைக் காப்பாற்ற வேண்டும். அத்தோடு இது சிங்கள நாடு அதனைப் புரியவைக்க வேண்டும்' என்று சமூக வலைத் தளத்தில் அறைகூவல் விடுக்கப்பட்டுள்ளது. (வ-5,10)

முக்கியமான...

"கடந்த வெள்ளிக்கிழமை அதிகாலை நடத்தப்பட்ட துப்பாக்கிச் சூடு தொடர்பாக நேற்றும் அந்தப் பகுதியில் தேடுதல்கள் நடத்தப்பட்டன. தாக்குதல் நடத்தியவர்களால் பயன்படுத்தப்பட்டதாகச் சந்தேகிக்கப்படும் ஒரு சோடி கையுறைகள் உள்ளிட்ட பல தடயப் பொருள்கள் இந்த தேடுதலின்போது கிடைத்துள்ளன.

தாக்குதல் நடப்பதற்கு முன்னதாக அந்தப் பகுதியில் சந்தேகத்துக்கு இடமான வகையில் காணப்பட்ட வாகனம் ஒன்றின் இலக்கமும் அதிகாரிகளுக்குக் கிடைத்துள்ளது. இந்தச் சம்பவம் தொடர்பான முக்கியமான பல துப்புக்கள் கிடைத்துள்ளதால், சம்பந்தப்பட்டவர்களை விரைவில் கைதுசெய்ய முடியும்" என்று மூத்த பிரதிப் பொலிஸ்மா அதிபர் சுமித் எதிரிசிங்க மேலும் தெரிவித்தார். (வ-5)

புதிய...

மறைமுகமாக நடவடிக்கைகளை எடுத்து வருகின்றது. அரசமைப்பு மாற்றத்துக்கு ஆதரவைப் பெற்றுக்கொள்வதற்காக ஐக்கிய தேசியக் கட்சியின் மூத்த அமைச்சர்கள் மூவர், ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பினதும், மகிந்த அணியினதும் நாடாளுமன்ற உறுப்பினர்களின் இல்லங்களுக்குச் சென்று இரகசிய பேச்சுகளில் ஈடுபட்டு வருகின்றனர். இந்த விடயத்தில் விமல் வீரவன்ஸவின் ஆதரவைப் பெற்றுக்கொள்ளவும் முயற்சி எடுக்கப்படுகின்றது" என்று அந்த வட்டாரங்கள் தெரிவித்தன. தற்போதைய கூட்டு அரசு நாளுக்கு நாள் மக்களின் செல்வாக்கை இழந்து வருவதால் நிலமை மேலும் விபரீதமாவதற்கு முன்பு புதிய கூட்டு அரசொன்றை நிறுவிக் கொள்வதற்காகவே ஐக்கிய தேசியக் கட்சி பிரயத்தனம் செய்து வருவதாகவும் அந்த வட்டாரங்கள் குறிப்பிட்டன. (வ-5)

பயங்கரவாதத்...

சுமார் ஒன்றரை மணி நேரம் இந் தக் கலந்துரையாடல் இடம்பெற்றது. கலந்துரையாடலில் கலந்து கொண்டிருந்த, நாடாளுமன்ற உறுப்பினர்களான மாவை.சேனாதிராசா, த.சித்தார்த்தன், முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர்களான சிறிகாந்தா, சிவாஜிலிங்கம், சுரேஸ் பிரேமச் சந்திரன் ஆகியோர், தற்போதுள்ள பயங்கரவாத தடைச் சட்டம் நீக்கப்படவேண்டும் என்பதை வலியுறுத்தினர்.

அத்துடன் இதற்கு மாற்றீடாக சட்டம் கொண்டு வரப்படுவதைப் பற்றி நாமே (சிறுபான்மைக் கட்சிகள்) கேட்பது பொருத்தமானது இல்லை என்று அவர்கள் குறிப்பிட்டனர். எப்போதுமே சிறுபான்மையினரை அடக்கும் நோக்குடன் கொண்டு வரப்படும் இந்தச் சட்டம் தேவையில்லை என்றும் அவர்கள் தெரிவித்தனர்.

முஸ்லிம் கட்சிகள் மற்றும் இந்த நிலைப்பாட்டுக்கு ஆதரவளிக்கக்கூடிய சிங்களக் கட்சிகளையும் இணைத்து இது தொடர்பில் பரந்த பரப்புரை முன்னெடுப்பது பற்றியும் இந்தக் கூட்டத்தில் ஆராயப்பட்டுள்ளது. (வ-5)

மோசடி...

ஓய்வுநிலை மேல் நீதிமன்ற நீதிபதி தலைமையில் மூன்று பேர் இந்தக் குழுவுக்கு நியமிக்கப்பட்டனர். இந்தக் குழு பல்வேறு விசாரணைகளை மேற்கொண்டிருந்தது. இதன் இறுதி அறிக்கை, வடக்கு மாகாண முதலமைச்சரிடம் கையளிக்கப்பட்டுள்ளது.

வடக்கு மாகாண சபையின் 94ஆவது அமர்வு எதிர்வரும் 25ஆம் திகதி நடைபெறவுள்ளது. இந்த அமர்வில், வாய்மொழி மூலமான கேள்விகளை வடக்கு மாகாண முதலமைச்சரிடம் கேட்பதற்கு, வடக்கு மாகாண எதிர்க்கட்சித் தலைவர் சி.தவராசா, அவைத் தலைவருக்கு எழுத்தில் சமர்ப்பித்துள்ளார்.

அதில், விசாரணைக் குழுவின் அறிக்கையைப் பகிரங்கப்படுத்துமாறு கோரியுள்ளார். அத்துடன் விசாரணை அறிக்கையின் பிரதியை வழங்குமாறும் அவர் கோரியுள்ளார். (வ-5,101)

மைத்திரியின்...

சம்பூர் பிரதேசத்தில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற நிகழ்வொன்றில் அரச தலைவர் மைத்திரிபால கலந்துகொண்டு உரையாற்றும் போது, "காணாமல் ஆக்கப்பட்டவர்கள் எங்கு தடுத்து வைக்கப்பட்டுள்ளனர் என அறிந்திருந்தால், அதனை தெரிவிக்கும் பட்சத்தில் அங்கு சென்று ஆராய்வதற்கான திட்டத்தை அரசு வகுக்கும்" என்று கூறியிருந் தார்.

அரச தலைவரின் இந்தக் கருத்து தொடர்பில் வடக்கில் போராட்டத்தில் ஈடுபட்டுள்ள காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவுகள் கருத்து தெரிவிக்கும்போதே மேற்கண்டவாறு தெரிவித்தனர்.

முல்லைத்தீவில் போராட்டத்தில் ஈடுபட்டுள்ள காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவுகள் தெரிவித்ததாவது:

இராணுவத்தின் கைகளில் எங்கள் பிள்ளைகளை ஒப்படைத்தோம். அது மட்டும்தான் எங்களுக்குத் தெரியும். இதற்கு ஆயிரம் சாட்சிகள் உள்ளன. அவர்களிடம் ஒப்படைத்தவர்களை எங்களுக்குத் தரவேண்டியது அவர்கள் பொறுப்பு. அதில் இருந்து அவர்கள் நழுவிச் செல்லமுடியாது.

அரச தலைவர் ஆணைக்குழுவில் நாங்கள் பல தடவைகள் சட்சியங்கள் பதிவு செய்துள்ளோம். எமக்கு தீர்வுகளைப் பெற்றுத்தாருங்கள் என்றுதான் நாங்கள் கேட்கின்றோம். எங்கள் பிள்ளைகளை எந்த முகாமில் அடைத்து வைத்திருக்கின்றார்கள் என்பது எமக்குத் தெரிந்தால், நாம் அங்கேயே சென்று அழைத்து வந்திருப்போம். நாங்கள்தான் அவர்கள் கையில் ஒப்படைத்த பிள்ளைகளை எங்கே வைத்திருக்கின்றார்கள் எனச் சொல்லவேண்டும் என எதிர்பார்ப்பது கவலை அளிக்கின்றது.

ஆணைக்குழுக்களை அமைக்கின்றீர்கள், காணாமற்போனோர் அலுவலகம் அமைக்க உள்ளதாகச் சொல்கின்றீர்கள் இவற்றை விரைந்து செய்யுங்கள் எனறுதான் நாங்கள் சொல்கின்றோம். நீங்கள் காலத்தை இழுத்தடிப்பதில்தான் அக்கறையுடன் செயற்படுவதாக எம்மால் உணரக்கூடியதாக உள்ளது. மேடைகளில் கதைப்பதை விடுத்து இதயசுத்தியுடன் செயலாற்ற வேண்டும் - என்றனர்.

கிளிநொச்சியில் போராட்டத்தில் ஈடுபட்டுள்ள காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவினர்கள் தெரிவித்ததாவது:

காணாமல் ஆக்கப்பட்டவர்களைக் கண்டறிவதற்கு மிக விரைவில் சிறப்புக் குழு அமைக்கப்படும் என அரச தலைவர் தெரிவித்த கருத்தில் எமக்கு நம்பிக்கை இல்லை.

கடந்த 8 வருடங்களாக குழுக்கள் அமைத்து விசாரணை நடத்தி வருகின்றனர். அதுபோல இந்தக் குழுவும் இருக்குமோ? என்ற நிலை எங்களின் மனதில் தோன்றுகின்றது. நாங்கள் 91 நாள்களாக இந்தப் போராட்டத்தை முன்னெடுத்து வருகின்றோம். அரச தலைவரின் கருத்திலும் எங்களுக்கு நம்பிக்கை இல்லை. நாங்கள் எங்கள் பிள்ளைகளைக் கண்டறியப் போராட வேண்டிய சூழ்நிலை தோன்றியுள்ளது. அதற்காவே 91நாள்களாக போராடி வருகின்றோம்.

அரச தலைவர் நியமிக்கின்ற குழு சரியான முறையில் விசாரணைகளை முன்னெடுக்குமாயின் அதனை நாங்கள் வரவேற்கின்றோம். இருப்பினும் முன்னர் அமைக்கப்பட்ட குழுக்கள் போன்று அல்லாது இந்த குழு இயங்கவேண்டும் என்பதே எமது எதிர்பார்ப்பு. குழு அமைத்து விசாரணைகள் ஆரம்பிப்பதற்கு முன்னர் தற்போது உள்ள பிள்ளைகளின் பெயர் விவரங்களை வெளியிடவேண்டும் - என்றனர். (வ-6,7,8)

குருநாகல்...

நடத்திவிட்டுச் சென்றுள்ளனர். இது சீ சீ ரி வி கமராவில் பதிவாகியுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

இந்தத் தாக்குதல் காரணமாக பள்ளிவாசல் மேல் மாடியில் உள்ள கண்ணாடியில் சிறு சேதம் ஏற்பட்டது. மாபிள்கள் சுவரும் கருகிப் போயுள்ளது. பள்ளிவாசலுக்கு அருகாமையில் செல்லுகின்ற தொரட்டியாவ வீதியில் நின்று பள்ளிவாசலின் பின்பகுதியிலேயே இந்த தாக்குதலை நடத்திச் சென்றுள்ளனர்.

6 பெற்றோல் குண்டுகள் தாக்குதலுக்குப் பயன்படுத்தப்பட்டுள்ளன. இதில் 2 குண்டுகள் வெடிக்கவில்லை. இந்தச் சந்தர்ப்பத்தின் போது மூன்று நாள் ஜமாஅத்தில் வருகை தந்தவர்கள் பள்ளியில் தங்கியிருந்துள்ளனர். எனினும் அவர்கள் எவருக்கும் பாதிப்பு ஏற்படவில்லை என்று தெரிவிக்கப்பட்டது.

இது தொடர்பாக குருநாகல் மாவட்டப் பிரதிப் பொலிஸ்மா அதிபர் கிரகரி குரே உத்தரவின் பேரில் பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். அதிரடிப்படையினர் மற்றும் பொலிஸார் பள்ளிவாசல் பாதுகாப்பில் ஈடுபட்டுள்ளனர். (வ-ய-10)

ஜெனிவா...

வழமையைவிட இம்முறை பங்கு கொள்பவர்களின் எண்ணிக்கை அதிகரிக்கப்பட்டுள்ளது. அங்கு பயணம் மேற்கொண்டுள்ள இலங்கைக் குழுவில் 16 பேர் உள்ளடங்குகின்றனர் என்று தெரிவிக்கப்பட்டது.

பன்னாட்டு சுகாதார மாநாடு சுவிற்சர்லாந்தின் ஜெனிவாவில் இன்று இடம்பெறுகிறது. பன்டுகளிலிருந்தும் சுகாதாரக் குழுவினர் இதில் பங்கெடுக்கின்றனர்.

இலங்கையிலிருந்து பயணிக்கும் குழுவினரில் வடக்கின் மாகாண சுகாதார அமைச்சர் ப.சத்தியலிங்கம், யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலைப் பணிப்பாளர் மருத்துவர் த.சத்தியமூர்த்தி ஆகியோர் உள்ளடங்கியுள்ளனர்.

அதுமட்டுமன்றி 'கொழும்பு அறிவிப்பு' இன்று இடம்பெறவுள்ள பன்னாட்டுச் சுகாதார அமைப்பு மாநாட்டில் முன்வைக்கப்படவுள்ளது. அமைச்சர் ராஜித சேனாரத்ன அதில் சிறப்பு ரையாற்றவுள்ளார்.

மாநாட்டைத் தொடர்ந்து இடம்பெற வுள்ள பொதுநலவாய ஒன்றிய நாடுகளின் சுகாதார அமைச்சர்களுக்கான கூட்டத்திலும் அமைச்சர் ராஜித சேனாரத்ன உரையாற்றவுள்ளார் என்று கூறப்பட்டுள்ளது. (த-4-101)

மோசடி விசாரணை...

கையளிக்கப்பட்டுள்ளது. இது தொடர்பில் சுகாதார அமைச்சர் சத்தியலிங்கத்திடம் கேட்டபோதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

விசாரணைக்கான தீர்மானம் வடக்கு மாகாண சபையில் நிறைவேற்றப்பட்டது. அதனால் முதலமைச்சரால் விசாரணைக் குழு அமைக்கப்பட்டு விசாரணைகள் இடம்பெற்றன. நான்கு அமைச்சர்கள் தொடர்பிலும் குற்றச்சாட்டுக்கள் முன்வைக் கப்பட்டன. விசாரணைக் குழு அழைத்ததால் அந்தக் குழு முன்பாகத் தோன்றி விளக்கம் அளித்தோம்.

குறித்த விசாரணையில் என்ன நடந்த[illegible] என்று அறிய மக்கள் ஆவலாகவுள்ள[illegible] அமைச்சர்கள் மீது சுமத்தப்பட்ட குற்ற[illegible]டுக்கள் உண்மைதானா என்று அனை[illegible] அறியவேண்டும். எனவே முதலமைச்[illegible] கையளிக்கப்பட்டிருக்கும் விசார[illegible] அறிக்கை பகிரங்கப்படுத்தப்படவேண்[illegible] என்பதே எனது நிலைப்பாடு. விசார[illegible] அறிக்கை முதலமைச்சரின் கையில் [illegible]டைக்கப்படுவதற்கு முன்னரே பகிரங்கப்படு[illegible]தப்படவேண்டும் என்று ஒரு வாரத்துக்கு முன்னரே மின்னஞ்சல் மூலமாகக் கோரியிருந்தேன் - என்றார் (த-4-101)

அர்ப்பணிப்புடன்...

நன்மைகளை மக்களுக்குப் பெற்றுக்கொடுக்க மருத்துவத் துறையினரும் அர்ப்பணிப்புடன் செயற்பட வேண்டும்.

இவ்வாறு அரச தலைவர் மைத்திரிபால சிறிசேன தெரிவித்தார்.

ஜோன் கொத்தலாவல பாதுகாப்பு பல்கலைக் கழகத்தின் புதிய போதனா வைத்தியசாலை அரச தலைவர் மைத்திரிபால சிறிசேனவால் நேற்றுத் திறந்துவைக்கப்பட்டது. அதில் முதன்மை விருந்தினராகக் கலந்துகொண்டு உரையாற்றுகையில் அவர் இவ்வாறு தெரிவித்தார். அவர் அங்கு மேலும் தெரிவித்ததாவது:

மருத்துவர்கள், தாதியர்கள் வெளிநாடுகளுக்குச் செல்லும் எண்ணிக்கை வருடாந்தம் அதிகரித்துள்ளது. இதனால் அவர்களுக்குப் பற்றாக்குறை நிலவுகிறது.

நாட்டு மக்களின் இலவச சுகாதார சேவையைப் பலப்படுத்துவதற்கு பங்களிக்கவேண்டியது மருத்துவத் துறையினர் உட்பட அனைவருடையதும் பொறுப்பு.

அரச மருத்துவமனைகளில் சிறப்பு மருத்துவர்கள் மற்றும் தாதியர்களுக்குத் தட்டுப்பாடு நிலவுகிறது. அவர்கள் வெளிநாடு செல்வதால் அவர்களது இடங்களுக்கு வெற்றிடம் ஏற்படுகிறது. அவர்கள் வெளிநாடுகளுக்குச் செல்லாது தடுத்து வைத்துக்கொள்வதற்கான வழிகள் இல்லை என்றபோதும் இலவசக் கல்வியையும் இலவசச் சுகாதாரத்தையும் மக்களுக்குப் பெற்றுக்கொடுக்க அனைவரும் முன்வரவேண்டும் - என்றார். (த-4)

அரச...

கேட்டுள்ளன. அரச மருத்துவர்கள் இன்று காலை 8 மணி தொடக்கம் நாளை செவ்வாய்க்கிழமை காலை 8 மணிவரையான 24 மணித்தியாலங்கள் பணிப்புறக்கணிப்பில் ஈடுபடவுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

நாடு முழுவதும் உள்ள மருத்துவர்கள் இவ்வாறு பணிப் புறக்கணிப்பில் ஈடுபடவுள்ளனர்.

சைட்டம் தனியார் வைத்தியசாலைக்கு எதிர்ப்புத் தெரிவித்தும் அந்த வைத்தியசாலைக்கு எதிரான மருத்துவ பீட மாணவர்களின் போராட்டத்தின்போது தாக்குதல் நடத்தப்பட்டமைக்கு எதிர்ப்புத் தெரிவித்தும் இவ்வாறு போராட்டத்தில் ஈடுபடுவதாக அரச மருத்துவ அதிகாரிகள் சங்கம் தெரிவித்தது. (வ-4)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அம்பாள் வென்றது

யாழ்ப்பாணம், மே 22
கரவெட்டி ஞானம்ஸ் விளையாட்டுக் கழகம் நடத்திய அணிக்கு 9 வீரர்கள் பங்குபற்றும் 8 பந்துப் பரிமாற்றங்களை கொண்ட மென்பந்துத் துடுப்பாட்டத் தொடரில் நேற்று முன்தினம் வழக்கம்பரை அம்பாள் விளையாட்டுக் கழகம் வென்றது.
ஞானம்ஸின் மைதானத்தில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற ஆட்டத்தில் வழக்கம்பரை அம்பாள் விளையாட்டுக் கழகமும் கார்மேல் போய்ஸ் விளையாட்டுக் கழகமும் மோதின. நாணயச் சுழற்சியில் வெற்றிபெற்ற அம்பாள் அணி முதலில் துடுப்பெடுத்தாடத் தீர்மானித்தது. நிர்ணயிக்கப்பட்ட 8 பந்துப் பரிமாற்றங்கள் நிறைவில் அந்த அணி 3 இலக்குகளை இழந்து 71 ஓட்டங்களைப் பெற்றது.
பதிலுக்குத் துடுப்பெடுத்தாடிய கார்மேல் போய்ஸ் அணி 8 பந்துப் பரிமாற்றங்கள் நிறைவில் 60 ஓட்டங்களை மாத்திரம்பெற்று 11 ஓட்டங்களால் தோல்வியடைந்தது. (ம-108)

திக்கம் இளைஞரின் அரையிறுதி இன்று

கரணவாய், மே 22
திக்கம் இளைஞர் விளையாட்டுக் கழகம் யாழ்ப்பாண மாவட்ட ரீதியாக நடத்திய கரப்பந்தாட்டத் தொடரின் அரையிறுதி ஆட்டங்கள் குறித்த கழக மைதானத்தில் இன்று இடம்பெறவுள்ளன.
மாலை 6.30 மணிக்கு இடம்பெறும் முதலாவது அரையிறுதி ஆட்டத்தில் ஆவரங்கால் மத்திய விளையாட்டுக் கழகத்தை எதிர்த்து இளவாலை மத்திய விளையாட்டுக் கழகமும் தொடர்ந்து இடம்பெறும் ஆட்டத்தில் ஆவரங்கால் இந்து இளைஞர் விளையாட்டுக் கழகத்தை எதிர்த்து புத்தூர் கலைமதி விளையாட்டுக் கழகமும் மோதவுள்ளன.
(ம-108)

வேம்படி மகளிர் வாகை சூடியது

யாழ்ப்பாணம், மே 22
வை.எம்.சி.ஏ. நிறுவனம் நடத்திய அணிக்கு மூன்று வீராங்கனைகள் பங்குபற்றும் கூடைப்பந்தாட்டத் தொடரில் 16 வயது பெண்கள் பிரிவில் வேம்படி மகளிர் உயர்தரப் பாடசாலை அணி கிண்ணத்தைக் கைப்பற்றியது.
வேம்படி மகளிர் உயர்தர பாடசாலை அணியை எதிர்த்து உடுவில் மகளிர் கல்லூரி அணி மோதியது. இதில் வேம்படி மகளிர் உயர்தரப் பாடசாலை அணி 6:1 என்ற புள்ளிகளின்அடிப்படையில்வெற்றி பெற்று சம்பியனாது. (ம-23)

நியூபவர் சம்பியன்

கைதடி வளர்மதி அணி தனது 58ஆவது ஆண்டு நிறைவை முன்னிட்டு நடத்திய துடுப்பாட்டத் தொடரின் இறுதியாட்டத்தில் மட்டுவில் வளர்மதி அணியை 7 இலக்குகளால் வீழ்த்தி சம்பியனானது சாவகச்சேரி நியூபவர் அணி.
கைதடி வளர்மதி மைதானத்தில் நேற்றுமுன்தினம் இந்த இறுதியாட்டம் நடைபெற்றது. நாணயச் சுழற்சியில் வெற்றிபெற்ற மட்டுவில் வளர்மதி அணி முதலில் துடுப்பெடுத்தாடியது. நிர்ணயிக்கப்பட்ட 12 பந்துப்பரிமாற்றங்களில் 8 இலக்குகள் இழப்புக்கு அந்த அணி 62 ஓட்டங்களைப் பெற்றது. சஜீவன் 22 ஓட்டங்களையும், அஜந்தன் 15 ஓட்டங்களையும் பெற்றனர்.
பதிலுக்குக் களமிறங்கிய நியூபவர் அணி 3 இலக்குகளை மட்டும் இழந்து வெற்றிபெற்றது. ஆட்டநாயகனாக ஆட்டமிழக்காமல் 34 ஓட்டங்களை விளாசிய நியூபவர் அணியின் விபூசன் தெரிவானார். (ம)

திருக்குமரன், ஸ்ரார் முன்னேற்றம் கண்டன

கரணவாய், மே 22
கலைமதியின் கால்பந்தாட்டத் தொடரில் உரும்பிராய் திருக்குமரன் விளையாட்டுக் கழகம் மற்றும் புங்குடுதீவு சண் ஸ்ரார் விளையாட்டுக் கழகம் என்பன அடுத்த சுற்றுக்கு முன்னேற்றம் கண்டுள்ளன.
நவிண்டில் கலைமதி விளையாட்டுக் கழகம் யாழ்ப்பாண மாவட்ட ரீதியாக நடத்தும் கால்பந்தாட்டத் தொடரின் ஆட்டங்கள் குறித்த கழக மைதானத்தில் இடம்பெற்று வருகின்றன.

இளைஞர் - திருக்குமரன்

நேற்றுமுன்தினம் இடம்பெற்ற முதலாவது ஆட்டத்தில் அண்ணா சிலையடி இளைஞர்விளையாட்டுக் கழகமும் உரும்பிராய் திருக்குமரன் விளையாட்டுக் கழகமும் பலப்பரீட்சை நடத்தின. விறுவிறுப்பாக இடம்பெற்ற ஆட்டத்தின் முதல்பாதியின் 5 ஆவது நிமிடத்தில் திருக்குமரனின் சயந்தன் கோல் கணக்கை ஆரம்பித்து வைத்தார். 11ஆவது நிமிடத்தில் பதிலடி கொடுத்தார் அண்ணா சிலையடியின் நிவேதன். 1:1 என்ற நிலையில் முடிவுக்கு வந்தது முதல் பாதி. இரண்டாவம் பாதியின் 17 ஆவது நிமிடத்தில் திருக்குமரனின் இரண்டாவது கோல் பதிவாக முடிவில் அந்த அணி 2:1 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்று அடுத்தசுற்றுக்கு முன்னேறியது.

இமையாணன் - சண் ஸ்ரார்

தொடர்ந்து இடம்பெற்ற ஆட்டத்தில் இமையாணன் இளைஞர் விளையாட்டுக் கழகமும் புங்குடுதீவு சண் ஸ்ரார் அணியும் மோதின. 5:0 என்ற கோல்களின் அடிப்படையில் சண் ஸ்ரார் அணி இலகுவாக வெற்றிபெற்றது.
(ம-108)

ஏஞ்சல் கிண்ணம் வென்றது

யாழ்ப்பாணம், மே 22
வை.எம்.சி.ஏ. நிறுவனம் நடத்திய அணிக்கு மூன்று வீரர்கள் பங்குபற்றும் கூடைப்பந்தாட்டத் தொடரில் 16 வயது ஆண்கள் பிரிவில் மானிப்பாய் ஏஞ்சல் பன்னாட்டுப் பாடசாலை அணி வெற்றிபெற்றுக் கிண்ணம் வென்றது.
யாழ்ப்பாணம் மத்திய கல்லூரியின் மைதானத்தில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற இறுதியாட்டத்தில் மானிப்பாய் ஏஞ்சல் பன்னாட்டுப் பாடசாலை அணியை எதிர்த்து யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி அணி மோதியது. 7:4 என்ற புள்ளிகளின் அடிப்படையில் ஏஞ்சல் பன்னாட்டுப் பாடசாலை அணி வெற்றிபெற்றது. (ம-23)



கரவெட்டி இளைஞர் கழகம் எல்லேயில் மகுடம் சூடியது

கரணவாய், மே 22
யாழ்ப்பாண மாவட்ட இளைஞர் கழகங்களுக்கு இடையிலான எல்லேயில் கரவெட்டி பிரதேச இளைஞர் கழகம் கிண்ணம் வென்றது.
கந்தரோடை ஸ்கந்தவரோதயக் கல்லூரி மைதானத்தில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற இறுதியாட்டத்தில் சங்கானை பிரதேச இளைஞர் கழகமும் கரவெட்டி பிர தேச இளைஞர் கழகமும் மோதின.
நாணயச்சுழற்சியில் வெற்றிபெற்று முதலில் துடுப்பெடுத்தாடக் களமிறங்கிய சங்கானை அணி 30 பந்துகளில் 7 ஓட்டங்களைப் பெற்றது. அதிகபட்சமாக நிந்துஜா 3 ஓட்டங்களையும், இ.கம்சிகா 2 ஓட்டங்களையும் பெற்றனர். 8 ஓட்டங்களை இலக்காகக் கொண்டு களமிறங்கிய கரவெட்டி அணி 22 பந்துகளில் வெற்றி பெற்றது. அதிகபட்சமாக பிரசாஜினி 3 ஓட்டங்களையும், பிரியவர்ணா மற்றும் அபிநயா இருவரும் தலா இரண்டு ஓட்டங்களையும் பெற்றனர்.
(ம-108)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இன்றைய மோதல்கள்

யாழ்ப்பாணம், மே 22
நவிண்டில் கலைமதி விளையாட்டுக் கழகம் யாழ்ப்பாண மாவட்ட ரீதியாக நடத்தும் கால்பந்தாட்டத் தொடரின் ஆட்டங்கள் சில இமையாணன் மத்திய விளையாட்டுக் கழக மைதானத்தில் இன்று இடம் பெறவுள்ளன.
பிற்பகல் 3.30 மணிக்கு இடம்பெறும் முதலாவது ஆட்டத்தில் தீவகம் நசரேத் விளையாட்டுக் கழகத்தை எதிர்த்து பொலிகை பாரதி விளையாட்டுக் கழகமும் மாலை 4.30 மணிக்கு இடம்பெறும் ஆட்டத்தில் வரணி இளைஞர் விளையாட்டுக் கழகத்தை எதிர்த்து அல்வாய் நண்பர்கள் விளையாட்டுக் கழகமும் மோதவுள்ளன. (ம-108)

பொண்டிங்கின் தரப்படுத்தல்கள்

நடப்பு வருட ஐ.பி.எல். தொடரில் சிறந்த பெறுபேற்றை வெளிப்படுத்திய வீரர்களை துடுப்பாட்டம், பந்து வீச்சு, களத்தடுப்பு என்று மூன்று துறைகளிலும் தனித்தனியாக தரப்படுத்தியுள்ளார் ஆஸ்திரேலிய அணியின் முன்னாள் தலைவர் பொண்டிங்.
துடுப்பாட்டத் தரப்படுத்தலில் வோர்ணர் (ஹைதராபாத்) கம்பீர் (கொல்கத்தா), தவான் (ஹைதராபாத்), ரெய்னா (குஜராத்), சிமித் (புனே) ஆகிய வீரர்கள் முதல் ஐந்து இடங்களிலும் உள்ளனர்.

சிறந்த பந்து வீச்சாளர்கள் தரப்படுத்தலில், புவனேஸ்வர் குமார் (ஹைதராபாத்), ஜெய்தேவ் உனகட் (புனே), மக்கலினகன் (மும்பை), தாகிர் (புனே), பும்ரா (மும்பை) ஆகிய வீரர்கள் முதல் ஐந்து இடங்களிலும் உள்ளனர்.
களத்தடுப்பாளர்கள் தரப்படுத்தலில் பொலார்ட் (மும்பை), மக்ஸ்வெல் (பஞ்சாப்), ஜடேயா (குஜராத்), வோர்ணர் (ஹைதராபாத்), பாண்டியா (மும்பை) ஆகியவர்கள் முதல் ஐந்து இடங்களிலும் உள்ளனர். (ம)

ஹாட்லி யைட்ஸ் வென்றது கிண்ணம்

யாழ்ப்பாணம், மே 22
ஜொலிஸ்ரார் விளையாட்டுக் கழகத்தின் துடுப்பாட்டத் தொடரில் ஹாட்லி யைட்ஸ் அணி கிண்ணம் வென்றது.
யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி மைதானத்தில் நேற்று நடைபெற்ற இறுதியாட்டத்தில் ஹாட்லி யைட்ஸ் அணியை எதிர்த்து சென்றலைட்ஸ் அணி மோதியது.
முதலில் துடுப்பெடுத்தாடிய ஹாட்லி யைட்ஸ் அணி 154 ஓட்டங்களில் சகல இலக்குகளையும் இழந்தது. மணிமாறன் 38 ஓட்டங்களை அதிகபட்சமாகப் பெற்றார்.
பந்துவீச்சில் ஜெரிக்துசாந் 4 இலக்குகளையும், அலன்குமார், டார்வின் இருவரும் தலா இரு இலக்குகளையும் வீழ்த்தினர்.

155 ஓட்டங்களைப் பெற்றால் வெற்றியென்ற இலக்குடன் பதிலுக்குக் களமிறங்கிய சென்றலைட்ஸ் அணி 148 ஓட்டங்களில் சகல இலக்குகளையும் இழந்து 6 ஓட்டங்களால் கிண்ணத்தைத் தவறவிட்டது. அதிகபட்சமாக டார்வின் 41 ஓட்டங்களையும், ஜெனோசன் 21ஓட்டங்களையும், செல்ரன் 19 ஓட்டங்களையும், நிரேசன் 12 ஓட்டங்களையும் பெற்றனர்.
பந்துவீச்சில் பிரதீப், பிரசாந் இருவரும் தலா 3 இலக்குகளையும், சாகித்யன், நிசாந்தன் இருவரும் தலா 2 இலக்குகளையும் வீழ்த்தினர்.
ஆட்டநாயகனாக ஹாட்லி யைட்ஸ் அணியின் பிரசாந், தொடராட்ட நாயகனாக அதே அணியின் சாகித்யன் இருவரும் தெரிவாகினர். (ம-23)

வலைப்பந்தாட்டத் தொடர்

16 வயது பெண்கள் காலிறுதிகள் இன்று

யாழ்ப்பாணம், மே 22
வடமாகாண பாடசாலைகளுக்கு இடையிலான வலைப்பந்தாட்டத் தொடரில் 16 வயதுப் பெண்கள் பிரிவு காலிறுதி ஆட்டங்கள் இன்று நடைபெறவுள்ளன.
தெல்லிப்பழை யூனியன் கல்லூரி மைதானத்தில் நேற்று ஆரம்பமாகிய இந்த ஆட்டங்கள் இன்றும் நடைபெறவுள்ளன. 16 வயதுப் பெண்கள் பிரிவில் தெல்லிப்பழை யூனியன் கல்லூரி அணியை எதிர்த்து இடைக்காடு மகா வித்தியாலய அணியும், பாசையூர் சென். அன்ரனிஸ் அணியை எதிர்த்து வடமராட்சி இந்து மகளிர் கல்லூரி அணியும் காலிறுதி ஆட்டங்களில் இன்று மோதவுள்ளன.
காலிறுதியாட்டத்துக்கு செல்லும் அணிகளை தீர்மானிக்கும் ஆட்டங்களில் பருத்தித்துறை மெதடிஸ்த பெண்கள் உயர்தரப் பாடசாலை அணியை எதிர்த்து வவுனியா நெளுக்குளம் கலைமகள் வித்தியாலய அணியும் முல்லைத்தீவு பாலிநகர் அ.த.க. பாடசாலை அணியை எதிர்த்து ஆண்டான்குளம் அ.த.க. பாடசாலை அணியும் வரணி மத்திய கல்லூரி அணியை எதிர்த்து அராலி சரஸ்வதி மகா வித்தியாலய அணியும் மோதவுள்ளன. (ம-422)

வேம்படி – மெதடிஸ்த பெண்கள்

காலிறுதியில் இன்று பலப்பரீட்சை

யாழ்ப்பாணம், மே 22
வடமாகாண பாடசாலைகளுக்கு இடையிலான வலைப்பந்தாட்டத்தில் 20 வயதுப் பெண்கள் பிரிவு காலிறுதி ஆட்டமொன்றில் வேம்படி பெண்கள் உயர்தரப் பாடசாலை அணியை எதிர்த்து பருத்தித்துறை மெதடிஸ்த பெண்கள் உயர்தரப் பாடசாலை அணி இன்று மோதவுள்ளது.
தெல்லிப்பழை யூனியன் கல்லூரி மைதானத்தில் இந்த ஆட்டம் நடைபெறவுள்ளது.
ஏனைய ஆட்டங்களில் வவுனியா நெளுக்குளம் கலைமகள் வித்தியாலய அணியை எதிர்த்து யாழ்ப்பாணம் இந்து மகளிர் கல்லூரி அணியும், முல்லைத்தீவு ஐயன்குளம் அ.த.க. பாடசாலை அணியை எதிர்த்து சுழிபுரம் விக்டோரியா கல்லூரி அணியும் மோதவுள்ளன. (ம-422)

ஐ.பி.எல். அணிகள் பறந்துள்ள தூரம்

நடப்பு வருட ஐ.பி.எல். தொடர் முடிவடைந் துள்ள நிலையில் ஒவ் வொரு அணியும் பயணம் செய்த தூரங்கள் குறித்து தகவல் வெளியிடப்பட்டுள்ளது.
கொல்கத்தா அணி 18 ஆயிரத்து 530 கிலோமீற்றர் தூரத்துக்குப் பறந்து முதலிடத்தில் உள்ளது. இது டெல்லி அணி பயணம் செய்த தூரத்தை விட இரு மடங்காகும். பஞ்சாப் 11 ஆயிரத்து 936 கிலோ மீற்றர் தூரத்துக்குப் பயணம் செய்துள்ளது. குஜராத் 11 ஆயிரத்து 441 கிலோமீற்றர் தூரத்துக்குப் பயணம் செய்துள்ளது. மும்பை இந்தியன்ஸ் அணி 11ஆயிரத்து 420 கிலோ மீற்றர் தூரத்துக்கும், ரோயல் சலஞ்சர்ஸ் பெங்களூரு அணி 11 ஆயிரத்து 383 கிலோ மீட்டர் தூரமும், புனே அணி 9 ஆயிரத்து 655 கிலோ மீற்றர் தூரத்துக்கும் பறந்துள்ளன. (ம)

காலிறுதிக்குச் செல்லும் அணிகள் எவை?

யாழ்ப்பாணம், மே 22
வடமாகாண பாடசாலைகளுக்கு இடையிலான வலைப்பந்தாட்டத் தொடரில் 18 வயது பெண்கள் பிரிவில் காலிறுதிக்குச் செல்லவுள்ள அணிகளைத் தீர்மானிக்கும் ஆட்டங்கள் இன்று காலை நடைபெறவுள்ளன.
தெல்லிப்பழை யூனியன் கல்லூரி மைதானத்தில் இன்று காலை இடம்பெறும் ஆட்டங்களில் தெல்லிப்பழை யூனியன் கல்லூரி அணியை எதிர்த்து கொக்குவில் இந்துக் கல்லூரி அணியும், வவுனியா சைவப்பிரகாச மகளிர் கல்லூரி அணியை எதிர்த்து கிளிநொச்சி மகா வித்தியாலய அணியும், இடைக்காடு மகா வித்தியாலய அணியை எதிர்த்து பருத்தித்துறை மெதடிஸ்த பெண்கள் உயர்தரப் பாடசாலை அணியும், சண்டிலிப்பாய் இந்துக் கல்லூரி அணியை எதிர்த்து யாழ்ப்பாணம் இந்து மகளிர் கல்லூரி அணியும், மன்னார் சென். ஜோசப் மகா வித்தியாலய அணியை எதிர்த்து வடமராட்சி இந்து மகளிர் கல்லூரி அணியும், வவுனியா சுந்தரம் அ.த.க. பாடசாலை அணியை எதிர்த்து முல்லைத்தீவு தேவிபுரம் அ.த.க. பாடசாலை அணியும், முல்லைத்தீவு தண்டுவான் அ.த.க. பாடசாலை அணியை எதிர்த்து அராலி சரஸ்வதி மகா வித்தியாலய அணியும் மோதவுள்ளன. (ம-422)

கயிறிழுத்தலில் தேசியமட்டத்துக்குத் தெரிவாகிய கிடாச்சூரி கண்ணகி இளைஞர் அணிக்கு வடமாகாண சுகாதார அமைச்சர் ப.சத்தியலிங்கத்தால் ஜெர்சியும், காலணியும் வழங்கப்பட்டுள்ளது. கடந்த வெள்ளிக்கிழமை இந்த நிகழ்வு நடைபெற்றது. (ம)

யாழ். மாவட்ட பிரதேச செயலகங்களின் இறுதிநாள் நிகழ்வு ஹாட்லியில் நாளை

யாழ்ப்பாணம், மே 22
யாழ்ப்பாண மாவட்ட பிரதேச செயலகங்களுக்கு இடையிலான வருடாந்த விளையாட்டு விழா பருத்தித்துறை ஹாட்லிக் கல்லூரி மைதானத்தில் நாளை பிற்பகல் 2 மணிக்கு நடைபெறவுள்ளது.
இருபாலாருக்குமான 200 மீற்றர், இருபாலாருக்குமான 800 மீற்றர் ஓட்டப் போட்டிகள் நடைபெறவுள்ளன. கால்பந்தாட்டத் தொடரின் இறுதியாட்டத்தில் உடுவில் பிரதேச செயலக அணியும், கோப்பாய் பிரதேச செயலக அணியும் மோதவுள்ளன. பரிசளிப்பு நிகழ்வுக்கு முதன்மை விருந்தினராக யாழ்ப்பாண மாவட்ட அரச அதிபர் நா.வேதநாயகன், சிறப்பு விருந்தினராக வடமாகாண விளையாட்டுத் திணைக்களப் பணிப்பாளர் இ.குருபரன் இருவரும் கலந்து கொள்ளவுள்ளனர். (ம-23)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மும்பை இந்தியன்ஸ் சம்பியன்

மகேலவின் பயிற்சியில்

ஐ.பி.எல். தொடரில் நேற்று இரவு நடைபெற்ற இறுதியாட்டத்தில் புனே சுப்பர் ஜெயின்ட்டைத் தோற்கடித்து சம்பியனானது மும்பை இந்தியன்ஸ் அணி.

நாணயச் சுழற்சியில் வெற்றிபெற்ற மும்பை அணித்தலைவர் ரோகித் முதலில் துடுப்பெடுத்தாடத் தீர்மானித்தார். மும்பையின் ஆரம்ப வீரர்களாக சிம்மன்ஸ் மற்றும் பார்திவ் பட்டேல். முதல்பந்துப் பரிமாற்றத்தை மிகுந்த கட்டுக்கோப்புடன் வீசினார் உனகட். தனது இரண்டாவது பந்துப்பரிமாற்றத்தில் அக்சர் பட்டேல், சிம்மன்ஸ் இருவரையம் பவிலியனுக்குத் திருப்பினார். ஓர் பந்துப்பரிமாற்றத்தில் இரு இலக்குகள் சரிக்கப்பட்டதால் மும்பையின் தடுமாற்றம் ஆரம்பமானது. ரண்அவுட் செய்யப்பட்டார் ராயிடு. சிறிது நிதானித்தார் ரோகித். எனினும் நீடிக்க அனுமதிக்கவில்லை சாம்பா. பொலார்ட்டும் சாம்பாவின் சுழலில் ஆட்டமிழந்தார். குருனல் பாண்டியா தொடர்ந்தும் களத்தில் நின்று கடைசிக்கட்டத்தில் ஓரிரு பவுண்டரிகளைப் பதிவுசெய்ய முடிவில் 8 இலக்குகளை இழந்து 129 ஓட்டங்களைச் சேர்த்தது மும்பை.

பந்துவீச்சில் உனகட், சாம்பா, கிறிஸ்ரியன் மூவரும் தலா இரு இலக்குகளைக் கைப்பற்றினர்.

பதிலுக்குக் களமிறங்கிய புனே அணிக்கு ஆரம்ப வீரர்களாக திரிபதி மற்றும் ரகானே. அதிரடி வீரரான திரிபதியை 3 ஓட்டங்களுடன் வீழ்த்தினார் பும்ரா. இலக்குச் சரிவைக் கருத்திற் கொண்டு மிகவும் நிதானித்தனர் ரகானேயும் சிமித்தும். சிமித் ஓர் கட்டத்தில் 22 பந்து களில் 10 ஓட்டங்களே எடுத்திருந்தார். அவ்வளவு நிதானம். ரகானேயின் ஆட்டத்திலும் பெரிய அதிரடியென்று இல்லை. பந்துப்பரிமாற்றத்தக்கு 6 ஓட்டங்களுக்கும் குறைவான சராசரியில் புனேயின் இன்னிங்ஸ் நகர்ந்தது.

44 ஓட்டங்களுடன் ஆட்டமிழந்தார் ரகானே. 49 பந்துகளிலேயே சிமித்தின் அரைச்சதம் பதிவானது. 13 பந்துகளில் 10 ஓட்டங்களுடன் ஆட்டமிழந்தார் டோனி. இறுதிப்பந்துப்பரிமாற்றத்தில் 12 ஓட்டங்கள் வெற்றிக்குத் தேவை என்ற நிலை இருந்தது. முதல் பந்தில் பவுண்டரியை விளாசி ஆட்டமிழந்தார் திவாரி. அடுத்த பந்தில் சிமித்தும் ஆட்டமிழந்தார். இறுதிப்பந்தில் 4 ஓட்டங்கள் எடுத்தால் புனே வெற்றியென்ற நிலை. 2 ஓட்டங்களையே கிறிஸ்ரியன் பெற்றார். ஓர் ஓட்டத்தால் வென்றது மும்பை இந்தியன்ஸ் அணி. ஆட்ட நாயகனாக அரைச்சதம் கடந்து மும்பையின் வெற்றிக்கு வித்திட்ட குருனல் பாண்டியா தெரிவானார். (ம)

முகாமைத்துவ உதவியாளர்

போட்டிப் பரீட்சை விசேட இறுதிக் கருத்தரங்குகள்

பிரிவு I
திங்கள் தொடக்கம் வெள்ளிவரை
பி.ப. 3.00 - 6.00 மணிவரை

பிரிவு II
புதன், வெள்ளி, சனி
காலை 10.00 - 3.00 மணிவரை

யாழ்ப்பாணக்கல்லூரி பட்டப்படிப்புக்கள் பிரிவு
(யாழ். ஆஸ்பத்திரி வீதி, கொமர்ஷல் வங்கிஅருகில்)
076 688 3394
021 222 3382

மக்ஸ்வெல் சிக்சர் மழை

நடப்பு வருட ஐ.பி.எல். தொடரில் மொத்தமாக ஆயிரத்து 606 பவுண்டரிகளும், 703 சிக்சர்களும் பதிவாகின.

பவுண்டரிகளின் வரிசையில் தனிநபர் பெறுபேறுகளின் அடிப்படையில் வோர்ணர் 63 பவுண்டரிகளுடன் முதலிடத்தில் உள்ளார். அடுத்த நான்கு இடங்களில் கம்பீர் 62 பவுண்டரிகளுடன் இரண்டாம் இடத்திலும், தவான் 53 பவுண்டரிகளுடன் மூன்றாவது இடத்திலும், பார்திவ் பட்டேல் 49 பவுண்டரிகளுடன் நான்காவது இடத்திலும், திரிபதி 43 பவுண்டரிகளுடன் ஐந்தாவது இடத்திலும் உள்ளனர்.

சிக்சர்களைப் பொறுத்தமட்டில் 26 சிக்சர்களுடன் மக்ஸ்வெல் முதலிடத்தில் உள்ளார். அடுத்த நான்கு இடங்களிலும் முறையே வோர்ணர் 26 சிக்சர்களுடன் இரண்டாவது இடத்திலும், பன்ட் 24 சிக்சர்களுடன் மூன்றாவது இடத்திலும், பொலார்ட் 22 சிக்சர்களுடன் நான்காவது இடத்திலும், உத்தப்பா 21 சிக்சர்களுடன் ஐந்தாவது இடத்திலும் உள்ளனர். (ம)

அதிக இலக்குகளில் புவனேஸ்வர் முதலிடம்

நடப்பு வருட ஐ.பி.எல். தொடரில் அதிக இலக்குகளைக் கைப்பற்றிய வீரராக தன்னைப் பதிவுசெய்து கொண்டார் ஹைதராபாத் அணியின் புவனேஸ்வர் குமார்.

மொத்தமாக 26 இலக்குகளை புவனேஸ்வர்குமார் கைப்பற்றினார். 19 ஓட்டங்களை விட்டுக் கொடுத்து 5 இலக்குகளைக்கைப்பற்றியமையே சிறந்த பெறுதியாக உள்ளது. அடுத்த நான்கு இடங்களில் முறையே 24 இலக்குகளுடன் புனே அணியின் உனகட் இரண்டாவது இடத்திலும், 20 இலக்குகளுடன் மும்பை அணியின் பும்ரா மூன்றாவது இடத்திலும், 19 இலக்குகளுடன் மும்பை அணியின் மக்கலினகன் நான்காவது இடத்திலும், 18 இலக்குகளுடன் புனே அணியின் தாகிர் ஐந்தாவது இடத்திலும் உள்ளனர். (ம)

அதிக ஓட்டங்களை குவித்தார் வோர்ணர்

நடப்பு வருட ஐ.பி.எல். தொடரில் அதிக ஓட்டங்களைக் குவித்த வீரராக தன்னைப் பதிவுசெய்தார் ஹைதராபாத் அணியின் தலைவர் வோர்ணர். வோர்ணர் 641 ஓட்டங்களைக் குவித்து முதலிடத்தில் உள்ளார். கொல்கத்தா அணியின் தலைவர் கம்பீர் 498 ஓட்டங்களுடன் இரண்டாவது இடத்திலும், ஹைதராபாத் அணியின் தவான் 479 ஓட்டங்களுடன் மூன்றாவது இடத்திலும், புனே அணியின் தலைவர் சிமித் 464 ஓட்டங்களுடன் நான்காவது இடத்திலும், குஜராத் அணியின் தலைவர் ரெய்னா 442 ஓட்டங்களுடன் ஐந்தாவது இடத்திலும் உள்ளனர். முதல் ஐந்து இடங்களில் உள்ளவர்களில் நால்வர் அணித்தலைவர்களாவர். (ம)

மணிவிழா வாழ்த்து

22.05.2017 இன்று மணிவிழா காணும்
கோட்டக்கல்விப் பணிப்பாளர் (மன்னார்)

திரு.
கி.மரியான் கூஞ்ஞை

அவர்கள் எமது மன்னார் கல்விச் சமூகத்திற்கு ஆற்றிய சேவையினை நன்றியுடன் நினைவு கூர்ந்து வாழ்த்தி நிற்கின்றோம்.

வாழ்த்துவோர்,
வலயக்கல்விப் பணிப்பாளர்,
கோட்டக்கல்விப் பணிப்பாளர்கள்,
[மன்னார், நானாட்டான், முசலி] மன்னார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிக்கேசன் (பிறைவேற்) லிமிட்டடு நிறுவனத்தினால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 22.05.2017 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.